# நான்
# பேசும் இலக்கியம்



கௌசி

வெற்றிமணி: வெளியீடு - 26

# நான்

# பேசும் இலக்கியம்

கௌசி

1950

வெற்றிமணி: வெளியீடு - 26

# நூல் விபரம்


தலைப்பு : நான் பேசும் இலக்கியம்

பதிப்புரிமை : திருமதி. சந்திரகௌரி சிவபாலன்

வெளியீட்டாளர் : வெற்றிமணி

ஆசிரியர் : திருமதி. சந்தரகௌரி சிவபாலன்

அளவு : **A5**

தாள் வகை :

வெளியிடும் ஆண்டு : 2020

அச்சுப்பதிப்பு : அன்றா பிறிண்டேர்ஸ்,
379, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதிகள் : 150

ISBN NO :

பக்கம் :

# அணிந்துரை



இன்றைய ஈழத்தமிழரது வாழ்க்கையிலேற்பட்ட அதிர்ச்சியூட்டும் திருப் பங்களில் ஒன்று, சென்ற நூற்றாண்டின் எண்பதுகள் அளவில் நடந்தேறியது. அதுதான் ஈழத்தமிழரது புலம்பெயர்வுச் சிதறல்கள் ஆகும். இதனால், இவர்களது வாழ்க்கை பெரும் சிக்கல்களை எதிர்கொண்டது. எனினும், இத்தகைய சிதறல்களாலேற்பட்ட சாதகமான விடயங்களிலொன்று, புலம்பெயர்ந்த தமிழர் நவீன தமிழ் இலக்கியத்திற்கு வழங்கியுள்ள புகலிட இலக்கியங்களின் வரவு என்பதில் தவறில்லை.

மேற்குறித்த புகலிட இலக்கியங்களுள் நவீன கவிதை, சிறுகதை, நாவல், என்பனவே அதிகளவு எழுதப்பட்டும் நூலுருப் பெற்றும் வந்துள்ளன என்பதை இலக்கிய ஆர்வலர் அறிந்திருப்பர். கட்டுரைகள் எழுதப்படுவது குறைவு. இவ்விதத்திலான பெண் படைப்பாளர்களுள் நிருபா, தமிழ்நதி, முதலான சிலரே இவ்வேளை நினைவில் நிழலாடுகின்றனர். இப்போது இவ்வரிசையில் இத்தொகுப்பு நூலின் ஆசிரியரான கௌசி (சந்திரகௌரி சிவபாலன்) அவர்களும் இணைந்து கொள்கின்றார்.

இந்நூலாசிரியை அவ்வப்போது புகலிடப் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதி வந்துள்ள நூற்றுக்கணக்கான கட்டுரைகளுள் வெற்றிமணி பத்திரிகைக்கு எழுதிய பல கட்டுரைகளையும் இன்னும் சிலவற்றையும் தெரிவு செய்த தொகுப்பே இதுவாகும். இவை முற்குறிப்பிட்ட படைப்பாளிகளின் கட்டுரைகளுடன் ஒப்பிடும்போது வித்தியாசமான - தனித்துவமான - சில இயல்புகளைப் பெற்றி ருப்பது தெரிய வருகின்றது.

மேற்குறிப்பிட்டவாறான இயல்புகளுள் ஒன்று இவற்றின் பன்முகத் தன்மை யாகும். மற்றொன்று, இவை பலவும் புகலிட வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்புபடாதிருப்பதாகும். இவ்விதத்தில் இக்கட்டுரைகளின் பேசுபொருள்களுள் கணிசமானவை பழைய - இடைக்கால - நவீன இலக்கியங்களோடும் ஆளுமைகளோடும் தொடர்புபட்டிருப்பதாகும். முறையே வெள்ளி வீதியார் பாடல்கள், கம்பர், கண்ணதாசன் சார்ந்த கட்டுரைகள் இவற்றிற்கு எடுத்துக் காட் டாகவுள்ளன.

அவ்வாறெனில் இவற்றை எழுத வேண்டிய அவசியம் என்ன என்றொரு நியாயபூர்வமான கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாதது. இன்னொரு விதமாகக் கூறின், புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தாம் வாழுகின்ற நாடுகளில் தமது பண்பாட்டு அடையாளங்களைப் பேண வேண்டியது அவசியமாகின்றது. தமிழ்மொழி பயன்பாடு அவசியமற்ற இனிவரும் காலங்களில், அங்கே இருக்கின்ற புதிய தலைமுறையினர் தமது வீட்டு மொழியாக தமிழ் பேசுவதையோ - அத் தமிழ்மொழி இலக்கியங்களையோ ஓரளவாவது அறிவதற்கு இத்தகைய கட்டுரைகளின் வரவு அவசியமானதாகக் காணப்படுகின்றது. அல்லாவிடின் மொறிசியஸ் போன்ற தீவுகளில் இன்று வாழ்ந்து வருகின்ற எம்முடைய முகவரிகளற்றுப் போய்விட்ட தமிழ் சமூகத்திற்கு நேர்ந்துள்ள கதியே இந்நாடுகளிலுள்ள தமிழ்ச் சமூகத்திற்கும் ஏற்படுவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

இத்தொகுப்பிலுள்ள இன்னொரு விதமான கட்டுரைகள் புகலிடத் தமிழரது பொது வாழ்க்கை வளம் பெறுவதற்கு வழிகாட்டுகின்ற வழிமுறைகள் பற்றிய னவாக உள்ளன. அவை எவை என்பதனை அவற்றை வாசிக்கும் போது நீங்களே அறிந்து கொள்வீர்கள்.

வேறுசில கட்டுரைகள் ஜனரஞ்சகமான தலைப்புடன் விளங்குகின்றனவாக வெளிப்பட்டாலும் உயர் சிந்தனைக்கு ஆற்றுப்படுத்துகின்றன. "புலவனுக்கு மதம் என்பது ஆண்பெண் காதலே", "நெஞ்சம் மட்டும் பேசும் காதல்" முதலியனவாகும். தமிழில் வாசிப்பு நாட்டங்குன்றியுள்ள புதிய தலைமுறையினரை இலகுவில் கவரக் கூடிய விதத்திலான இயல்புகளையும் இக்கட்டுரைகள் பெற்றுள்ளன. இதனாலேயே இக்கட்டுரைகள் பலவும் நீட்சி பெற்றனவாக அமையாது குறுகிய வடிவத்தில் அமைந்திருக்கின்றன.

இக்கட்டுரைகளின் தலைப்புக்களும் ஈர்ப்புள்ளனவாகத் திகழ்கின்றமை கவனத்திற்குரியது. “நாட்டிலுள்ள விஷத்தை எல்லாம் நான் குடிக்க வைத்து விட்டான்” “வாழ்க்கை என்பது வழுக்கையா?” போன்றன இத்தகையன.

ஆக புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள - இங்கிருந்து சென்ற மூத்த தலைமுறை யினருக்கு அவர்கள் முன்பு படித்து அறிந்து கொண்ட விடயங்களை ஞாபகப் படுத்துவதான அல்லது இலக்கிய அறிவைப் புகட்டுவனவாக இவை காணப்படுகின்றன. அங்கு உருவான புதிய தலைமுறையினருக்கு, ஓரளவாவது தமிழிலக்கிய சிறப்புகளை - ஆளுமைகளை- அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. இந்நூலினை பதிப்புக்குக் கொண்டு வரும் வெற்றிமணிப் பத்திரிகையின் ஆசிரியரும் பாராட்டுக்குரியவர்.

தொடரட்டும் இப்பணி . வாழ்த்துகளுடன்

**பேராசிரியர் செ.யோகராசா எம்.ஏ, பி.எச்.டி**
முன்னாள் மொழித்துறை கலாசாரப்பீடப் பேராசிரியர்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

# பதிப்புரை



இலங்கையில் முதல் முதல் வெளிவந்த சிறுவர் மாத சஞ்சிகை வெற்றிமணி. இச் சஞ்சிகை 1950 ஆண்டு நாவலப்பிட்டியில் இருந்து அமரர்.மு.க.சுப்பிரமணியம் (குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியால முன்னாள் அதிபர்) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு அன்னாரது மறைவிற்குப்பின் வெற்றிமணி ஒலிக்காது போனது. 1994 ஆண்டு யேர்மனியில் வசிக்கும் என்னால் (அன்னாரின் புதல்வன்) வெற்றிமணி புத்துயிர் பெற்றுக் காலம், நேரம், இடம், கருதி வெற்றிமணி சஞ்சிகை பத்திரிகையாக வெளிவர ஆரம்பித்தது. 2019 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் வெள்ளிவிழாக்கண்ட முதல் பத்திரிகை என்ற முத்திரையும் பதித்தது.

வெற்றிமணிக்கு நீண்ட வெளியீட்டுப் பாரம்பரியம் உண்டு. வெற்றிமணி 1950 முதல் தனது பணியை சஞ்சிகை, பத்திரிகை என மட்டும் தொடராது, ஆற்றல் மிக்க படைப்பாளிகளது படைப்புக்களை வெளியீடு செய்தும் மகிழ்ந்தது.

அன்று எனது தந்தையார் இரசிமணி கனக செந்தில்நாதன், கவிஞர். வி.கந்தவனம், டாக்டர் நந்தி, ஆசிரியர் சிவஞானசுந்தரம், கலைப்பேரரசு எ.ரி.பொன்னுத்துரை எனப் பலரது மாணவர்களுக்கான படைப்புக்களை வெளியீடு செய்து பெருமை கொண்டார். இன்று வெற்றிமணி தந்தையின் வழியில் யேர்மனி, கனடா, இலங்கை எனப் பல நாடுகளில் வசிக்கும் ஆற்றல் மிகு எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியீடு செய்து வருகிறது.

அந்த வகையில் இன்று வெற்றிமணி தாயகத்தில் ஆரம்பித்து (1950-2020) 70 ஆண்டுகளை நிறைவு செய்யும் வேளை வெற்றிமணியில் வெளிவந்து வாசகர் மனங்களை வென்ற கட்டுரைகள் சிலவற்றை நூலாக்கம் செய்யலாம் என்று எண்ணியபோது முதலில் திருமதி சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) அவர்களது கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து வெளியிடலாம் என எண்ணினேன்.

நீண்ட காலமாக இலக்கிய உலகில் பவனி வரும் கௌசி அவர்களை அவர்களது நூலான முக்கோண முக்குளிப்பின் போதே என்னால் கண்டு கொள்ள முடிந்தது.

கண்ட நாள் முதலாய் அவர் எழுத்தில் காதல் கொண்டேன். வெற்றிமணிக்கு எனச் சில விதி முறைகளை வகுத்து அதன் வழி பயணித்தும் வருகின்றேன். சுருக்கமாக தான் சொல்ல வந்த கருத்தை எளிமையாகச் சொல்லும் நடைமுறை நம் முறையாக இருந்தது.

அத்துடன் இலக்கியத்தை இலக்கியமாக இயக்காமல் சமூகம் சார்ந்த இலக்கியமாக கைகோர்த்து இயங்கவைக்கவேண்டும் என்பது எனது வேண்டுதலாக அமைந்தது. எதனைக் கேட்டாலும் அதனை ஓரவஞ்சனை இன்றி அள்ளிக்கொடுக்கும் அளவிற்கு அவர்களிடம் இருப்புப் இலக்கியத்தில் மிதமாகவே இருந்தது.

அவர் தரும் கட்டுரைகளில் நான் எதனையும் மாற்றம் செய்ததாக நினைவில்லை. தலைப்புகள் மட்டும் என் விருப்பப்படி அவரது ஒப்புதலுடன் மாற்றி வந்திருக்கலாம்.

அவருக்கு உச்சத்தில் உள்ள இலக்கிய வட்டம் இலக்கு என்றால், எனக்கு பக்கத்தில் உள்ள வாசகனே இலக்கு. இலக்கியத்தை முறையாக பிரசவிக்க அவர் எடுத்த முயற்சியாக அது இருக்கலாம். என்னதான் இருந்தாலும் ஒரு பத்திரிகை ஆசிரியனாக என்போக்கிற்கு எந்த வகையிலும் தொந்தரவு தராமல் வெற்றிமணியின் நிறைந்த படைப்பாளியாக தன்னை வெற்றிமணிக்குள் ஒலிக்கவிட்டது அவரது பெருந்தன்மையைக் காட்டுகின்றது. சில பேரிடம் தான் நாம் கேட்டுப் பெறலாம். அதுமட்டுமல்ல கேட்டதும் நிறைவாகக் கிடைக்கும்.

வெற்றிமணி வெளியீடுகளாக இதுவரை சிறந்த படைப்பாளிகளது படையல்களே பரிமாறப்பட்டது. அந்த வகையில் கௌசியின் படைப்புக்களும் அமையும் என்பது திண்ணம்.

இலக்கியத்தில் வரும் பாடல்களை இன்றைய சமூகத்துடன் தொடர்புபடுத்தி அதனைத் தொடுக்கும் இடம் பல ஆறுகள் ஒன்றாகும் சங்கமம் போல் அழகாக அருமையாக இருக்கும். இவரது கட்டுரைகளை வாசிக்கும் போது அந்த அழகை அணுவணுவாக அனுபவித்து இரசித்துள்ளேன். அவரின் எழுத்திற்கு (வெற்றிமணி) முதல் வாசகன் நான். நான் வாசித்த பின் தான் அச்சுக்குப் போகும். அதுகூட எனக்கு மகிழ்ச்சி தான்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப்படிப்பை முடித்தவர். அந்த மலையகச் சூழல் அப்படியே இவருக்கு எழில்மிகு தமிழையும் அள்ளிக் கொடுத்துள்ளது.

துணிச்சல் மிக்க பெண்மணி என்று சொல்லலாம். துணிச்சல் என்று நான் கருதுவது இங்கு பன்முக ஆற்றலை. இந்த ஆற்றல் கட்டுரைகளிலும் விரிந்துகிடக்கிறது.

நான் பேசும் இலக்கியம் எனும் இந்நூல் வெற்றிமணியின் 26 வது வெளியீடாக வருவதை தமிழ் இலக்கிய உலகம் மகிழ்ந்து வரவேற்கும் என்பது திண்ணம்.

கணனியில், இணையத்தில், முகப்புத்தகத்தில் ஆயிரம் படைப்புக்கள் வந்தாலும் முகம்பார்த்து பேசுவது போல இருப்பது நான் பேசும் இலக்கியமே.

"என்றும் தமிழுடன்"

**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A
பிரதம ஆசிரியர் வெற்றிமணி, சிவத்தமிழ் யேர்மனி - இங்கிலாந்து.
Vettimaniy Ltd UK
Publishing of newspapers
120, Milton Keynes Business Center Hayley Court,
Linford Wood, Milton Keynes, England,

# **கௌ**ரவிக்கின்றேன் **சி**ற்பியை



**ச**ரஸ்வதி தேவியே வந்து சஞ்சாரம் செய்தாற் போல்.
**இந்**த உலகில், எங்கள் தமிழில், சிங்கப் பெண்களின்
**தி**றனை பிறர் கண்களறியச் செய்யும், நவநாகரீக
**ர**சனையும் மிகுந்த பெண்ணே! இந்த சிங்கப் பெண்
**கௌ**சி என்பதில் நான் 100 விழுக்காடு உறுதி. இவள்
**ரி**ஷபமாய் பாய்ந்து தகர்த்திடுவாள் தன் தடைகளை.

எழுத்தாளர், பேச்சாளர், சிறந்த சிந்தனையாளர்,
தமிழ்ச்சுடர் சந்திரகௌரி சிவபாலன் அவர்களே!

**சி**ரித்துப் பேசும் சின்னப் பெண்ணே, சிந்தனை வள ஔவைப் பெண்ணே,
**வ**ட்ட முக வசந்த அமுதே, நெஞ்சைத் தொட்டதுந்தன் தொன்மைத் தமிழே.
**பா**தம் பதிக்குமுன் பன்முகத் திறனும், பார்வையில் நேர்மையும் கொண்டு.
**ல**யமாக பயணம் செய்யுமுன் கலைப்பயணம், பல தலைமுறைகள் பேசும்.
**இன்**னல்கள் தாண்டி வந்தவளே, என்றும் இன்முகத்தோடு உள்ளவளே, தமிழன்
சிவபாலனின் பத்தினியே பாராட்டுகின்றேன் உன்னையும் துணையையும்.

வேலுப்பிள்ளை பெற்றெடுத்த வீரப்பெண். எட்டி விண்தொடும் விவேகப் பெண்.
ஊரிலே தமிழ் கற்று, கற்பித்து, உப்பிட்ட தமிழ் மண்ணைச் சிறப்பித்த பெண்.
உன்னகத்தில் உள்ளதெல்லாமுன் புத்தகத்திலும் இருக்கும். அதிலும் சிறந்த பெண்ணியத்தைப் பேசும் போதும் ஆணை, அந்நியமாக்காமல் பேசும்
கண்ணியமே உன் பெண்ணியம்.

வளமான தமிழிற்கு வார்த்தைகளே முக்கியம். உன் இதமான சொற்களே வாசகனின் பாக்கியம். இந்நூலில் வடம் செய்து, தமிழ் என்ற கடவுளை, ஊடகத் தேரினில் ஊர்வலமிழுக்கும் கௌசியை கௌரவிக்கின்றேன் நான்.

**சிந்தனை சிவ.வினோபன்.**
தமிழ் எழுத்தாளர்,
பேச்சாளர், நடிகர்.

# என்னுரை



"கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே" என்று பகவத் கீதை வலியுறுத்து கின்றது. கால ஓட்டத்தில் நாம் கடந்து வரும் பாதையில் காணுகின்ற விடயங்கள் அத்தனையும் எம் மனதுக்குள் ஒரு உறுத்தலைத் தந்து கொண்டிருக்கும். கற்றவை அனைத்தும் மூளைக்குள் பதியமிடப்பட்டிருக்க காண்பவை அனைத்தும் எம்மை அவற்றுடன் ஒப்பிட்டு பார்க்கச் செய்கின்றன. சமூகத்திற்கு எது தேவையோ அத்தேவையை ஏதோ வகையில் நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கின்றது. சமூகத்ததைச் சிந்தித்த திருவள்ளுவர், மகாகவி பாரதியார் போன்றோரே இன்று காலங்கடந்தும் பேசப்படுகின்றார்கள் என்பது திண்ணம். தேவையானவை சொல்லப்படுகின்ற போது அதற்குக் கைதேர்ந்த வழிகளே துணைப்போகின்றன. அந்த வகையிலே என்னுடைய கட்டுரைகளில் பல பழந்தமிழ் இலக்கியங்களைக் காவி வந்திருக்கின்றன.

மனதை வசியப்படுத்தும் சக்தி அன்பான மனங்களுக்கும், இசைக்கும், மலர்களுக்கும், எழுத்துக்களுக்கும் உண்டு. அன்பான மனம் என்னுடைய எழுத்துக்களுக்குள் இசைந்ததனால், இன்று இந்த மலர் மணம் வீசுகின்றது. மாதம் தவறாமல் வெற்றிமணி பத்திரிகைக்காக ஒரு கட்டுரை என்னைக் கேட்காமலே என் மனம் எழுதத் தொடங்கிவிடும். இதற்குக் காரணம் அப்பத் திரிகையா? இல்லை பத்திராதிபதியா? என்று கேட்டால், அவ்விரண்டுமே என்று தான் சொல்வேன்.

வெற்றிமணி பத்திரிகையின் வனப்பும் வடிவும் என்னைக் கவரும். எந்த ஒரு விடயமானாலும் அதற்கு உள் இழுக்கும் சக்தி இருக்க

வேண்டும் அல்லவா. அந்த வகையிலேயே என்னை உள் இழுக்கும் சக்தி இப்பத்திரிகைக்கு உண்டு. என்னுடைய ஈர்ப்பு சக்தி ஒரு புறம் இருக்க வெற்றிமணி, சிவத்தமிழ் ஆசிரியர் டாக்டர். மு. க. சு. சிவகுமாரன் அவர்களின் நற்பண்பு என்னைத் தட்டி எழுப்பி விடும்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஒரு வருடம் விண்வெளி ரொக்கட்டை மிஞ்சிப் பறந்து விடுகின்றது. இணைய உலகம் மனிதர்களை ஆட்டிப் படைக்கின்றது. மனிதர்களோ இதைச் செய்வோமா அதைச் செய்வோமா, புத்தகம் படிப்போமா, வீடியோ பார்ப்போமா, ஓடியோ கேட்போமா, அதுவும் ஒரு நிமிட வீடியோ பார்ப்போமா என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றார்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைக்க ஒரு பக்கக் கட்டுரையே போதும் என்று ஆசிரியர் கேட்பார். எனவே எனக்குள் எழும் சிந்தனைகளின் சிறகுகளை சுருக்கிக் கொள்வேன். வீட்டுக்குள் இருந்து கொண்டு சிறிய துளையூடாக இந்தப் பெரிய உலகத்தைப் பார்க்கின்றேன். அதனாலேயே இக்கட்டுரைகள் சுருக்கமானவைகளாக அமைந்திருக்கின்றன. வெற்றிமணி பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரைகளுடன் 3 வேறு கட்டுரைகளுமே இந்நூலுக்குள் அடங்கியிருக்கின்றன.

இந்நூலின் முன்னட்டைப் படத்தையும் வடிவமைத்து இந்நூலை வெற்றிமணி வெளியீடாக வெளியிடுவதற்கான முழு முன்னெடுப்புக்களையும் தானே முன்வந்து செய்கின்ற வெற்றிமணி ஆசிரியர் டாக்டர். மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் பெருந்தன்மைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் கேட்டுக் கொண்டமைக்கமைய மறுப்புத் தெரிவிக்காமல் இந்நூலுக்கு அணிந்துரை தந்து அணி செய்கின்ற மதிப்புக்குரிய பேராசிரியர் யோகராஜா அவர்களுக்கும் மிக்க நன்றி.

வயதில் சிறியவராக இருந்தாலும் தமிழில் ஆழ்ந்த ஞானம் பெற்று ஜேர்மனியில் எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வலம் வந்து கொண்டிருக்கின்ற இளம் எழுத்தாளர் சிவவிநோபன் அவர்கள் அழகாக என்னைப் படித்து எனக்கு வாழ்த்துரை தந்திருக்கின்றார். அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலை அச்சடித்து உதவிய அன்ட்ரா பிரின்டர்ஸ் இற்கும், வழமைபோல் என் மலர் இலங்கையில் அச்சடிக்கப்படும் போது அதனை மேற்பார்வையிட்டு சகல பொறுப்புக்களையும் கையேற்று என் கைவசம் நூல் கிடைப்பதற்கு வழி செய்து உதவுகின்ற கா.ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்) அவர்களுக்கும், மலருக்குள் மொய்க்கின்ற தேனியாய் இலக்கியங்களுக்குள் நுழைந்திருக்கின்றேன். அவற்றை பொறுமையோடு இரசிக்கப் போகின்ற வாசக நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள் சென்றடைகின்றன.

விரிகின்ற பக்கங்களில் என் இதயத் தெளிவு பதிந்திருக்கும்
வார்த்தைகளின் படையலுக்குள் மூளைச் சலவை புதைந்திருக்கும்

வலியில்லாத வரிகளும் வந்து விழும் சொற்களும் சிந்தனையைச் சுமக்கும் – இந்த நூலின் சுவைகளை பகிர்ந்து நீங்கள் இன்புற என் மனம் களித்திருக்கும். நீங்கள் சுவைத்த வரிகளை உங்கள் மூலம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நான் .

உங்கள்
**சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)**
Felder str 56
42651 Solingen
Germany
4917676867323

# புலமைக் காய்ச்சலும் பாய்ச்சலும்

**உ**லகத்தில் போட்டி இல்லாத வாழ்க்கை எங்குமே இல்லை. உணவுக்காக மிருகங்கள் போட்டி போட்டுக் கொள்ளுகின்றன. புகழுக்காகவும் பெருமைக்காகவும் மனிதர்கள் போட்டி போட்டுக் கொள்ளுகின்றார்கள். போட்டி என்பது ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அது பொறாமையாக மாறும் போது மனங்களுக் கிடையில் பிரிவுகளை ஏற்படுத்துகின்றது. அறிவும், ஆய்வுகளும் மனங்களின் வேற்றுமைகளை மாற்றிவிடும். காலம் ஒரு நாள் மாற்றும் என்பது கோட்பாடு. ஆனால் இக்கலைஞர்கள், எழுத் தாளர்கள் மத்தியில் மட்டும் இக்கோட்பாடு பிழைக்கின்றது. புகழுக் காகப் போட்டியும் பொறாமையும், வித்துவச் செருக்கினால் போட்டி, அன்று பொன்னுக்கும் பொருளுக்கும் பொய்யுரைத்தல் என்று இலக்கிய உலகம் எழுத்தாளர்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

எழுத்தாளர்களிடம் போட்டி என்பது இன்று நேற்று வந்ததல்ல. அன்றும் இருந்திருக்கின்றது. அக்காலத்திலும் புலவர்களிடையே போட்டியும் பொறாமையும் இழையோடிக் காணப்பட்டன. ஔவையும் கம்பரும், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் ஒருவருக் கொருவர் போட்டியாக வாழ்ந்துள்ளார்கள். திறமைகள் போட்டியிடுவது ஆரோக்கியம். ஆனால், திறமையுடன் போட்டியிட தயக்கம் தேவையல்லவா! சங்ககாலத்திலே வாழ்ந்த சீத்தலைச் சாத்தனார் என்னும் ஒரு புலவர் தான் எழுதும் பாடல்களிலே அல்லது பிறருடைய பாடல்களிலே குற்றங்களைக் கண்டுவிட்டால், தன்னுடைய எழுத்தாணியால் தன்னுடைய தலையில் குத்திக் கொள்ளுவாராம். இதனால், தலையில் ஆங்காங்கே சீழ் பிடித் திருக்கும். சீழ்தலைச் சாத்தனார் என்பது மருவி சீத்தலைச் சாத்தனார் என்று அவர் பெயர் வழங்கப்பட்டது.

பிறர் தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அல்லது சொல்ல முடியாத இடத்தில் நமக்கு நாமே தலையில் அடித்து என்ன கருமம்டா என்று சொல்வோமே அதுபோலவேதான் சீத்தலைச் சாத்தனார், எழுத்தாணியால் தன்னுடைய தலையில் குத்தித் தமிழிலில்

01

காணும் தவறுக்குத் தனக்குத் தண்டனை கொடுக்கின்றார். இங்கு தவறு விடுபவர்கள் குற்றத்தால் கூனிக்குறுகிப் போகின்றனர்.

கம்பரும் ஔவையும் சிறந்த போட்டியாளர்கள். ஒருமுறை ஔவையார் குலோத்துங்க சோழன் அவைக்குச் செல்கின்றார். அவர் தமிழ் கேட்க ஆசை கொண்ட அரசன் அவரைப் பாராட்டி உபசரித்தான். இதைப் பொறுக்காத கம்பரும் தற்காலத்திலே அவரை மட்டும் ஏன் புகழ்கின்றார்கள். அவரிடம் என்ன இருக்கின்றது அவரை விட நாம் எவ்வளவு மேலானவர்கள் என்று நினைப்பவர்களைப் போலவே கம்பரும் "நான் சொல்லுகின்ற ஒரு அடியிலே உள்ள பொருள் என்னவென்று கண்டு ஒரு பாடல் பாடவேண்டும். என்று ஔவையாரிடம் கேட்கின்றார். குலோத்துங்கன் சோழத்து ஆஸ்தான கவி அல்லவா கம்பர். ஔவையும் அவர் வேண்டுகோளுக்குச் சம்மதிக்க

"ஒரு காலடீ நாலிலைப் பந்தலடீ" என்று வரி கொடுத்தார். அதாவது

ஒரு தண்டிலே 4 இலைகள் கொண்டுள்ள ஆரைக்கீரையைப் பொருளாகக் கொண்டு பாடினார். அடீ என்ற வார்த்தை ஔவையை நாகரிகம் அற்ற முறையில் விளிப்பதாக ஔவைக்குப்படுகின்றது. அந்தளவில் பொறாமை கம்பர் மனதுக்குள் இருந்தது. உடனே ஆத்திரம் கொண்ட ஔவையும்

"எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டிற் பெரியம்மை வாகனமே முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயது"

என்று பாடினார். எட்டு என்றால் தமிழ் எண் அ வைக் குறிக்கும். கால் (1/4) என்பது தமிழ் எண் வ என்று குறிக்கும். எனவே எட்டேகால் இலட்சணமே என்றால், அவலட்சணமே.

எமனேறும் பரி எருமை என்பது யாவரும் அறிந்ததே
பெரியம்மை என்பது மூதேவி. அவரின் வாகனம் கழுதை
கூரையில்லா வீடு குட்டிச்சுவராகும்.
இராமனின் தூதுவன் குரங்கு

ஆரையடா சொன்னாயது என்றால் ஆரைக்கீரையை நீ சொல்லியிருக்கின்றாய் என்று பாடினர். கம்பரும் வெட்கித்துப் போகின்றார். இதைக் கம்பருக்குச் சுடும் வண்ணம் சிலேடையாக தன்னை அடீ என்றாய் யாரையடா நீ என்று ஔவையார் கம்பருக்குப் பாடி முடித்தார்.

அவலட்சணமே, எருமையே, மூதேவியே, குட்டிச்சுவரே, குரங்கே ஆரைக்கீரையை நீ சொல்லியிருக்கின்றாய் என்று அவர் பாடிய

ஒருவரிப் பாடலின் பொருளை அறிந்து உடனே பாடினார்.(ஔவையார் தனிப்பாடல்கள் – புலியூர்க்கேசிகன்)

குட்டு வாங்கினாலும், மோதிரக் கையால் வாங்க வேண்டும் என்னும் பழமொழி சொல்வார்கள். இங்கு போட்டி கூட ஆரோக்கியமாகவேபட்டது. கம்பருக்குச் சுட்டது. தமிழார்வலர்களுக்கு இனித்தது. இவ்வாறு போட்டி போடவும் தகுதி வேண்டுமல்லவா?

தரமான படைப்பாளிக்குத் தலைக்கனம் இருப்பது இயற்கை. ஆனால், இது தவறு என்று வாதிடுவோரும் உண்டு. இங்கு இருவரைப் பார்ப்போம். ஒருவர் கம்பர். அவர் தலையில் கனம் மிக்கவர். மற்றையவர் கம்பர் காலத்து ஔவையார். கூழுக்குப் பாடி என்று கம்பரால் அழைக்கப்படுபவர்.



ஒரு சமயம் சிலம்பி என்னும் ஒரு விலைமகள் கம்பனிடம் ஒரு கவி புனைந்து தரும்படிக் கேட்டாளாம். ஆயிரம் பொன் தந்தால் கவி கிடைக்கும் என்று கம்பர் கூறினார். என்னிடம் ஆயிரம் பொன் இல்லை ஐந்நூறு பொன்னே உள்ளன என்று சிலம்பி கூறியிருக்கின்றாள். இப்பொன்னைப் பெற்றுக் கொண்ட கம்பர்

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே

என ஒரு வெண்பாவை அரைவாசியாகப் பாடிவிட்டு ஐந்நூறுக்கு இது

சரியாகிவிட்டது என்று அவ்வெண்பாவை முடிக்காமல் சென்றுவிட்டார். இப்பரத்தை அப்பாடலைக் கொண்டு அடுத்தநாள் ஔவையாரை கண்டபோது இப்பாடலை முடித்துத் தாருங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டாள். ஔவையும்

........................................................பெண்ணாவாள்.
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.
எனப்பாடி முடித்துப் பழங்கஞ்சி வாங்கிக் குடித்துவிட்டுச் சென்றாராம்.
“தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே - பெண்ணாவாள்.
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு”
*(ஔவையார் தனிப்பாடல்கள் - புலியூர்க்கேசிகன்)*

இங்கு கம்பர் பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு அச்சிலம்பியை உதாசீனப்படுத்தினார். ஒரு பெண்ணின் ஆசையை பெரிதாகக் கருதிய ஔவையார் கம்பருக்குப் போட்டியாக அவள் ஆசையைத் தீர்த்து வைத்தார். இச்சம்பவம் நம் மத்தியில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. கவிச்சக்கரவர்த்திக்குத் தலைக்கனம் வருவது இயற்கையானால், தற்போது தகுதியற்றோருக்குக் கூடத் தலைக்கனம் வருவதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பொன்னையும் பொருளையும் மன்னர்கள் அள்ளி வழங்குவதற்காக, அவர்கள் புகழை மிகைப்படுத்திப் புலவர்கள் பாடியிருப்பது யாவரும் அறிந்ததே. இந்நிகழ்வு இன்று மட்டுமல்ல அன்றும் பணத்துக்காக தம் பெருமைகளை நிலைநாட்டிக் கொண்ட புலவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.

ஒரு இடத்தில் இரட்டையர்கள் பாடுகின்றார்கள்.
குன்றுங் குழியுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ ஒன்றுங்
கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறின்
இடாதோ நமக்கிவ் விடர்.

பரிசில்கள் யாதொன்றும் வழங்காத மன்னனை யாம் புகழ்ந்து பாடிய தனாலேயே இவ்வாறான நிலைமை எமக்கு ஏற்பட்டது என்று பாடினார்கள். இவ்வாறே ஔவையாரும் ஒரு இடத்தில்

“கல்லாத ஒருவனையான் கற்றாய் என்றேன்
காடேறித் திரிவானை நாடா என்றேன்

பொல்லாத ஒருவனையான் நல்லாய் என்றேன்
போர்முகத்துக் கோழையையான் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் தேம்பற் றோளை
வழங்காத கையனையான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே!

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு பரிசில்கள் பெறுவதற்காக மன்னர்களைப் பலவாறாகப் புகழ்ந்து பாடிப் பொன்னையும் பொருளையும் பெற்றுக் கொண்டு சென்ற புலவர்கள் பாடிய பாடல்கள் அக்காலச் சூழலை எடுத்துக் காட்டும் கண்ணாடி என எப்படி நாம் எடுத்துரைப்பது. இக்காலத்திலும் தமது புகழுக்காக தகுதியற்றோரைப் புகழும் வழக்கம் இருக்கின்றது அல்லவா?

இக்காலத்திலும் எழுத்தாளர்களிடையே போட்டியும் பொறாமையும், எழுத்துக் களிடையே காணப்படும் தவறுகளைச் சுட்டிக் காட்டமாட்டாமல் புகழ்வதும், தமிழின் இலக்கண மரபுகளுக்கு பங்கம் ஏற்படும் எழுத்துக்களைக் கண்டுகொள்ளாமல் தமிழாராய்வாளர் வாய் மூடியிருப்பதுவும் தமது பாராட்டுக்களுக்கும், புகழுக்கும் பங்கம் வந்துவிடும் என்னும் சுயநலமே ஆகும். இச்செயலும் அக்காலப் புலவர்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் தூற்றிப் பாட வேண்டிய இடங்களில் போற்றிப் பாடிய செயலுக்கு ஒப்பாக அமைகின்றன. தவறுகளைச் சுட்டிக்காட்டும் தைரியம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அப்போதுதான் எழுத்துக்களில் தூய்மையைக் கொண்டுவர முடியும். இதற்குப் பொறாமை என்ற அர்த்தமில்லை. செயலிலே நல்ல உணர்வுகள் விதைக்கப்படும்.

(வெற்றிமணி ஆவணி மாத இதழ் 2019)

**மொ**ழி உணர்வு என்பது கட்டமைக்கப்படுவதுதானே அன்றி இயற்கையான ஒன்றல்ல. மொழி என்பது ஒரு பரிமாற்று ஊடகம், தொடர்பாடல் ஊடகம் என்பதை மறந்து விடல் கூடாது. தனித்தமிழ் என்று கூறி மொழியைக் கடினப்படுத்துவது மொழி அழிவதற்கான காரணமாகிவிடுகின்றது. இங்கு மொழி இலக்கணம் காப்பாற்றப் படுகின்றது. மொழியைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுகின்றது.

உலகத்தைக் கையில் கொண்டு ஒரு துறையில் உள்ளவர்கள் தமது துறையில் உள்ளவர்களை நாடி உலகமெங்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்றார்கள். ஒரு நாட்டு ஆண் வேறு நாட்டிலுள்ள வேற்று மொழி பேசும் பெண்ணுடன் தொடர்பை ஏற்படுத்திக் காதல் கொள்ளுகின்றான். Youtube, Twitter, Instergram, Skype, Facebook, Messenger, Whatsapp, viber போன்றவை மூலம் பல்வேறுபட்ட மொழி பேசுபவர்கள் பல்வேறுபட்ட மொழி பேசுபவர்களுடன் தொடர்பில் இருக்கின்றார்கள். இவ்வாறு தனிமை, தனித்தியங்குதல் என்பது இக்காலகட்டத்தில் கேள்விக் குறியாக இருக்கின்றது. கலை, கலாசாரம், மொழி அத்தனையும் கலந்துபட்ட காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டி ருக்கின்றோம்.

அடுத்த தலைமுறையில் எமது மொழி வாழுமா? என்ற கேள்விக்குறியுடன் உலக நாடுகளெங்கும் பரந்து வாழும் நாம். எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு எமது மொழியைப் போதிப்பது அவசியமாகின்றது. மொழியைத் தவிக்க விட்டுவிட்டு மொழிக்கலப்பு பற்றிப் பேசுவது அபத்தமாக இருக்கின்றது.

**02**

ஆணும் பெண்ணும் கலந்தால் ஒரு உயிர், நாடுகள் கூட்டுச் சேர்ந்தால் பொருளாதார வளம். மொழிகள் கலந்தால்

மொழி வளம். இனங்கள் கலக்கின்றன. கலாசாரங்கள் கலக்கின்றன. மொழியைக் கட்டிக் காக்க வேண்டிய தமிழரே, தமது பிள்ளை களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்காது அவர்களுடன் தமிழ் மொழியே பேசாது. தமிழ் மொழி வேற்று மொழிகளுடன் இணைகின்றது என்பதில் கவலைப்படுவதில் நியாயமில்லை.

வெவ்வேறு மொழி பேசுகின்ற பெண்களையோ ஆண்களையோ திருமணம் செய்யும் போது எமது மொழி வாழும் என்றால், அம்மொழி திருமண பந்தத்தின் போது பகிரப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஒரு தமிழ்மொழி பேசும் பெண், ஒரு ஆங்கில மொழி பேசும் ஆணைத் திருமணம் செய்கின்றபோது தமிழ்மொழி ஆங்கிலமொழி பேசும் ஆணுக்குக் கற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் தமிழ்மொழி வளம் பெற சாத்தியம் இருக்கின்றது. மக்களுக்காகவே மொழி. மொழிக்காக மக்கள் இல்லை.

கால ஓட்டத்தில் கலந்து வந்த மொழிச் சேர்க்கை:

படையெடுப்பு, வியாபாரம், அயல்நாட்டு தொடர்புகள் மொழியில் மாற்றங்களை ஏற்படுத்துவது இயற்கை. மொழி உணர்வு என்பது கட்டமைக்கப்படுவதுதானே அன்றி இயற்கையான ஒன்றல்ல.

ஆரியம் தமிழ்மொழியில் கலந்திருந்தது என்பதற்கு பல ஆதாரங்கள் தொல் காப்பியர் காலத்திலும் இக்காலத்திலும் காணப்படுகின்றன.

"வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்தல் சொல்லாகும்"

வடசொல்லைத் தமிழில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தொல் காப்பியர் விளக்கியிருக்கிறார். ஆரியத்திற்கு உரிய எழுத்தை விடுத்து ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்தில் அமைக்கப்படும் சொல் என்று விளக்கியிருக்கின்றார். எமக்குக் கிடைக்கின்ற முதல் தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம் அதில் வடமொழி தமிழில் கலந்திருந்தமையை இதன் மூலம் அறியக்கிடக்கின்றது.

அதேபோல் நன்னூலில்
"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" என்று சொல்லப்பட்டிருக்கின்றது .

காலமாற்றத்திற்கேற்ப மொழியில் மாற்றம் ஏற்படுவது இயற்கை. அது ஆரோக்கியமும் கூட. சங்க காலத்திலே யவனர் என்ற சொல் வழக்கில் இருந்தது. வியாபார நோக்கில் அந்நிய நாடுகளில் இருந்து தமிழகம் புகுந்த கடல்வழி பயணிகள் தமது மொழிச் சொற்களை விதைத்தமையுடன் என் மொழிச் சொற் களையும் கொண்டு சென்றிருக்கின்றார்கள் என்பது உண்மையே.

| | | |
|---|---|---|
| மாங்காய் | - | Mango (ஆங்கிலம்) |
| மண்வெட்டி | - | Mametti (ஒல்லாந்தர் மொழி) |
| தாங்கி | - | Tank (ஆங்கிலம்) |
| வெற்றிலை | - | Betel (ஆங்கிலம்) |
| ஊர்உலா | - | Urlaub (ஜேர்மன் மொழி) |

அதேபோல் சங்கம் மருவிய காலத்தில் ஏராளமான சொற்கள் தமிழில் வந்து கலந்தன.

பல்லவர் காலத்திலே மதங்களின் ஆட்சி மேலோங்கி இருந்த போது ஆரியர் வழிபாட்டுச் சொற்கள், பொருட்கள் தமிழர்களிடையே கலந்தன. வடமொழி கலந்த உரைநடை இக்காலத்திலேயே வந்துவிட்டது. உதாரணமாக களவியல் உரையை நோக்கலாம். ஆரியச்சொற்களின் ஆட்சிக்கு எதிரான போக்கிலே தமிழின் மேன்மையை எடுத்துணர நற்றமிழ் ஞானசம்பந்தன், தமிழ் மூவர் என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டன.

வீரசோழியம் என்னும் வடமொழி நூல் தமிழில் எடுத்தாளப்பட்டுள்ளது. நேமிநாதம், தண்டியலங்காரம், யாப்பெருங்கலக்காரிகை, போன்ற நூல்கள் வடமொழி இலக்கண மரபைத் தழுவி எழுதப்பட்டன.

காவ்ய என்னும் வடமொழிச்சொல்லே காப்பியம் என தமிழ்மொழியில் வழங்கப்பட்டது. தண்டியலங்காரத்தில் காவிய மரபு பேசப்பட்டுள்ளது.

நாயக்கர் காலத்தை எடுத்து நோக்கும்போது ஆசானும் அகராதியும் துணை செய்தாலன்றி உட்புக முடியாத இரும்புக்கோட்டையிலானது நாயக்கர் காலப் பாடல்கள் என நாயக்கர் கால இலக்கியப்போக்கு காணப்படுகின்றது. அருணகிரிநாதருடைய பாடல்களில் மணிப்பிரவாளநடையினைக் காணலாம். "வாலவ்ருத்த குமரனென சில வடிவங்கொண்டு....' என்னும் பாடலினை உதாரணத்திற்கு எடுத்து நோக்கலாம்.

போத்துக்கேய ஒல்லாந்தர் காலங்களில் போத்துக்கேய ஒல்லாந்த மொழிச் சொற்கள் தமிழ்மொழியில் வந்து கலந்தன. இவ்வாறே பிரித்தானியர் ஆட்சியில் ஆங்கில மொழிச்சொற்கள் ஏராளமாகத் தமிழில் வந்து கலந்தன.

நீ எழுதியவற்றை ஆங்கிலம் தெரியாத தமிழனிடம் வாசித்துக்காட்டு அது அவனுக்கு விளங்குமானால், அதுவே சிறந்த உரைநடை எனப் பாரதியார் கூறுகின்றார். அந்தளவிற்கு ஆங்கிலம் தமிழில் கலந்துவிட்டது. இதனாலேதான் 2000ஆம் ஆண்டு விடியலில் தனித்தமிழ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சூரியநாராயண சாஸ்திரிகள் தனது பெயரை பரிதிமால் கலைஞன் என்று மாற்றினார். மறைமலையடிகளின் பெயர் சுவாமி வேதாசலம். வடமொழி சொற்களான சுவாமி என்பதை அடிகள் என்றும், வேதம் என்பதை மறை என்றும் அசலம் என்பதை மலை என்றும் தமிழுக்கு மாற்றி மறைமலையடிகள் என்று தனக்குப் பெயரிட்டார். இதனால், அவரால் ஒன்றும் பெரிதாகச் சாதிக்க முடியாமல் போய்விட்டது. இதன் தொடர்ச்சியே புலம்பெயர்ந்த தமிழர்களிடம் காணப்படுகின்றது.

இப்போது புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களில் ஒரு சந்ததியினருக்கு இம்மொழிக்கலப்பு சங்கடத்தை ஏற்படுத்தினாலும் இது உணர்வுபூர்வமான தன்மையாகவே காணப்படுகின்றது. இனக்குழுமங்கள், கண்டுபிடிப்புகள் எம்முடன் இணைவதுபோல் ஆரோக்கியமான மொழிச்சேர்க்கை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

வேற்றுமொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்துதல் தான் சிறப்பு. அதனைத் தமிழில் எழுதும்போது அது புதிய வடிவத்தைப் பெறுவது இயல்பு. உதாரணமாக car என்பதை கார் எனப் பயன்படுத்தும் போது இருள் என்ற பொருளைத் தருகின்றது.

ஏற்கனவே பரிச்சயமான சொற்களை நாம் மாற்றியமைக்கும் போது பரிச்சயம் இல்லாமல் போகின்றது. கோப்பி என்பதை கொட்டை வடி நீர் என்னும்போது மொழி பின்னோக்கிப் போகவே சந்தர்ப்பம் இருக்கிறது. கோப்பி என்று பயன் படுத்துவது எந்தவித மொழிவளக் குறைவான சொல் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

15 மொழிகள் பேசுகின்ற ஐரோப்பிய நாட்டில் வளரும் ஒரு பிள்ளை. மொழி களிலே தமிழ்மொழியே கடினமானது என்கிறாள். இன்னும் தமிழ்மொழி கடினப் படுத்தப்படுவது. மொழிவளம் குறைவதற்குக் காரணமாகின்றது. அடுத்த

தலைமுறைக்கு எமது மொழியைக் கொண்டுசெல்ல மொழி இலகுவாக்கப்பட வேண்டும். கடினப்படுத்தப்படக் கூடாது.

மொழிக்கலப்புப் பற்றிக் காசியானந்தன்:

‘இராமசாமி சதுக்கத்தில் சர்க்கார் விராந்தையில் காணப்பட்ட பீரோவைத் திருடிய ஆசாமி துர்அதிஸ்டவசமாக பொலிசாரிடம் வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டான்’

| | | |
|---|---|---|
| இராமசாமி | - | வடமொழி |
| சதுக்கம் | - | பாளி |
| சர்க்கார் | - | போத்துக்கேயம் |
| திருடிய | - | தெலுங்கு |
| ஆசாமி | - | மலையாளம் |
| துர்அதிர்ஸ்டம் | - | வடமொழி |
| பொலிஸார் | - | இலத்தீன் |
| வில்லங்கத்தில் | - | மராட்டி |
| மாட்டி | - | தெலுங்கு |
| கொண்டான் | - | மலையாளம் |

இங்கு தமிழென்று நாம் கருதுகின்ற ஒரு வாக்கியத்தில் எத்தனை பிறமொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

பல மொழிகள் இணைந்தே ஆங்கிலமொழி வியாபார மொழியாக உருவாக் கப்பட்டிருக்கின்றது. எனவே பிற மொழிகளை அங்கீகரிப்பதும் பிறமொழிகளில் எம்மொழி இணைவதும் சாதாரணமாக நடைபெறுகின்றது. ஆனால், பிறமொழி களைக் கையாளும் போது தமிழ்மொழி ஆளுகைக்குள்ளே அமைய வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். தேவையானபோது மொழிக்கலப்பு அவசியமாகின்றது. ஒலிபெயர்ப்பு செய்யலாம், புதிய சொற்கள் கண்டுபிடிக்கலாம்.

எனவே மொழிக்கலப்புப் பற்றிப் பேசும் நாம், எமது எதிர்காலத் தலைமுறைக்கு மொழியைக் கொண்டு செல்வதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் எமக்கு இருக்கின்றது.

(வெற்றிமணி கார்த்திகை மாத இதழ் 2017)

## நாட்டிலுள்ள விசத்தையெல்லாம் நான் குடிக்க வைத்து விட்டான்

- கண்ணதாசன் வரிகள் -

ஜூன் 24 அன்று கண்ணதாசன் நினைவு நாள். உலகத் தமிழர்களின் வாயில் முணுமுணுக்கும் காதல், தத்துவம், தாலாட்டுப் பாடல்களின் கவித்துவத்தால் மனித மனங்களை அடிமைப்படுத்தியவர். அதுமட்டுமல்ல பல மனித மனங்களின் சோகத்திற்கும், மகிழ்ச்சிக்கும், நித்திரைக்கும் தேடும் வரி களுக்குச் சொந்தக்காரன். பழைய தமிழ் இலக்கியங்களின் கற்பனைகளையும் அழகு தமிழ்ச் சொற்களையும் கலந்து தன் கற்பனை என்னும் தேனூற்றி அற்புதமான பாடல்களை யாத்தளித்து, சேரமான் காதலி என்னும் நாவலுக்காக சாகித்திய அகடமி விருது பெற்ற எழுத்தாளர்.

இவரது குடும்பம் பெரிது. 3 திருமணம். 15 வாரிசுகள். பிறந்தது ஓரிடம் வளர்ந்தது ஓரிடம். காரைக்குடியைச் சேர்ந்த பழனியப்பச் செட்டியார், இவரை வளர்ப்பதற்காக இவருடைய தாய்தந்தைக்கு 7000 ரூபாய் பணம் கொடுத்து வாங்கினார். ஆரம்பப் பெயர் முத்தையா என்றும், அதன் பின் வளர்ப்புத் தந்தையிட்ட பெயர் நாராயணன் என்றும் மாற்றப்பட்டது. இன்று கண்ணதாசன் என்னும் பெயர் உலகறிந்த பெயராக நின்று நிலைக்கின்றது. திரையுலகின் மறக்கவொண்ணாத நாயகனாய் திரைக்கதை வசனம், பாடல்கள் எழுதியது மட்டுமல்ல நடிகனாகவும் விளங்கி யிருக்கின்றார். இவர் பராசக்தி, கறுப்புப்பணம், சூரியகாந்தி, இரத்தத்திலகம் ஆகிய படங்களில் நடித்திருக்கின்றார்.

16 வயதில் வீட்டைவிட்டு வெளியேறி சென்னைக்கு வந்தார். பல இன்னல்களையும் சோகங்களையும் சுமந்தார். திருமகள் பத்திரிகையில் புரூப் திருத்துனராக வேலைகேட்டு வந்து பத்திரிகை ஆசிரியராக அமர்த்தப்பட்டார். பின் திரை ஒலி, சண்ட மாருதம், தென்றல் திரை ஆகிய பத்திரிகையில் பணியாற் றினார். அனைத்துப் பத்திரிகைகளிலும் கதைகள், கட்டுரைகள்,

03

கவிதைகள், நாடகங்கள் எழுதியதனால், இவரது இலக்கிய ஆளுமையை உலகம் அறிந்து கொண்டது. அதன் பின் தான் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதத் தொடங்கினார். இவரது முதல் கதை கிரகலட்சுமி என்னும் பத்திரிகையில் "நிலாவொளியிலே" என்னும் பெயரிலே வெளிவந்தது. அதிலிருந்து தீவிரமாக எழுதத் தொடங்கினார்.

காப்பியங்கள், கவிதை நூல்கள், சிற்றிலக்கியங்கள், கவிதை நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், புதினங்கள், சிறுகதைகள், வாழ்க்கைச் சரித்திரங்கள், கட்டுரைகள், சமயநூல்கள், நாடகங்கள், உரைநூல்கள் போன்ற வடிவங்களில் தமிழ் இலக்கிய உலகில் வலம் வந்துள்ளார். சுமார் 5000 க்கும் அதிகமான பாடல்களை திரைப்படங்களுக்கு எழுதியுள்ளார்.

கன்னியின் காதல் என்ற திரைப்படத்திற்கு எழுதிய "கலங்காதிரு மனமே உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே" என்னும் பாடலே இவர் திரைப் படத்துறைக்குள் பிரவேசித்த முதல் அறிமுகப் பாடல். அடுத்தடுத்து முயன்றால் பலன் கிடைக்கும் என்னும் தத்துவப்பாடலாக இது அமைந்திருந்தது. மூன்றாம் பிறையில் வந்த "கண்ணே கலைமானே! என்னும் உறங்கச் செய்யும் பாடலே இவரது இறுதிப் பாடலாக அமைந்தது. அவர் உறங்க அவர் பாடிய பாடலாயும் அமைந்திருந்தது. இடையில் வந்த பாடல்களுக்கும் கவிதை களுக்கும் நான் சக்தியைப் பெற்றதே கம்பராமாயணப் பாடல்கள் தான் என்று தன் வாயாலேயே கூறியிருக்கின்றார். "காலமெனும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும் சாகாது கம்பனவன் பாட்டு. அவன் தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு" என்று கம்பருக்கு அவர் பாடிய பாடல்கள் கண்ணதாசனுக்கும் பொருந்துவதாக இருக்கின்றது.

பாடல்களால் குவிந்த பணத்தை திரைப்படம் தயாரித்து அழித்தார். சேமிப்புப் பழக்கமில்லாத கண்ணதாசன் "பில்லாவைப் போல சம்பாதித்தேன். ஊதாரியைப் போல செலவழித்தேன். பல நேரங்களில் பிச்சைக்காரன் போல ஏங்கி நின்ற வாழ்க்கைதான் எனக்கு வாய்த்திருக்கின்றது என்று தனது கட்டுரை ஒன்றில் எழுதியிருக்கின்றார். சந்தர்ப்பத்திற்கேற்ப பாடல்கள் எழுதுவதில் திறமையானவர். பணக்கஸ்டத்தில் சகோதரர்கள் உதவி செய்ய மறுத்த போது "அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே" என்னும் பாடலை எழுதினார். விஸ்வநாதன் அவர்கள் நெஞ்சிலோர் ஆலயம் படத்திற்காகப் பாடல் எழுத வரும்படி

கண்ணதாசனை அழைத்துக் காத்திருந்த போது அவர் வரவில்லை என்ற காரணத்தால், கோபப்பட்ட விஸ்வநாதன் அவர்கள் “இனிமேல் கண்ணதாசனிடம் பாடல்கள் கேட்கப் போவதில்லை” என்று கூறியதை அறிந்த கண்ணதாசன் “சொன்னது நீதானா சொல் சொல் என்னுயிரே” என்னும் பாடலை எழுதிக் கொண்டு போய்க் கொடுத்தார்.

மனவாசம், வனவாசம், எனது வசந்த காலங்கள், எனது சுயசரிதம் என்னும் ஆகிய 4 புத்தகங்களும் ஒருவன் எவ்வாறு வாழக்கூடாது என்பதற்காக தன் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டிய புத்தகங்களாகும். அவர் தன்னுடைய பல பாடல் வரிகளில் தன் வாழ்க்கையையே படம் பிடித்துக் காட்டியுள்ளார். “ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு. ஒரு கோலமயில் என் துணையிருப்பு. இறப்பதற்கு முன்பே தனக்குத்தானே எழுதிய இரங்கற்பாவில் “ஏற்றிய செந்தீயே நீ எரிவதிலும் அவன் பாட்டை எழுந்து பாடு” என்று இறுதி வரிகளை எழுதியுள்ளார்.

இவர் கற்பனையில் வரைந்த பாடல்களுக்குச் சில எடுத்துக்காட்டுக்கள்

காதல் பாடல்

“பாலோடு பழம் யாவும் உனக்காக வேண்டும்
பாவை, உன் முகம் பார்த்துப் பசியாற வேண்டும்
மனதாலும் நினைவாலும் தாயாக வேண்டும் - நானாக வேண்டும்
மடிமீதில் விளையாடும் சேயாக வேண்டும் நீயாக வேண்டும்”
“கம்பன் கண்ட சீதை உந்தன் தாயல்லவா
காளிதாசன் சகுந்தலை உன் சேயல்லவா
அம்பிகாபதி அணைத்த அமராபதி – மங்கை அமராபதி
சென்ற பின்பு பாவலர்க்கு நீயேகதி – என்றும் நீயேகதி”

தாலாட்டுப்பாடல்

“காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே
காலமிதை தவற விட்டால் தூக்கமில்லை மகளே
எண்ணிரண்டு வயது வந்தால் கண்ணுறக்கம் இல்லையடி
ஈரேழு மொழிகளுடன் போராடச் சொல்லுவதே தீராத தொல்லையடி”

சோகப்பாடல்

“உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா என் உயிர்
உன்னதன்றோ”

“வானிலுள்ள தேவர்களை வாழ வைக்க விஷம் குடித்தான்
நாட்டிலுள்ள விஷத்தையெல்லாம் நான் குடிக்க விட்டுவிட்டான்”
தத்துவப்பாடல்
“ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்
அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்”
“படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினுள் உண்டு”
“வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வே தனை இருக்கும்
வந்த துன்பம் எது என்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை”

இவ்வாறு காலத்தால் அழியாத பல திரையிசைப் பாடல்களைத் தந்த கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மறைந்தும் மறையாது பல உள்ளங்களில் மறக்க முடியாது இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்.

(வெற்றிமணி ஆனி மாத இதழ் 2018)

# புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண் பெண் காதலே

**கா**தலர் தினம் பெப்ரவரி 14ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. காதலர் தினம் கொண்டாடப்படுதல் அவசியமா? என்ற கேள்வி யுடன் பல நாடுகள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றார்கள். வியாபார நோக்கத்துடன் காதலர் தினத்தை விலையுயர்ந்த ஒரு விழாவாக மாற்றிவிடுகின்றார்கள் என்றும் இவ்விழா கலா சாரத்தைச் சீர்குலைக்கின்றது என்றும் பலவாறான எதிர்ப்புகள் நிலவுகின்றன. இந்நிலையில் காதலர் தினத்தின் முக்கியத்துவம் பற்றி சிறிது மனம் பதிப்போம்.


காதல் என்பது உலகத்து உயிர்கள் அத்தனையையும் தன் பிடிக்குள் அடக்கியுள்ளது. உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசியே காதல் என்பர். அஃறிணைக்காதல் கல்லாக்காமம், இயற்கையின் வீறு. மனிதர்களிடத்தில் தோன்றும் காதல் நினைவில் இனித்து, அறிவில் விளங்கி, கல்வியில் வளர்வது என்று வ.சு.ப. மாணிக்கனார் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். சங்க நூல்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு மொத்தம் 2381 பாடல்கள். இதில் 1862 பாடல்கள் அகத்திணையையே குறிக்கின்றன. இவ் அகத்திணை வயப்பட்ட காதலை தொல்காப்பியர் களவியல், கற்பியல் எனஅகத்திணை பற்றிய செய்திகளை இரண்டாகப் பிரிக்கின்றார்.

புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண்பெண் காதலே. அக் காதல் இலக்கியத்தின் வற்றாத ஊற்றிடங்களுள் ஒன்று. கவிதை எண்ணத்தை உருவாக்கும் சார்புகளுள் ஒன்று. இயற்கை இன்பத்தின்பால் உலகை ஆட்டிப்படைக்கும் காதல் இன்பத்தைக் களிப்பான நாளாகக் கொண்டு விழா எடுப்பதில் தவறில்லை என்றே நினைக்கின்றேன்.

ஆண் பெண் இருபாலாரிடையே வெளிப்படும் காமத்தோடு கூடிய காதல் சங்கம் தொட்டு இன்று வரை பாடல்களின் மூலம் அழகாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. காமம் கடந்த காதல், காமத்தோடு கூடிய காதல் என்னும் போது இயற்கை யைக் காதலித்தல், செய்யும் தொழிலைக் காதலித்தல், கற்கும் கல்வி யைக் காதலித்தல், தன்னைத்தான் காதலித்தல், வயதான

04

தம்பதியினரின் உச்சம்தொட்ட அன்பின் வெளிப்பாடு எனக் காமம் கடந்த காதல் வெளிப்படுகின்றது. தெய்வீகக் காதல் ஆண்டாள் பாடல்களில் அழகாக எடுத்துக்காட்டப்பட்டு இருக்கின்றது. ஆயினும் அவற்றிலும் கூட காமம் வெளிப்பட்டி ருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.



"குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சயணத்தில் மேலேறி
நற்பிண்ணை கொங்கை மேல் வைத்துக் கிடந்த
மலர் மார்பா வாய்திறவாய்"

என்று திருமாலை நினைத்து ஆண்டாள் பாடுவதாக இப்பாடல் வந்தி ருக்கின்றது. திருமணத்தை மறுக்கப்பட்ட பெண்களின் குறியீடாகவே பெரியாழ் வாரின் கற்பனைப் பாத்திரப் படைப்பே ஆண்டாளாக இருக்கலாம் என்பது ஆராய்வுக்குறிப்பு. ஆயினும் ஆண்டாள் பாடல்கள் தெய்வீகக் காதலைப் புலப் படுத்தியிருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது. காதல் அடைதல் இயற்கை. அது கட்டில் அகப்படும் தன்மையதோ என்று பாரதிதாசன் எடுத்துரைக்க, காமம் என்ற சொல் காதலுக்கு பயன்படுத்தப்படுவது அறியக்கிடக்கின்றது.

“காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே”

அக்காமம் என்பது, வருத்தமும் நோயும் அன்று. மேட்டு நிலத்தில் தழைத்த, முதிராத இளைய புல்லை, முதிய பசு, நாவால் தடவி இன்புற்றாற்போல நினைக் குங் காலத்தில் அக்காமம் புதிய இன்பத்தை யுடையதாகும்.

எனக் காமமாவது எமது அறிவு நிலைக்கு உட்பட்டது என குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

வெகுளிப்பெண் படத்தில் கண்ணதாசன் காதலாலே போதை வந்தது, காதலால் கவிதை வந்தது, ஆதலாலே காதல் செய்வது, ஆணும் பெண்ணும் ஆசை கொள்வது என்று எழுதியிருக்கின்றார். வைரமுத்து “உலகமெல்லாம் ஒரு சொல். ஒரு சொல்லில் உலகம். காதல் கற்காலம் தொடங்கி இன்ரநெற் வரையில் அன்றும் இன்றும் என்றென்று காதல், காதலித்துப் பார் உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும், வயிற்றுக்கும் தொண்டைக்குமாய் உருவமில்லா உருண்டையொன்று உருளக் காண்பாய்… காதலின் திரைச்சீலையைக் காமம் கிழிக்கும்…செத்துக் கொண்டே வாழவும் முடியுமே… அதற்காக வேணும்… காதலித்துப் பார்! என்றார்.

காதல் பற்றி மகாகாவி பாரதியார் சொல்கின்றபோது தனது குயில் பாட்டிலே

“காதல் காதல் காதல்
காதல் காதல்போயிற் காதல்போயிற்
சாதல் சாதல் சாதல்” என்றார்.

இவ்வாறான காதல் ஆண்பெண் இருபாலாரிடையே தோன்றும் போது செம்மண்ணில் மழைநீர் சேர்கின்றபோது, அந்நீரும் செந்நீராவது போல் இரண்டறக்கலக்கும் எனக் குறுந்தொகையில்

“யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
நீயும் யானும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே”

செம்புலப்பெயல் நீரார் பாடியிருக்கின்றார்.
இதனையே பாரதியும் கண்ணம்மா என் காதலியில்
“அன்னிய மாகநம்முள் எண்ணுவதில்லை – இரண்
டாவியுமொன் றாகுமெனக் கொண்டதில்லையோ? என்கிறார்.

வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம், செப்பல் (தனக்குள் பேசிக்கொள்ளல்) நாணு வரை இறத்தல்(வெட்கம் இல்லாமல் போதல்) நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு (காதல் கைகூடாவிடத்து சாக நினைத்தல்) எனத் தொல்காப்பியர் பொருளதிகாரத்திலே களவொழுக்கம் பற்றி அழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

இவ்வாறான பண்புகளைக் கொண்ட காதலானது பெண்களிடத்து மென்மை யானது, ஆண்களின் காதல் பாதுகாப்பானது. பெண்களின் காதல் அப்படியில்லை. எந்த நேரத்திலும் அழிந்து போகலாம் என்பதற்கு அத்தாட்சியாக குறிஞ்சிநிலத்துத் தோழி தன் வாயிலாக தலைவனுக்குப் புலப்படுத்துகின்றாள்.

“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே”

அதாவது, வேரிலே பழுக்கின்ற பலாப்பழங்களையுடைய மலைச் சாரலை யுடைய மன்னனே. இங்கே பெரிய பலாமரமொன்றின் சிறிய கொம்பில் சிறிய காம்பில் பெரிய பழம் தொங்குவதுபோல் தலைவியின் காமம் என்கிறாள்.

இதனையே வள்ளுவரும்,
“மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்”

எல்லாவற்றிலும் மெல்லியதாகிய பூவைவிட காமம் மெல்லியது. அதன் உண்மையை அறிந்து அதன் நல்ல பயனைப் பெறக்கூடியவர் சிலரே எனக் கூறும் வள்ளுவரை நிலைநிறுத்தி, ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே எழும் காதல் நிலத்தை விடப் பெரியது, வானத்தை விட உயர்ந்தது, நீரை விட அளவற்றது எனக்கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

மனிதன் பிறந்தவுடன் மழலையாய் முதன் முதலில் கேட்கும் பாடல் நாட்டுப் புறப்பாடல். தொட்டில் தொட்டு மரணக் கட்டில் வரையில் தொடரும் பாடல் நாட்டுப்புறப்பாடல். இது சுயமாகவும் இயல்பாகவும் மனிதன் மனதில் இருந்து உதித்தெழுந்து உயிருக்குள் மெட்டெடுத்து பாடும் பாடலாக அமைகின்றது. யாப்புக்கள் ஏதும் இல்லை, இலக்கண வரம்புக்குள் இவை சிக்கவில்லை, படித்தவர்கள், பாமரர்கள் என்ற பேதமின்றி எல்லோ ருக்கும் வயப்படும் பாடல்களாக அமைகின்றன. இவை கிராமத்து மக்களை கண்ணாடி கொண்டு காட்சிப்படுத்தும் பாடல்கள். வீசும் காற்றில் இசை, வீழும் அருவியில் இசை, அலையடிக்கும் கடலின் இசை, ஓடும் இரயிலில் இசை, வீழும் மழையில் இசை, நித்திரையில் குறட்டையிலும் இசை என இசையோடு ஒன்றியதே வாழ்க்கை. இவ் இசையின் இயல்பான வரவே நாட்டுப் பாடல்கள்.

குழந்தையைத் தொட்டிலில் போட்டு தாலாட்டுவது தொடங்கி குழந்தை வளர்ச்சிக்கேற்ப சப்பாணிப்பருவம், சாய்ந்தாடு பருவம், நடைபயிலும் பருவம் என ஒவ்வொரு பருவத்திற்கும் பாடல்கள் பாடி இசையோடு குழந்தைகளை வளர்த்தெடுப்பார்கள். அக்குழந்தை வளர்ந்து பெரியவராகும் பட்சத்தில் காதற் பாடல்கள் சிறப்பாக நாட்டுப்பாடல்கள் வரிசையில் இடம்பெறுகின்றன. அதன்பின் தொழிற்பாடல்கள் (உழுதல், விதைத்தல், களை பிடுங்குதல், அருவி வெட்டுதல், சூடுமிதித்தல், ஏற்றம் இறைத்தல், நெல்குற்றுதல், வண்டி ஓட்டுதல், படகு ஓட்டுதல்) வேலைக் களைப்பு நீங்க நாட்டுப்புறப்பாடல்களை ஆடிப்பாடினார்கள். அதன்பின் பொழுதுபோக்குப் பாடல்கள் (ஊஞ்சல் பாடல்கள், கும்மிப்பாடல்கள், பல்லாங்குழி போன்ற விளையாட்டுப்பாடல்கள்) இறந்த பின் மரணவீட்டு ஒப்பாரிப்பாடல்கள் என மனிதன் வாழ்க்கை முழுவதும் நாட்டுப்புறப் பாடல்கள் அவனைத் தொடர்ந்து வருகின்றன.

05

இப்பாடல்கள் மூலமாக தமிழர்கள் தாம் வாழும் பகுதிகளின் வரலாற்றுப் பின்னணியை, கலாசாரத்தை, பண்பாட்டை,

பிரதேச வழக்கு மொழிகளை இப்பாடல்களின் மூலமாக வெளிக் கொண்டு வருகின்றார்கள். இப்பாடல்களின் அழகு என்பது இயல்பாகவே எதுகை மோனை வந்து விழுவதாக அமைவதேயாகும். கற்றறியாத பாமரர்கள் பாடல்களில் எதுகை மோனையை அழகாகக் கொண்டுவரும்போது தற்காலப் பாடல்களை இவை தலைகுனிய வைக்கின்றன.

குறிப்பாக மட்டக்களப்பு கிராமியப்பாடல்களை நாம் எடுத்து நோக்கும் போது, அங்கு வாழும் தமிழர்களுடையதும், இஸ்லாமியர்களுடையதுமான பாடல்களை எடுத்தாள வேண்டியது அவசியம்.

குழந்தை வளருகின்ற போது ஒவ்வொரு பருவத்திற்கும் அவர்கள் வளர்ச்சிக் கேற்பப் பாடல்கள் பாடுகின்ற போது அக்குழந்தைகளுக்குப் பயிற்சியும் வழங்கப் படுகின்றது. குழந்தை அழுதவுடன் மடியில் போட்டு

ஆராரோ ஆரிவரோ (ஆர் – ஆராரோ, ஆர் - இவரோ)
ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண் உறங்காய்
கண்ணை அடித்தாரார்
கற்பகத்தைத் தொட்டாரார்
தொட்டாரைச் சொல்லியழு
தோல் விலங்கு போட்டு வைப்போம்
பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே
அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே
மாமன் அடித்தானோ மகிழ்ந்தெடுக்கும் கையாலே
அண்ணன் அடித்தானோ அணைத்தெடுக்குங் கையாலே
அடித்தாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணி வைப்போம்.

என்று தாய் பாடுகின்றாள். குழந்தை அந்த ஓசை நயத்தையும், தாலளயத் தையும், நாவின் அசைவையும் கண்ணால் நோக்குகின்றது.

குழந்தைகளின் இரண்டு கைகளையும் தட்டித் தட்டி ஓசை எழுப்பும் போது அதற்கேற்ப பாடல்களைப் பாடுகின்றனர். அப்போது கைகளுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

சப்பாணமாந் தம்பி சப்பாணம்
செப்புநிறைந் தொருகையாலே
செண்பகம் பூந்தொருகையாலே
முத்துப் பதித்தொருகையாலே
மோதிரம் போட்டொருகையாலே
முழங்கிக் கொட்டுமாம் சப்பாணி

இச்சப்பாணிப்பருவப் பாடல்கள் பிரபந்த வகைகளுள் ஒன்றான பிள்ளைத்தமிழ் பாடல்களில் அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவனை பண்ணிப் பாடிய தாலாட்டுப் பாடல்களில் சப்பாணிப் பாடல்கள் காணப்படுகின்றன.

குழந்தையின் இடுப்பு எலும்புக்குப் பயிற்சி அளிப்பதற்கு சாய்ந்தாடு பாடல்கள் மட்டக்களப்பில் பாடப்படுவது சிறப்பாக அமைந்திருக்கிறன. குழந்தை சாய்ந்து இருக்கும் பருவத்திலே

சாஞ்சங்கண்டே சாஞ்சம்
சாய மயிலாரே சாஞ்சம்
வட்டிக்கும் சோத்துக்கும் சாஞ்சம்
வாழைப்பழத்துக்குஞ் சாஞ்சம்
கோயிற் புறாவே சாஞ்சம்
அன்னே பின்னே சாஞ்சம்
அழகுள்ள மயிலே சாஞ்சம்

ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்
என்னானை, அது பொன்னானை
எங்கள் குலத்துக் கரசானை
முத்துக் கொம்பன் ஆனையது
முதுகு சொறியு மானையது
சப்பட்டைக் காலன் ஆனையது
ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்

இவ்வாறு பாடி குழந்தையை இடுப்பின் மேற்பகுதிகளை முன்னும் பின்னும் அசைக்கச் செய்வார்கள். இடுப்பு நோ என்று உடற்பயிற்சி நிபுணரிடம் சென்றால், ஒரு இயந்திரத்தில் இருக்க வைத்து எம்மை அவர்கள் சாய்ந்தாடச் செய்வதை நாம் அறிகின்றோம். இதனையே தாய்மார் தம்முடைய பிள்ளைகளுக்கு சாய்ந்தாடு பருவப் பாடல்களைப் பாடி அசைய வைக்கின்றார்கள்.

இதே போன்று கைகளுக்குப் பயிற்சி கொடுக்கும் வகையில். 10 விரல்களையும் இழுத்து இழுத்து மசாஞ் செய்துவிட்டு இது பருப்பு, இது சோறு என்று 5 விரல்களையும் ஒவ்வொரு உணவாகச் சொல்லி ஒவ்வொன்றாக மடித்து இறுதியில் முழங்கையை வைத்து ஆடகட, ஆடகட என்று சொல்லிய வண்ணம் உணவை சேர்த்துப் பிசைவதாக பாவனை பண்ணி உப்புப் போதுமா? என்று பிள்ளையிடம் உருசி பார்க்கச் செய்து, இறுதியில் விரல்களினால் "நண்டூறுது நரியூறுது, நண்டூறுது நரியூறுது. . . ." என்று கைகளில் கைவிரல்களினால் மென்மையாக நடைபயில வைத்து

கிச்சுமுச்சு ஊட்டுவதன் மூலம் உள்ளுணர்வுகளுக்குத் தென்பையும் விரல்களுக்கான பயிற்சியையும் பாடல்களின் மூலம் வழங்குகின்றனர்.

அதுபோல் நெஞ்சு, கை மூட்டெலும்புகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக இரண்டு கைகளையும் மேலே மேலே தூக்கி பறவை பறப்பது போல் பாவனை செய்ய வைத்து

ஆலா பறபற, அழகு பறபற
கோழி பறபற கொக்கு பறபற
குருவி பறபற

என்று பாடி கைகளுக்குப் பயிற்சி கொடுக்கின்றனர். இவ்வாறாக வளருகின்ற பிள்ளைகள் விளையாடும் பருவம் அடைகின்ற போது விளையாட்டுப் பாடல்கள் பலவற்றைப் பாடுவது வழக்கமாக இருக்கிறது.

ஆலையில சோலையில
ஆலங்காடிச் சந்தையில
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறிக்கி அடிக்கப்
பாலாறு, பாலாறு, பாலாறு
ஆலஞ்சருகு மடமடன்ன, அங்கோர் வண்டி உருண்டுவர
சோலைக்கிளியார் கொத்தியடிக்க, நாய் குலைக்க நல்லாண்டம்மா
பையோடா.... பையோடா.....

மட்டக்களப்புப் பகுதியில் பறங்கியர்கள், சிங்களவர்கள், இஸ்லாமியர்கள், தமிழர்கள் சேர்ந்து வாழ்ந்ததனால், அப்பகுதியில் வழங்கப்படுகின்ற நாட்டுப் பாடல்களில் அவர்களுடைய மொழிவழக்குகள் இடம் பிடித்திருக்கின்றன.

சிங்கிலிநோனா சிங்கில்நோனா
சீப்புக் கொண்டைக்காரி
பாாத்தபேர்கள் ஆசைகொள்ளும்
பந்துக் கொண்டைக்காரி
என்ன பிடிக்கிறாய் அந்தோனி
எலிபிடிக்கிறேன் சிஞ்ஞோரே
பொத்திப்பொத்திப் பிடி அந்தோனி
புறிக்கொண்டோடுது சிஞ்ஞோரே.

வாழ்க்கைத் தொடர்ச்சியிலே ஒரு பெண் வயதுக்கு வந்துவிட்டால், பெற்ற தாய் எண்ணம் முழுவதும் தன்னுடைய மகளின் நடவடிக்கைகளில் கண் காணிக்கப்படும். காதல் வயப்பட்ட ஒரு பெண்ணின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஒரு தாய் காண்கின்றாள். தன்னுடைய சந்தேகத்தை

அப்பெண்ணான தன் மகளிடம் பாடலின் மூலம் தாய் வினவுகின்றாள்.

இரவு நடுச்சாமம் நானுறங்கும் வேளையிலே
ஆரோடு மகள் நீ வாதுகவி பாடியது.

இரவில் தாயறியாமல் கையில் தொலைபேசியுடன் இரவிரவாகப் பேசும் இன்றைய மகளைப் போல அன்றும் ஒரு பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட தாய், ஒரு கேள்வியைக் கேட்டதும், இதற்கு மேலும் தன்னுடைய கள்ளத்தனமான காதலை மறைக்க முடியாத மகளும்

ஊராரென்றும் எண்ணாதே ஒருத்தரோடுஞ் சொல்லாதே
மாமி வீட்டு நாய் வந்து காவலல்லோ காத்திருந்தது

வேறு யாருமில்லை அம்மா என் மாமியின் மகன்தான். என் மச்சான்தான் வந்திருந்தார். அவரோடு அவருடைய நாயும் கூட வந்தது. மற்றவர்களுடன் பேசிப்பயன் இல்லை. நடக்க வேண்டியது நடக்க வேண்டும் என்பதை நயமாகத் தாயிடம் மகள் எடுத்துரைக்கின்றாள். மச்சான் வந்தான் என்று நேரடியாகக் கூறாது நாய் காவல் காத்திருந்தது என்பது சிறப்பாக அமைந்திருந்தது. இலக்கியங்களில் காட்டப்படாத சில உண்மைத் தன்மைகள் நாட்டுப்புறப்பாடல்களிலே காணப்படுகின்றது. சாதாரண குடிமகனுக்கு இருக்க வேண்டிய குறை குற்றங்களை எவ்வித மறைவுமின்றி சுட்டிக் காட்டுவது இப்பாடல்களின் சிறப்பம்சமாகப்படுகின்றது.

காதலன் காதலிகள் பாடுகின்ற பாடல்களிலே இயற்கையோடு ஒன்றியதாக மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கைமுறைகள், விளையாட்டுக்கள், பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள், குறிப்பாகப் பேச்சுவழக்குகள் போன்றன இழையோடிக் காணப்படுகின்றன. இலக்கியக் காதலை நாட்டுப்புறக் காதலில் வேறுபடுத்தி அறியக் கூடியதாக இருக்கின்றது. கள்ளக் காதலியை, காதலனை தேடி வருகின்ற போது சந்திக்க இடம், காலம் அழகாக பாடல்களிலே கூறப்படுகின்றன.


சந்தன மரத்தைச்
சந்திக்க வேண்டுமென்றால்
பூவலடிக்குப்
பொழுதுபட வாமயிலார்
கடப்படியில் வந்து நின்று
காளை கனைக்கும் மென்றால்
எங்கிருந்த போதும் நாகு
எழுந்துவர மாட்டாதோ!
“வாழைப்பழத்தை வயிர்

நிறையத் தின்றாலும்
தேனொருகால் தின்னாட்டி
தியக்கிறல்ல என்மனது.

“வாழைப்பழமே வடி தயிரு சர்க்கரையே
சீனி ரசமான வண்டே உன்னைத்
தின்னாமல் போக மாட்டேன்.

கடப்படி என்பது வீட்டுக் காணியின் முற்றத்தின் முன்னே போடப்பட்டிருக்கும் கதவு என்று பொருள்படும்.

அன்றாடம் வாழ்க்கையில் பயன்படுத்துகின்ற சொற்களை



உவமையாகவும், உவமானமாகவும் கையாண்டு பாடல்களை பாடுகின்றின்றார்கள். இதனால், காதலர்கள் சந்திப்பில் உரையாடல்கள் சுவையாக இயற்கையோடு இணைந்ததாக அமைந்திருக்கும்.

சட்டைபோட்டுப் பொட்டெழுதித்
தண்ணிகொண்டு போற கண்டார்
சட்டை போட்ட கையால்
கொஞ்சம் தண்ணீர் தா கண்மணியே.
என்று கேட்டது உண்மைத் தாகமல்ல என்று உணர்ந்த பெண்ணும்
ஓடையில போற தண்ணி
தும்பி விழும் தூசி விழும்
வீட்டுக்கு வாங்க மச்சான்
வெந்த தண்ணி நான் தருவேன்.
முறையோடு வீட்டிற்கு வாருங்கள் என்று கூற
தண்ணிக் குடமெடுத்து தனிவழியே போற கண்ணே!
தண்ணிக் குடத்தினுள்ளே தளும்புதடி என் மனசு
சுற்றிவர வேலி சுழல வர முள்வேலி
எங்கும் ஒரேவேலி நான் எங்காலே வந்திடட்டும்
வெத்திலையைக் கைப்பிடித்து
வெறும் பிளவை வாயிற்போட்டு
சுண்ணாம்பு தேடி நீங்க
சுற்றி வாங்க மச்சானே

நாசுக்காகவும் நயமாகவும் பாட்டின் மூலமே தாம் சந்திப்பதற்கான யுக்தியை யும் தம்முடைய காதல் ஆற்றாமையும் வெளிப்படுத்துவதான அற்புதமான மட்டக்களப்பு மண் வாசனைப் பாடல்கள் காணப்படுகின்றன.

சங்கப் பாடல்களின் உடன்போக்குப் பாடல்களைப் போலவே காதலனும் காதலியும் வீட்டை விட்டு ஓடிப் போக எத்தனிக்கையில்

ஓட நல்ல ஒழுங்கை
ஒழிக்க நல்ல பூவரசை
பாய நல்ல பாழ் வளவு
நீ பயமில்லாம வா கிளியே
வில்லுக் கரத்தையிலே
வெள்ளை மாடு இரண்டு கட்டி
தட்டி விடுகா மச்சான் நாங்கள்
சம்மாந்துறை போய் வருவோம்

காதல் பிரிவினால் காதலன் வேறு பெண்ணை மணம் முடிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. காதலியோ தன்னிலும் பார்க்கத் தன் காதலன் மணம் முடித்த பெண் எப்படி அழகானவளா? என்னும் உள் மன பொறாமைக் கேள்வி எழுந்து நிற்கும்

என்னில் அழகியோ
ஏந்து கொண்டைக் காரியோ
பல்லால் அழகியோ
மச்சான் பாஉத்தெடுத்த
செங்குரங்கு

பிடிக்காதவர்களைக் குரங்கென்று கூறும் எண்ணப்பாட்டை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது.

சில நாட்டுப் புறப்பாடல்களில் நக்கலும் நையாண்டியும் கலந்திருக்கும். இதே வேளை உவமானங்கள் சிறப்பாக வந்து விழுந்திருக்கும். திருமணத்திற்காக ஒரு பெண்ணைப் பார்க்க மாப்பிள்ளை வருகின்றார். தன் தோழியிடம் அவரைப் பிடிக்காத அப்பெண் மாப்பிள்ளையை வர்ணிக்கும் பாங்கு நகைச்சுவையாக இருப்பது நோக்கத்தக்கது.

கச்சான் அடித்த பின்பு
காட்டில் மரம் நின்றது போல்
உச்சியிலே நாலு மயிர்
ஓரமெல்லாம் தான் வழுக்கை
கண்ணுமொரு பொட்டை
காதுமவை செவிடாம்
குருத்தெடுத்த வாழைபோல்
அவர் கூனி வளைந்திருப்பார்
முப்பத்திரண்டிலை
மூணுபல்லுத்தான் மீதி
காகக்கறுப்பு நிறம்
ஒரு காலுமல்லோ முடமவர்க்கு

இவைபோன்று இரசிக்கத்தக்கப் பல பாடல்கள் மட்டக்களப்பு மக்கள் வாழ்க் கையில் வாய்மொழி மூலம் தொடர்ந்து வருகின்றன.

உசாத்துணை நூல்
ஈழத்து நாடோடிப்பாடல்கள் வித்துவான் எப்.எக்ஸ்.சி நடராஜா

(மண் சஞ்சிகை 30 ஆவது ஆண்டு விழா மலர்)

**கா**ட்சிகள் பல எண்ணங்களையும் உணர்வுகளையும் தட்டி எழுப்புகின்றது. ஒப்பிட்டுப் பார்க்கும் முறையானது எம்முடைய தவறுகளையும் சிந்தனைப் போக்கையும் சீர் செய்ய உதவுகின்றது.

அல்ஸ்கைமர் என்னும் நோயாளிக்கு அளிக்கும் பயிற்சியில் ஒன்று அல்பம் பார்த்தலும் விளக்கம் அளித்தலும் ஆகும். அன்று ஒரு நோயாளியின் 50 ஆவது ஆண்டுத் திருமணவிழா அல்பத்தைப் பார்த்த போது ஆச்சரியமாகவும் ஆசையாகவும் இருந்தது. காரணம் இரத்த உறவினர்கள் அனைவரும் மொத்தமாக இணைந்திருந்து ஒரு புகைப்படம் எடுத்திருந்தார்கள். கைக்குழந்தைகள் உட்பட 103 பேர் நின்று எடுத்த புகைப்படமே எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. எம்முடைய குடும்ப அல்பத்தில் இவ்வாறு ஒற்றுமையுடன் அனைவரும் இணைந்திருந்தால் எத்தனை பேர் இணைந்து இருப்பார்கள் என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பாருங்கள்.

வருடத்தில் ஒரு நாளாவது ஒன்றாக இணையும் முறை ஜேர்மனியருக்கு உள்ள பழக்கவழக்கங்களில் ஒன்று ஆகும். நத்தார் விழாவில் எங்கே இருந்தாலும் பெற்றோரைத் தேடி வந்து அவர்களுடன் இணைந்தே நத்தார் விழாவைக் கொண்டாடுவார்கள். ஞாயிற்றுக் கிழமை குடும்பநாள் என்று முடிவு கொண்டு அன்றைய தினம் எந்த நியமனங்களையும் அவர்கள் வைத்துக் கொள்வதில்லை. இவ்வாறு கிட்டே என்றும் இருந்து தொல்லை கொடுக்காது. தள்ளி இருந்து உறவை வளர்ப்பதே அவர்கள் பண்பாகப்படுகின்றது.

ஜேர்மனியர்கள் மத்தியில் அவர்கள் குடும்பப் பெயரானது தொடர்ந்து பிறக்கின்ற பிள்ளைகள் எல்லோருக்கும் கூடவே தொடர்ந்து வரும். தமிழர்கள் மத்தியில் ஒரு பெண் ஒருவரைத் திருமணம் செய்கின்ற போது அந்தப்பெண்ணின் பெயர் திருமதி என்று மாறி கணவன் பெயருடன் ஒட்டிவிடுகின்றது.

**06**

இங்கே தந்தை பெயர் இடம் தெரியாமல் ஒடி மறைந்து விடுகின்றது. எம் முடைய பாட்டன் பூட்டன் பெயர் எத்தனை பேருக்குத் தெரியும். ஆனால், ஜேர்மனியரை பார்க்கின்ற போது தொடர்ந்து வரும் பெயர் அவர்கள் பரம்பரைப் பெயராகவே இருக்கும். அனைவரும் பாட்டன் பூட்டன் பெயர்களை ஞாபகத்தில் வைத்திருக்கின்றார்கள்.

எமது உறவினர்கள் கூடுகின்ற குடும்ப விழாவை எடுத்துப் பார்த்தால் அனைவரும் கலந்து சிறப்பிப்பது அருமையாக இருக்கின்றது. உறவினர்கள் பணம் தரவில்லை என்று சிலரும், காணி விற்ற பணத்தில் ஒரு பகுதி தமக்குப் பகிரவில்லை என்ற கோபத்தில் சிலரும், தம்மைவிட உயர்ந்து நிற்கின்றார்களே என்ற பொறாமையில் சிலரும், தம்முடைய விருப்பத்தை மீறித் திருமணம் செய்து வாழுகின்றார்கள் என்று சிலரும், உள்வீட்டுப் பூசலைத் தூண்டிவிட்டு அழகு பார்த்துப் பிரிந்து நிற்கும் சிலரும், என சின்னச்சின்னக் காரணங்களைப் பெரிதாக நினைத்து ஒன்றிணைய விரும்புவதில்லை. இரத்த உறவினர்கள் இணைந்து எடுத்த புகைப்படத்தில் இருப்பவர்கள் தொகை தாயகத்தில் கூடக் குறைவாகவே இருக்கும்.

எமது இனம் தாம் ஆதரவு தேடி வெவ்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த போது கைகள் மட்டுமே துணை என்று துணிந்து புகுந்தார்கள். பெரும் கடினத்தின் மத்தியில் தம்மால் முடியாத வேலைகளைக் கூட வாழ வேண்டும் என்ற காரணத்தினால் துணிந்து செய்தார்கள். அந்த வேளையில் கையில் கிடைக்கும் பணத்தில் ஒரு தொலைபேசி அட்டையை காசு கொடுத்து வாங்கி தாயகத்திலுள்ள உறவினர்களுடன் பேசி உறவாடி மகிழ்ந்தார்கள். தொலைபேசிக் கட்டணத்திற்காக பணத்தை யன்னலைத் திறந்து எறிகின்றீர்களே என்று ஒரு ஜேர்மனிய நண்பன் கூறியதை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.



இவ்வாறு ஒருநாள் தொலைபேசி அழைப்பு வரவில்லை என்றால், ஏன் தொலைபேசி எடுக்கவில்லை என்று கலங்கிவிடுவார்களே

என்று பணத்தைவிட உறவுதான் உத்தமம் என்று நினைத்தவர்கள் அதிகம். ஆனால், இன்றோ உலகநாடுகளிலுள்ள உறவினர்களுடன் நினைத்தவுடன் பேச கையில் Viber, Whatsapp, Messenger, Skype போன்ற எத்தனையோ வசதிகள் இருந்தும் தொடர்புகள் இல்லை. தாயகத்து உறவுகளுக்கு புலம்பெயர் உறவுகளின் அவசியம் குறைந்துவிட்டது. தாயகத்தில் பணவீக்கம் கட்டுக்கடங்காது அதிகரித்துவிட்டது. அதனால், புலம்பெயர்ந்தோரைத் தேட வேண்டிய அவசியம் உறவினர்களுக்குக் கிடையாது.

ஆனால், இன்று உதவி தேவைப்படுவோருக்கு மாத்திரமே messenger தேவைப்படுகின்றது. அப்படியென்றால், உதவிக்கு மட்டுமே உறவா என்ற கேள்வி தலைநிமிர்ந்து நிற்கின்றது.

உறவினர்கள் என்பவர் யார்? என்று புலம்பெயர் மனித மனங்களில் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணத்தை அகல விரித்துச் சிந்தித்துப் பார்த்தால், இன்று அருகே இருப்பவர் உலகநாடுகளில் எந்த எல்லையில் பிறந்தாரோ! அந்த மனிதரே இன்று ஆபத்துக்குப் பக்கபலமாகின்றார். கையிலே பனம் பழத்தை வைத்துக் கொண்டு நெய்யுக்கு ஏன் அலைய வேண்டும். தூ ரத்துத் தண்ணி ஆபத்துக்குதவாது. ஓடி வந்து ஏற்றிச் செல்ல அம்புலன்ஸ் வண்டியைக் கொடுப்பவர் இந்த நாட்டவரே. கைபிடித்துக் கூட்டிச்செல்ல உதவிக்கு வருபவர் எந்த போலந்து அல்லது துருக்கி நாட்டவரோ அவரே. உற்றார் உறவினர்கள் அல்ல. இனமத பேதமற்ற அன்பே அவசியமாகின்றது.

இதனையே மூதுரையிலே ஔவையார் கூறினார்.
உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி – உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்து போல் வாரும் உண்டு.

இப்பாடலிலே நோய் எங்கள் உடலுக்குள்ளேயே இருந்து எங்களைக் கொல் லுகின்றது. அதேபோல உடன் பிறந்தவர்கள் சுற்றம் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதில்லை. மலையிலுள்ள மூலிகைகள் தானே நோயைத் தீர்க்கின்றன. எங்கோ இருந்துதானே எமது நோய்க்கு மருந்து கிடைக்கின்றது. என்று அனுபவித்துத்தானோ எழுதினார்.

இப்பாடலைக் கேட்கும் போது

தலையிடி காய்ச்சல் வந்தால் தயவுடன் மருந்தைக் கேளாய்
மலையிலுள்ள கல்லைத் தூக்கித் தலையில் போட்டால்
தலையிடி நின்றிவிடும்.

என்று மட்டக்களப்பு மண்ணிலே நகைச்சுவையாகப் பாடப்படும் ஒரு நாட்டுப் பாடல் என் எண்ணத்தில் வந்து விழுகின்றது.

எனவே அருகே யார் இருக்கின்றார்களோ, அவர்களுடன் ஒட்டி உறவாடி உறவினர்களாகக் கைகோர்த்துப் பழகுவோம். கிடைக்காத உறவை நினைத்து ஏங்குவதை விட்டு கிடைக்கின்ற உறவைப் பலப்படுத்திக் கொள்ளுவோம்.

(வெற்றிமணி சித்திரை மாத இதழ் 2018)

**வா**ழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களைக் கடக்கும் போதும் காலப் பாதையின் கட்டுமாணங்கள், கனவுகள், காட்சிப்படிமங்கள், இடர்கள், இமயாப் பொழுதுகள், மூளைப்பதிவுகள் எம்மை வழிநடத்துகின்றன. சில நேரங்களில் நாம் நினைக்கின்ற விட யங்கள் எமக்கு நடக்காமலே போகலாம். சில நேரங்களில் நாம் நினைக்கின்ற விடயங்கள் அப்படியே நடந்தும் விடலாம், சில நேரங்களில் நாம் நினைக்காத விடயங்கள் எமக்கு நடக்கலாம் இதற்குக் காரணம் சந்தர்ப்பம் சூழ்நிலை என்று கூறினாலும் எம் மனது என்றோ போட்ட கணக்கு அது இன்று நிறைவேறியுள்ளது என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

என்று நல்வழியிலே ஔவையார் கூறியிருக்கின்றார். இதைத் தான் நேரம் வரக் கூடிவரும் என்றும் கூறுவார்கள். எப்படித்தான் நீரூற்றி வளர்த்தாலும் பருவத்தால் அன்றிக் கனி தராது மரம்.

அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா

**07**

என மூதுரையிலே அதே ஔவையாரே கூறியிருக்கின்றார். அவர்கள் அன்று கூறினார்கள். அதை எப்படி இன்று ஏற்றுக் கொள்வது? என்று சந்தேகப்பட்டு விட முடியாது. நாம்

முன்னெடுக்கின்ற காரியங்கள் பல தடைகள் வந்து இறுதியில் அதற்குரிய காலமும் நேரமும் வருகின்ற போது வெற்றியையே தருகின்றது என்பதை அனுபவப் பாடமாக நாம் கற்றிருக்கின்றோம். பல முறை முயற்சித்து தோல்வி கண்டு இறுதியிலே வெற்றியடைந்தார் தோமஸ் அல்வா எடிசன். ஒவ்வொரு முறை தோற்கும் போதும் "இவ்வளவு பொருள்களைக் கொண்டும் பல்பை எரிய வைக்க முடியாது" என்ற உண்மையைக் கற்றுக் கொண்டேன் என்கிறார் தோமஸ் அல்வா எடிசன். தவறுகள் எமக்குக் கற்றுத் தரும் பாடம் எந்த நூல் களும் கற்றுத் தருவதில்லை. காலம் ஏற்படுத்தும் காயத்தின் வலி இன்பத்தின் முதலீடு என்றே கருத வேண்டும். "தன் மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னைச் சிற்பமாகும் என்று கல்லுக்குத் தெரியாது" என்று அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் கூறியிருக்கின்றார். எனவே ஒவ்வொருமுறையும் காயப்படும் போதும் ஏதோ ஒரு பெரிய மகிழ்ச்சி காத்திருக்கின்றது என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை "நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலர் அல்ல. அசையாமல் நிற்கும் இமயமலை போன்றது" என்று காந்தியடிகள் கூறிய வார்த்தைகளை மனதிலே கொள்ள வேண்டும். உலகில் வென்றவர்கள் எல்லாம் எமக்குச் சொல்லித்தரும் பாடம் இதுவாகவே இருக்கின்றது.




ஏனென்றால், காலம் கற்றுத்தரும் பாடம் எந்த ஆசிரியனும் கற்றுத்தர முடியாது. காலமும் நேரமும் அறிஞர்களை விட மேதாவிகள்.

இலையுதிர்காலம் வந்தால் நாம் விரிவுரை நடத்தாமலே மரங்கள் இலைகளை உதிர்த்துக் காட்டிவிடும். காலத்தையும் நேரத்தையும் எந்தவிதத் தடையும் போட்டுத் தடுத்துவிட முடியாது. அது கவலைகளைத் துடைத்து எறிந்துவிட்டுப் போகும். துன்பங்களைக் கழுவிவிட்டு கண்டுகொள்ளாமலே போய்விடும். சிலநேரங்களில் காயங்களையும் தந்துவிட்டுப் போகும். ஆனால், நடக்க வேண்டிய நல்ல விடயங்கள் சில நேரத்தில் சொல்லிக் கொள்ளாமலே நடந்துவிடும்.

செல்லுகின்ற வாழ்க்கைப் பாதையிலே பல விடயங்களைக் கற்றுக் கொள்ளு கின்றோம். அதன் படியே தொடருகின்றோம். பிரதிஸ்டம், அனுமானம், ஸ்வாதி என்னும் மூன்று விடயங்கள் மூலம் எமது வாழ்க்கை தொடருகின்றது. இதில் பிரதிட்சம் என்பது கண் முன்னால் காண்பதை விளங்கிக் கொள்ளல், அனுமானம் என்பது இது இப்படி இருப்பதினாலே அது அப்படி இருக்கும் நீ இதைப் பெறவில்லையென்றால், உனக்கு இது நடக்கும் என்று நினைத்துப் பார்த்தல், ஸ்ருதி என்பது முன்னோர்களின் மொழி. அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல். இவ்வாறு முன்னோர்கள் சொன்னதை அப்படியே சில விடயங்களில் ஏற்றுக் கொள்ளுகின்றோம். இல்லையென்றால், அவற்றைக் கொண்டு எம்மைத் தீர்மானிக்கின்றோம். இல்லையென்றால், கண்முன்னால் காண்பது மட்டுமே சரி என்று எடுத்துக் கொள்ளுகின்றோம். ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கும் போது பிரதிஸ்டம், அனுமானம், சுவாதி இதில் ஏதாவது ஒன்றைப் பிரதியீடு செய்து பார்க்கின்றோம். அனைத்தும் எமது மூளைப்பதிவுகளாகி எம்மை வழிநடத்துகின்றன.

ஆணி அடித்து மரத்தில் வைத்தது போல் ஆழமான சிந்தனைகள், அதேபோல இருளில் கிடக்கும் சிந்தனைகள் இவற்றையெல்லாம் எழுத வைக்கும் பல நிகழ்வுகள் அத்தனையும் எமக்குக் காலம் போதிக்கும். வாழ்க்கையும் நேரமும் எங்களுடைய இரண்டு ஆசிரியர்கள். எப்படி நேரத்தை பாவிக்க வேண்டுமென்று வாழ்க்கை எங்களுக்குக் கற்பிக்கின்றது. நேரம் வாழ்க்கையை எங்களுக்குக் கற்பிக்கின்றது. ஒரு கவலையில் நாம் இருக்கின்ற போது நேரம் நீண்டு கொண்டு போவதுபோல உணருகின்றோம். ஆனால், ஒரு ஆசையை நாம் நிறை

வேற்ற வேண்டுமென்றால், அதே நேரம் மெதுவாக ஊர்ந்து செல்வது போல உணரு வோம். அனைத்தும் எம்முடைய உணர்வுகளே. ஆனால், காலமும் நேரமும் எம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கின்றன.

அறிவெனப்படுவது படித்த அறிவு, பட்ட அறிவு என்று இரண்டு வகைப்படு கின்றது. இதில் படித்த அறிவை விடப் பட்ட அறிவே எம்மைப் பட்டை தீட்டுகின்றது. அதனாலேயே வயோதிபர்கள் இறக்கின்ற போது ஒரு நூலகமே எரிகின்றது என்கின்றார்கள். அவர்களிடமே பட்ட அறிவு பல பக்கங்களை விளக்கமாக எடுத்துக்காட்டியிருக்கின்றது. அறிவைத் தேடிப் பெற காலம் கைகொடுக்க அக்காலத்தின் காட்சிப் படிமங்களையும், மூளைப்பதிவுகளையும், எமக்குள் ஏற்படும் எதிர்காலக் கனவுகளையும் முயற்சி, நம்பிக்கை, உண்மை என்னும் துணைக்கருவிகள் கொண்டு தொழிற்படுவோம். எமக்குக் காலம் நல்ல நேரத்தை தேடித்தரும்.

இந்த நிமிடத்தில் எத்தனை உயிர்கள் பிறக்கின்றன. எத்தனை உயிர்கள் இறக்கின்றன. அந்த நேரத்தில் ஏற்படும் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் எத்தனை பேர் கொலைகாரர்கள் ஆகின்றார்கள். அந்த நேரத்தில் ஏற்படும் கவலையை பொறுக்க முடியாமல் எத்தனை பேர் தற்கொலை செய்கின்றார்கள். ஒரு நிமிட வலியைப் பொறுக்க முடியாமல் உயிரைத் தொலைப்பவர்கள் அடுத்த நிமிடம் ஏற்படுகின்ற இன்பத்தைத் தொலைத்து விடுகின்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குக் காலம் பதில் சொல்லுகின்றது, காலம் தீர்த்து வைக்கின்றது. அப்போது கோழை வீரனாகின்றான், வீரன் கோழையாகின்றான்.

(வெற்றிமணி ஐப்பசி மாத இதழ் 2018)

பூமிப்பந்தில் பிறந்த நாம் அனைவரும் பூமியில் அனைத் திற்கும், எப்படியும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், பூமியில் எமக்கென்று எதுவுமே சொந்தமில்லை என்பதே உண்மை. இதுபற்றி பகவத்கீதையிலே அழகாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. "நாம் எதைக் கொண்டு வந்தோம். எதை இழப்பதற்கு, இன்று எமக்குச் சொந்தமானது. நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாகும். எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதை நீ கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ, அது நாளை வேறு ஒருவருடையதாகிறது" வேறு ஒருவருக்குச் சொந்தமாகும் போது அதனை மற்றவர்க்குப் பொருத்தமானதாக விட்டுச் செல்ல வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதர்களுக்கும் இருக்கின்றது. எமக்காகவே வாழ வந்த நாம் சூழல், சுற்றம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு தனியிடத்தைப் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்தச் சூழல் சுற்றத்தை எப்படி நாம் அமைத்துக் கொள்ளுகின்றோம். அந்தச் சூழலை எவ்வாறு மாற்றியமைக்கின்றோம் என்பதும் சிந்திக்க வைக்கும் விடயமாகவே கொள்ளவேண்டும்.

இந்த வாழ்க்கையில் நாம் வாழுகின்ற சமூகத்திற்கு எதனை விட்டுச் செல்கின்றோம். எதனை வழங்குகின்றோம் என்பதுவே நாம் அலச வேண்டிய முக்கிய விடயமாகும்.

நான் என்பதைச் சுற்றியேதான் அனைத்தும் அடங்கியிருக் கின்றன. நான் என்னுடைய குடும்பம், என்னுடைய நண்பர்கள், அயலவர்கள் என என்னைச் சுற்றி அமைகின்ற வாழ்க்கை பிறருக்குப் பயன்படும், பயன்படுத்தும் பட்சத்தில் சமூக நோக்கு புலப்படுகின்றது. யாரால் அதிக உதவிகள் கிடைக்கின்றதோ. அவர்களிடம் அக்கறையும், பிணைப்பும் இருக்கும் அல்லவா!

கிடைக்கின்ற உதவிகளுக்கு ஏற்பக் கொடுக்கும் போதே சமூக அக்கறை வெளிப்படும். உதாரணமாக ஒரு நாட்டிடம் இருந்து உதவிகள் பெறுகின்ற நாம், நாம் வாழுகின்ற நாட்டிற்கு எந்தவித உதவிகளும் செய்யாது, ஏனோதானோ என்னும் போக்கில் இருப்பது எந்தவிதத்தில் நியாயம்? அது நாம் வாழும் எமது சமூக சிந்தனையாக முடியுமா என்பது கேள்விக்குறி. "நாடென்ன செய்தது உனக்கு என்று கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு என்று நினைத்தால் நன்மை உனக்கு" என்று கண்ணதாசன் வரிகளில் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய படத்தில் பாடி நடித்திருக்கின்றார். வாழுகின்ற வாழ்க்கையில் வளங்களை நாம் பெறுவதை பெற்ற இடத்திலேயே வழங்குவதே நியாயம். உதவி செய்வது என்றால், பணம் கொடுப்பது மட்டுமல்ல. உபத்திரவம் செய்யாமல் இருப்பதும் உதவியேதான்.

வீதியைச் சுத்தம் செய்யும் கடமை அரசாங்கத்திற்குரியது என்றால் அதனை அசுத்தமாக்காது வைத்திருக்கும் கடமை வாழுகின்ற பிரஜைகளுக்கு உரியது. பிரயாணம் செய்கின்ற வாகனத்தில் கீறுவது, சப்பாத்துக் காலைத் தூ க்கி முன் இருக்கையில் நீட்டி வைத்துக் கொண்டு அமர்வது வீதிக்கு வீதி குப்பைத் தொட்டிகளைக் கண்டு அதற்குள் குப்பைகளைப் போடாது, அருகே நிலத்தில் போட்டுவிட்டுப் போவது போன்ற காரியங்களைச் செய்யும் பலரைப் பார்த்திருக் கின்றேன். இவ்வாறான சின்னச் சின்னக் காரியங்களை நாம் அசட்டையீனமாகச் செய்வதும் நாம் வாழும் நாட்டிற்கு செய்கின்ற தீமையாகவே அமைகின்றன.

சுயநலவாதியாய் இருப்பது தவறல்ல. ஆயினும் சுயநலத்தில் ஒரு தவறைச் செய்யும் போது அது மனதை உறுத்திக் கொண்டே இருக்கும். என்னுடைய சுயநலத்திற்காக சுற்றியுள்ள மனிதர்களை எந்த அளவிற்குப் பாதிக்கிறேன் என்பதைக் கவனிக்காது விடல் பெரிய தவறாக அமைகின்றது. எங்கள் சுய நலத்திற்காகச் எங்களைச் சுற்றியுள்ளவர்களைப் பலிக்காடாக பணத்திற்காக மட்டுமல்ல புகழுக்காகக் கூட மாற்றுவது பெரிய தவறாக அமைகின்றது இவை தவிர்க்கப்பட்டால் சுயநலவாதியாக இருப்பதற்குக் கவலைப்படத் தேவையில்லை.

வள்ளுவரே சொல்லியிருக்கின்றார்.

“தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்”

ஒருவன் தன்னை நேசிப்பானேயாயில், அவன் செய்கின்ற தீங்கு திரும்பவும் அவனுக்குத் திரும்பக் கிடைக்கும் என்று தெரிந்து பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டான். எனவே “முற்பகல் செய்யிற் பிற்பகல் விழையும்” என்னும் பழமொழி இதற்குப் பொருத்தமானதே.

எனவே சுயநலவாதியாக இருக்கும் மனிதர்கள், இலாபம் கருதியும் அவ் இலாபம் பிறருக்குத் தீங்கை விளைவிக்காமலும் செயற்பட வேண்டியது அவசியம். இலாபம் என்பது பணத்தால் மட்டும் இருக்க வேண்டியது அவசியமில்லை. பேச்சால், அன்பால், பரிவால் கூட இலாபம் கிடைக்கலாம்.

நெருங்கிப் பழகுபவர்களுடனும், அதிகமாகப் பழகுபவர்களுடனும் எமக்கு அக்கறை அதிகமாக இருக்கும். ஆனால், நாம் வாழும் பூமி, அதில் வாழும் உயிர்கள் என்னும் பொது சிந்தனையுடன் பழகும் போது பரந்துபட்ட மனப்பாங்கு எம்மிடம் ஏற்படுகின்றது. இச்சிந்தனை உள்ளவர்களே, விஞ்ஞானிகள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், அறிவியலாளர்கள், தத்துவ ஞானிகள், ஏன்? எழுத் தாளர்கள் கூட பொதுநலவாதிகளாகவே அமைகின்றார்கள். இது சமூகம் பற்றிய பார்வையை விரிவுபடுத்துகின்றது.



சமூகத்தில் மாற்றம் உண்டாக்க நினைப்பவர்களே சிறந்த எழுத்தாளர்கள் என்று நான் நினைக்கிறேன். எல்லாவற்றிற்கும் தலையாட்டி எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு நடப்பதற்கு எமது மண்டையில் மூளையைப் படைத்திருக்கத் தேவையில்லை. நடக்கின்ற காரியங்களுக்கு அர்த்தம் என்ன எனக் கேட்டுத் தெளிவுறாத வாழ்க்கை பண்பட்ட வாழ்க்கையாகாது. அறிவும் அனுபவமும் சேர்ந்து கொள்ள அதை வைத்துக் கொண்டு தீர்மானங்களை எடுக்க முடியாது பயத்திற்கு அடிமையாகும் மனிதன் பக்குவப்படாத மனிதனாவான்.

யார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் எமது சொந்த அறிவால் எண்ணிப் பார்க்கச் சொன்ன சோக்கிரட்டீஸ் வார்த்தைகள் போல் வாழ்ந்ததனாலேயே விஞ்ஞானிகளின் வியத்தகு சாதனைகள் வெளிப்பட்டது. பெண்ணடிமையைப் புரிய வைக்க பாரதிக்கு ஒரு நிவேதிதா அம்மையார் தேவைப்பட்டது. கடவுள் தான் உயிரினங்களைப் படைத்தார் என்ற கோட்பாடு டார்வின் பரிணாமக் கோட்பாட்டினால் உடைக்கப்பட்டது. பூமியை மற்றைய கோள்கள் சுற்றுகின்றன என்ற பூமி மையக்கோட்பாடு கலிலியோ மூலம் சூரியனையே மற்றைய கோள்கள் சுற்றுகின்றன என்னும் சூரிய மையக்கோட்பாட்டின் மூலம் மறுக்கப்பட்து. இவ்வாறு சமூகத்தில் மாற்றம் கொண்டு வந்தவர்கள் கூட சமூகப் பற்றாளர்களே.

வாழ்க்கையின் வசதிகள் பெருகுவதற்குக் கண்டுபிடிப்புக்கள் காரண மாகின்றன. அறிவியல் மனிதர்களைச் சிந்திக்கச் செய்து மூடக் கொள்கையில் இருந்து அவர்களை முழுமனிதர்களாக மாற்றுகின்றன. தத்துவங்கள் மனதார மனிதன் சிந்தித்துச் செயல்படுவதற்கான உந்துதலை ஏற்படுத்துகின்றன. திருவள்ளுவரின் சமூக அக்கறையே திருக்குறளை எழுதத் தூண்டியது, சுவாமி விபுலானந்த அடிகளார், சுவாமி விவேகானந்தர் போன்றோரின் சமூக அக்கறையே அனைத்து மக்களுக்காகவும் அவர்களை வாழத் தூண்டியது,

முல்லைக்குத் தேர் தந்த பாரி,

தன்னுடைய குறும்பொறை நாடு முழுவதையும் பாணருக்கு வழங்கிய ஓரி

மயிலுக்குப் போர்வை தந்த பேகன்,

நீலநாகம் தந்த கலிங்கத்தை குற்றாலநாதருக்கு வழங்கிய ஆய்

அதிக நாள்கள் வாழும் நெல்லிக்கனியை அவ்வைக்கு வழங்கிய அதியமான்

நண்பர்கள் வாழ்க்கை நடத்துவதற்காக வசதிகள் அனைத்தையும் வழங்கிய நள்ளி

ஈர நன்மொழி கூறிய தேர் வழங்கும் பெருவள்ளல் காரி

இவ்வாறு கடையெழு வள்ளல்கள் கொடை தந்து குலம் காத்தார்கள். பாரி நினைத்திருந்தால், அரண்மனை சென்று முல்லைக்கு பந்தல் போட ஆவன செய்திருக்கலாம். ஆனால், செய்ய நினைப்பதை நினைத்த மாத்திரத்தில் செய்வதே சிறப்பு. நாளை என்று நினைத்தால், ''ஆறிய கஞ்சி பழங்கஞ்சி" என்னும் பழமொழி போலவே அமையும்.

சமூக மாற்றத்திற்கு பத்திரிகையின் பங்கும் பத்திரிகைச் சுதந்திரமும் அவசியம். நடந்த உண்மை விடயங்கள் எமது வரலாற்றுக்கு பங்கம் விளைவிக்கும் என்று மறைக்கப்படுமானால் உண்மைச் சரித்திரம் உறங்கிப் போகும். வரலாற்றுப் பாடம் புகழாரப் பாடமாகவே முடியும். எழுதுவது ஒன்று செய்வது ஒன்றாக அமையுமானால், எதிர்காலச் சமூகத்திற்கு பொய்மையே தரவாகக் கிடைக்கும். எழுதுவதும் செய்கையும் வேறானால்,

"அன்புடைமை அதிகாரத்தை
ஆசிரியர் கற்பிக்கின்றார்
கையில் பிரம்புடன்"

என்னும் கழனியூரான் கவிதையைப் போன்றே எழுத்து சுதந்திரம் அமையும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் சமூகத்தை மனதில் கொண்டு வாழ்க்கைப் பாதையைக் கொண்டு செல்லல் அவசியம்.

## காலந்தோறும் தமிழ்க் காதல்?

"**வி**ழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவு" என்று காதலுக்கு அழகான வரிவடிவம் தந்திருக்கின்றார் கவிஞர் வைரமுத்து. காதல் இல்லாது வாழ்க்கை ஏது! உறவுகள் ஏது! ஏன் உலகுதான் ஏது! வாழ்க்கை வட்டத்திலே உண்மையும், அழகும், அபூர்வமும், அற்புத உணர்வும் ஏற்படுத்தும் ஒரு உணர்வு உண்டென்றால், அது காதலே! மனிதன், விலங்குகள், பறவைகள் உயிர்கள் அனைத்திலும் இழையோடிக் காணப்படும் இவ்வுணர்வு வாழ்க்கை முழுவதும் தேவையானதாகவும் அகற்ற முடியாததாகவும் பெற்றோரின் பாசம் போல் தொடர்ந்து வரும் உணர்வாகவும் விளங்குகின்றது. காதல் என்றவுடன் காத்திருக்காமல் எங்கள் முன்னே தென்படும் தாஜ்மஹாலும், வடமொழிக் காதல் மீராவும், தமிழ் மொழிக்காதல் ஆண்டாளும் ஆண்டாண்டுக் காலமாகக் காதலுக்கு அடையாளங்களாகக் காணப்படுகின்றனர்.

கல்லும், மண்ணும், கடலும், மலையும், உலோகங்களும் எனத் தொடரும் இயற்கை வனப்புக்களை அழகு செய்ய இரத்தமும் சதையும் கொண்டு உணர்வுகளுடன் நடமாடிய மனிதன் தோன்றக் காரணமான உணர்வாக இது காணப்படுகின்றது. அதனாலேயே காதல் முதலில் சங்ககாலத்தில் காமமாகவே சொல்லப்பட்டது.

ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து தமக்குள் இன்பந்துய்த்து வாழ்தல் என்று காதல் பற்றி நச்சினார்க்கினியார் அழகான விளக்கம் தந்துள்ளார். இவ்வுணர்வினை சங்கப்பாடல்கள் உணர்த்திய அளவு வேறு எக்காலத்துப் பாடல்களும் உணர்த்தவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும். தற்காலப் பாடல்களில் கூட சங்கப்பாடல்களின் தாக்கத்தினை அதிகமாகக் காணக் கூயதாக வுள்ளது. காதலும் வீரமும் கலந்து கிடந்த சங்ககாலத்திலே அகத் திணைப் பண்பு தழுவிய காதல் பாடல்கள் மனதுக்குள் இனிமை பயப்பனவாகக் காணப்படுகின்றன. செம்புலப்பெயல் நீரார் எனப் படும் புலவர் குறுந்தொகையிலே,

09

“யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
நீயும் யானும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே”

உன் தாயும் என் தாயும் யாரோ தெரியாது? எனது தந்தையும் உன் தந்தையும் எவ்வகையிலும் உறவினர்கள் இல்லை. நீயும் நானும் கூட இதற்கு முன்னர் அறிமுகமானவர்கள் இல்லை. ஆனால், செம்மண்ணில் மழை நீர் கலந்தால், அந்நீரும் செந்நீராய் கலத்தல் போல நம் இருவர் நெஞ்சங்களும் ஒன்றாகக் கலந்துவிட்டன எனக் கீழ்க் குறிப்பிட்ட பாடலிலே காதலின் சிறப்பைப் புலவர் விளக்கும் பாங்கானது காதலுக்கு முகவரி தேவையில்லை. உறவுகள் பார்ப்பதில்லை. இரண்டு இதயங்கள் மட்டுமே போதுமானது இரண்டறக்கலப்பதற்கு என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

குறுந்தொகையிலே தலைவியின் நலத்தினைப் பாராட்டித் தலைவன் ஒரு வண்டினைப் பார்த்துக் கேட்பதாக இறையனார் படைத்திருக்கும் இப்பாடலிலே,

“கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயற்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ? நீ அறியும் பூவே”

அதாவது பூக்களிலே இருக்கின்ற தேனை ஆராய்ந்து உண்ணுகின்ற பண்புடைய அழகிய சிறகினைப் பெற்ற வண்டே! உண்மையைச் சொல் மயில் போன்ற மென்மையும், வரிசையான பற்களும் கொண்ட என் தலைவியின் கூந்தலைக் காட்டிலும் நறுமணம் கொண்ட பூவை நீ அறிந்ததுண்டா என்று பாடுகின்றார். உலகின் எத்தனை சிறப்புக்கள் இருந்தாலும் அவை அத்தனையும் காதலியின் கால் தூசுக்குச் சமம் என எண்ணத் தோன்றும் மயக்கத்தை ஏற்படுத்தும் தன்மை காதல் உணர்வுக்கு உண்டு.

மறைவாய்க் காதலித்து, யாரும் அறியாது உடன்போக்காய் உற்றார், சுற்றம் துறந்து, வசதி வாய்ப்புக்களை உதறித் தள்ளி காதலனே துணை. அவனன்றி வேறு எதுவுமே தேவையில்லை என்று எண்ணத் தோன்றும் உணர்வு காதலுக்கு மட்டுமே உள்ளது. இந்த உணர்வினைச் சித்தரிக்கும்

ஒரு குறுந் தொகைப் பாடலினை கூடலூர் கிழார் பாடியிருக்கின்றார்.

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளையுண் கண் குய்ப்புகை கழுமத்
தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே”

தமை விட்டுப் பிரிந்து சென்ற மகள் தன் காதலனுடன் எப்படி வாழ்கின்றாள் என்று அறிந்து வரும் படி செவிலித் தாயிடம் கூறி நற்றாய் அவளை அனுப்புகின்றாள். அதைப் பார்த்து வந்து செவிலித்தாய் கூறிய வார்த்தைகளே இப்பாடலிலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. புளித்த தயிரை காந்தள் விரல்களால் பிசைந்து, தாளிதம் செய்யும் போது அது கருகி விடாது பட்டுச் சேலை முந்தானையிலே கைகளைத் துடைத்துவிட்டு தாளிதத்தை முறையாகச் செய்து சமைத்த உணவினைக் கணவ னுக்கு இடும்போது அவனும் இனிமை, இனிமை என்று சொல்லி உண்டான் என்று நற்றாயிடம் கூறுகின்றாள்.

காதலனின் சுவைக்காகவும் மகிழ்வுக்காகவும் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கக் கூடிய தன்மையை ஒரு பெண் காதல் வசப்படும் போது பெற்றுக் கொள்கின்றாள். இதற்காக பல்கலைக்கழகமோ, கல்லூரியோ சென்று கற்கவேண்டும் என்ற தேவையில்லை. எமக்குள்ளேயே சுரந்து, எமக்குள் ளேயே தொடர்ந்து, வேளை வரும்போது வெளிப்படும் இக்காதல் உணர்வு இப்பிரபஞ்சத்தின் பெருமைமிக்க சக்தியாகக் காணப்படுகின்றது.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய ஐந்திணை ஐம்பது என்னும் நூலிலே காதலின் தியாகத்தினை ஒரு அழகான பாடல் மூலம் மாறன் பொறையனார் எடுத்துக்காட்டியுள்ளார்.

“சுனைவாய்ச் சிறுநீரை எய்தா தென்(று) எண்ணியப்
பிணைமான் இனி துண்ண வேண்டிக் கலைமான்தன்
கள்ளத்தின் உச்சும் சுரமென்பார் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி“

சுனையிலே சிறிதளவு நீரேயுள்ளது. ஒரு மானே அருந்தும் அளவுள்ளது. ஆண்மான் குடிக்காது விட்டால் பெண் மான் குடிக்காது. எனவே ஆண்மான் சுனைநீரில் குடிப்பது போல் வாயை வைத்துப் பாவனை செய்து பெண்மானை குடிக்கச் செய்கிறது. காதலிலே விட்டுக்கொடுப்புக்கள், தியாகங்கள், அன்புப் பரிமாற்றங்கள் அளவுக்கதிகமாகவே பேணப்படுகின்றன.

பல்லவர் காலத்துத் தோன்றிய ஆண்டாள் பாடல்களிலே ஒரு தலைக்காதல் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் சிவபெருமானை தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கொண்டு பல பாடல்கள் பாடியுள்ளார்.

சோழர்காலத்தில் புகழேந்தி, சயங்கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர் போன்றோர் காதல் சுவை மிக்க பாடல்கள் மூலம் காதல் உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். அதேபோல் புகழேந்தி நளவெண்பாவிலே நளன் தமயந்தி மேல் கொண்ட காதலினை அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

நாயக்கர் காலத்திலே குற்றாலக்குறவஞ்சியில் திரிகூடராசப்பக்கவிராயர்

வாகனைக்கண் டுருகுதையோ - ஒரு
மயக்கமதாய் வருகுதையோ
மோகம்என்பது இதுதானோ - இதை
முன்னமே நான் அறியேன்! ஓ!
ஆகம் எல்லாம் பசந்தேனே - பெற்ற
அன்னைசொல்லும் கசந்தேனே
தாகம் அன்றிப் பூணேனே - கையில்
சரிவளையும் காணேனே.

எனக் காதலினால் ஏற்படும் உணர்வுகளைக் கொண்டு வந்திருக்கின்றார்.

தற்காலக் கவிஞர்களின் அற்புதமான கவிவரிகள், காதலை வெகுவாக வெளிப்படுத்தியுள்ளன. கவிஞர் மீரா அவர்கள் ஓரிடத்தில் அற்புதமான புதுக் கவிதையினைத் தந்துள்ளார்.

"ஒருமுறை நீ என்னைப் பார்த்தாய்
நெஞ்சில் முள் குத்தியது
முள்ளை முள்ளால்தானே எடுக்க முடியும்
மீண்டும் ஒருமுறை என்னைப் பார்"

கற்றறியாத பாமரர்கள் கூட நாட்டுப்பாடல்கள் மூலமாகத் தமது காதலை வெளிப்படுத்தியிருக்கின்ற பாங்கு ரசித்து இன்புற வைப்பதுடன் இளைஞர்கள் உள்ளத்தில் காதல் என்னும் பயிருக்கு விதை ஊன்றுவதாக உள்ளன.

"கண்டாங்கி பொடவை கட்டிக்
கைநிறையக் கொசுவம் வச்சு

இடுப்பில சொருகிறியே முனியம்மா – அது
கொசுவம் அல்ல எம் மனசு முனியம்மா"

முண்டாசுக்கவி பாரதி கூட காதல் காதல் காதல். காதல் போயின் சாதல் சாதல் சாதல் என்றார். ஆனால், மனிதன் தோன்றியது தொடங்கி தொடர்ந்து வரும் காதலுக்கு எதிர்ப்புகளும் தொடர்வது இயற்கையாகவே ஏற்படுகின்றது. மரபுகள், கலாச்சாரம், சாதி, மதம், என மனிதனால் உருவாக்கி வைக்கப்பட்ட கட்டுக்கோப்புக்கள் காதலுக்குத் தடை போடுகின்றன. முறை தவறிய காத லினால் தமது வாரிசுகள் வாழ்க்கை முறை தவறிப் போய்விடுமோ என்று அஞ்சுகின்றனர். இயல்பாகவே தோன்றுகின்ற மகிழ்ச்சியை இடையிலே முறிக்க முயற்சிக்கின்றனர்.

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்
பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய் கின்றார்
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க

என்று தற்போதைய நிலமையினை பாரதிதாசன் தன் பாடல் வரிகள் மூலம் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

பகட்டுக்காகவும், பொழுதுபோக்குக்காகவும், எதிர்கால சிந்தனை எதுவுமின்றி விளையாட்டாக காதலென்னும் போர்வையில் பெண்கள் ஆண்களையும், ஆண்கள் பெண்களையும் ஏங்க வைத்து ஏமாற்றும் காதல், காதலுக்கே ஒரு அவமானமாகக் கருதப்படுகின்றது. எனவே காதல் செய்வீர்! காதல் செய்வீர்! காலம் முழுவதும் இணைந்திருக்க கருத்தில் கொண்டு, உண்மை அன்பை முதலீடு செய்து, வாழ்வில் முயன்று காதலில் வெற்றி காணப்பீர்!

(வெற்றிமணி மாசி மாத இதழ் 2017)

# ஈழத்துச் சிறுவர் இலக்கிய உலகில்

**மு.க. சுப்பிரமணியம் அவர்களின் பங்கும்**
**மாணவர்கள் முன்னேற்றத்தில் அவர் ஆற்றிய பணிகளும்**

இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியவர்கள். இன்றைய சிறுவர்களைச் சிறப்பான முறையில் வளர்த்து எடுக்கும் போதே நாளைய உலகம் சிறப்பான உலகமாகத் திகழும் என்னும் நோக்கத்துடனேயே கதைகளுக்கூடாகவும் பாடல்கள் மூலமும் அறிவுரை புகுத்தும் இலக்கியங்கள் தோன்றின.

சிறுவர்களுக்காக எழுதப்பட்ட இவ் இலக்கியத்தின் கதாநாய கர்களாக பிள்ளைகள் விரும்புகின்ற பிராணிகளும் விலங்குகளும் அதிகமாக வந்து போவார்கள். குழந்தைகள் கற்பனாசக்தி மிக்கவர்கள். எனவே இக்கதைகளில் மிருகங்கள் பேசும், பறவைகள் பாடும். வண்ணவண்ண நிறங்களிலும் அழகான கண்ணைக் கவரும் படங்களுடனும் கவர்ச்சியாக சிறுவர்களைக் கவரும் வகையில் இவ் இலக்கியத்தைப் படைப்பார்கள்.

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேலே ஏறி வா
மல்லிகைப் பூக்கொண்டு வா

என்று நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டிய தாயின் வாய்மொழி இலக்கியமாகத் தொடங்கியதே சிறுவர் இலக்கியம். பாட்டி வடை சுட்ட கதை போன்று குழந்தைகளை உறங்க வைக்கத் தாய் கூறிய கதையிலிருந்து சிறுவர் கதைகள் ஆரம்பமாகின. தாயின் ஆராரோ ஆரிவரோ என்ற தாலாட்டுப் பாடலுடன் சிறுவர் பாடல்கள் தொடங்கின.

சிறுவர்களுக்கான கதைகள் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், அறிவியல் கட்டுரைகள், சித்திரக் கதைகள், நீதிக்கதைகள், துணுக்குகள் என சிறுவர் இலக்கியத்துள் அடங்கு கின்றன.

**10**

ஈழத்திலும் மிகச் சிறப்பான சிறுவர் இலக்கியத்தின் கர்த்தாவாக அநு.வை நாகராஜன் (1933 – 2012) அவர்களைக் குறிப்பிடலாம். இவர் சிறுவர்களுக்காக

தேடலும் பதிதலும் என்னும் சிறுவர் அறிவியல் நூல் - 1992
அவன் பெரியவன் என்றும் சிறுவர் குறும் நவீனம்
சிறுவர் சிந்தனைக் கதைகள் - 2002
சிறுவர் கவிதையில் புதிய சிந்தனைகள் 2005
சிறுவரும் அவர்கள் அறிவுசார் சாதனங்களும் - 2005
சிறுவர் பழமொழிக்கதைகள்
போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

இவ்வாறு சிறுவர்களுக்கான நூல்களை எழுதிய அ.நு.வை நாகராஜன் அவர்கள் போன்றே குழந்தைகளுக்கான முதல் முதல் வெளிவந்த சிறுவர் மாத இதழாக வெற்றிமணியை வெளியீடு செய்து அதன் மூலம் சிறுவர் இலக்கியங்களுக்குப் பங்களித்த ஆ.மு.ளு என்று அழைக்கப்படும் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களும் பெருமைக்குரியவர்.

தொலைநோக்குச் சிந்தனை உள்ள ஒருவரால் மாத்திரமே இவ்வாறாக மாதம் ஒரு சஞ்சிகை அதுவும் முழுக்க முழுக்க சிறுவர்களுக்காக மட்டுமே வெளியிட முடியும். இதற்கு ஆசிரியப் பணியை அவர் மேற்கொண்டது மட்டுமல்லாமல் மாணவர்களுடன் உள்ளன்புடன் பழகியமையும் காரணமாகும்.

அத்துடன் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1980 இல் மறைந்துவிட்டாலும், இன்றும் பேசப்படும் மனிதராக இருப்பதற்கும் ஆசிரியத்தொழிலில் மட்டுமே நின்றுவிடாது மாணவர்கள் நலன் கருதி அவர் ஆற்றிய சேவைகள் தான் காரணமாக இருந்திருக்கின்றன.

இவர் மே மாதம் 14 ஆம் திகதி 1919 ஆண்டு குரும்பசிட்டியில் ஒரு விவசாயக் குடும்பத்தில் திரு.திருமதி கந்தவனம் தம்பதியனருக்கு எட்டுப் பிள்ளைகளில் ஏழாவதாகப் பிறந்தார். கல்வியிலும் சமூகத்தொண்டிலும் நேரத்ததை அர்ப்பணித்தார். காங்கேசன்துறை வட்டாரக் கல்வி, விளையாட்டு, இவற்றின் அமைப்பாளராகவும் பரீட்சைக் காரியதரிசியாகவும் இருந்து அளப்பெரும் தொண்டுகள் ஆற்றி கல்விப்பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர் போன்றோரின் பாராட்டுதலைப் பெற்றார். அகில இலங்கை ஆசிரியர் கலாசாலையின் தமிழா சிரியர் சங்க உபதலைவராகவும். நுவரெலியா, முல்லைத்தீவு கிளைகளின் தலைவராகவும் காரியதரிசியாகவும் இருந்து பெரும் தொண்டாற்றினார். காங்கேசன்துறை ஆசிரியர் சங்கக் கிளையை ஆரம்பத்தவர்களில், இவர் முக்கியமானவர்.

இவர் 1964 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் காதலியார் சம்மளம் குளத்தில் அரசினர் தமிழ் பாடசாலை தலைமை ஆசிரியராக இருந்தார். அப்போது

அங்கு பயின்ற மாணவர்களை இடையில் படிப்பை நிறுத்தி கமத்திற்கு பெற்றோர் அழைத்துச்சென்றனர். அறுவடைக்காலத்தில் பெற்றோருக்கு பிள்ளகளின் உதவி தேவை என்பதனை அறிந்து அந்த நாட்களில் அரச அனுமதியுடன் விடுமுறை கொடுத்து பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் உதவினார். இதனால் மாணவர்களின் படிப்பை இடைநிறுத்தி கமத்திற்கு அழைத்துச்சென்று படிப்பை இடைநிறுத்தாது பாதுகாத்த பெருமை அமரர் சுப்பிரமணியம் அவர்களையே சாரும்.

ஆர்வம் மிகுந்த மாணவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்து மேற்படிப்பிற்கு வழிசமைத்துக் கொடுத்தார். இவ்வாறு மாணவர்களுக்கான கற்றல் வளர்ச்சிக்கு தன் எண்ணம் முழுவதையும் ஈடுபடுத்தி வந்தார். அவ்வேளையே யாரும் அக்காலத்தில் நினைத்திருக்காத மாதாந்த சஞ்சிகை ஒன்று மாணவர்கள் முன்னேற்றம் கருதி வெளியிட வேண்டும் என்ற தன் கனவை நனவாக்கினார்.

மாணவர்களைப் பரிட்சைக்குத் தயார்படுத்தல், அவர்கள் அறிவைத் தூ ண்டும் விதமான அறிவியல் கல்வியை மேம்படுத்தக் கூடிய கட்டுரைகளை கற்றோரிடம் இருந்து பெற்றுச் சஞ்சிகையில் பிரசுரித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டு நாவலப்பிட்டியில் ஆசிரியராக இருந்த வேளை, தினகரன் சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வந்த குறுக்கெழுத்துப் போட்டிகளின் சிறந்த விடை விமர்சனி என்னும் வெற்றி மணியை 1950 ஆண்டு வெளியிட்டார். போட்டிகளில் வெற்றி என்பதனைக் குறிக்க வெற்றி என்பதனையும் சுப்பிரமணியம் என்பதில் உள்ள மணியினையும் இணைத்து வெற்றிமணி எனப் பெயர் இட்டார்.

08 பக்கங்களில் ஆரம்பித்துப் பின் 16, 32, 59 என பக்கங்கள் தேவைக் கேற்ப அதிகரித்த வண்ணம் இருந்தன. அதன்பின் 1954 ஆண்டு முழுக்க முழுக்க மாணவர் பத்திரிகையாக வெற்றிமணி உருவெடுத்தது. மலையக மக்களின் கல்வி திட்டமிட்டு நசுக்கப்பட்ட வேளை அவர்களது கல்விக்கும் ஆற்ற லுக்கும் முதற்களம் அமைத்துகொடுத்தது. தான் ஆசிரியராகக் கடமை புரிந்த பாடசாலைகளில் எழுத்தாற்றல் மிக்க ஆசிரியர்களையும் மாணவர்களையும் வெற்றிமணியில் எழுதவைத்தார்.

வெற்றிமணியில் ஒரு சிறு மாணவன் மாடு பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தான். அக்கட்டுரைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெற்றிமணி வெளியிட்டு இருந்தது. மாடு பற்றி எழுதிய சிறுவனிடம் ஏன் மாடு வண்டி இழுக்கும் என்று எழுதவில்லை? எனக் கேட்டபோது, அவன் சொன்ன பதிலே ஆசிரியரை கவர்ந்தது. அவன் சொன்ன பதில் மாடு பாவம் வண்டி இழுக்கும் என்று சொல்ல தனக்கு கவலையாக இருக்கும் என்றானாம்.

ஜீவகாருண்யம் அச்சிறுவனின் உள்ளத்தில் தெய்வீக ஒளிபாய்ச்சியது. உடனே இக்கட்டுரையை சஞ்சிகையில் வெளியீடு செய்திருந்தார்.

மாடு
மாட்டிற்று 2 கொம்பு உண்டு.
மாட்டிற்கு ஒரு வாலுண்டு.
மாட்டிற்கு நான்கு கால்கள் உண்டு.

இக்கட்டுரையைப் பார்த்த வாசகர்கள், "ஏன் இப்படி தரமில்லாத கட்டுரையை பிரசுரித்தீர்கள்? என்று ஆசிரியரைக் கேட்டபோது "இந்த கட்டுரை வந்தபின்பே வெற்றிமணியில் பல சிறப்பான கட்டுரைகள் வரத்தொடங்கின. வாசகர்கள் படைப்பாளிகள் எல்லோருக்கும் இதனைவிட எம்மால் நன்றாக எழுத முடியும் என்று எண்ணத் தோன்றியது. எனவே எப்போதும் சிறப்பான ஆக்கங்கள்தான் வெளியிடவேண்டும் என்பது அல்ல. எழுத்தாளரை கிளர்ந்து எழச் செய்யும் வண்ணம் இப்படி சிலவற்றையும் செய்யத்தான் வேண்டும் என்றார். இதன் மூலம் இவருடைய ஆழ்ந்த தொலைநோக்குச் சிந்தனை புலப்படுகின்றது. ஊக்கமுள்ள ஒருவருக்கு இடம் கொடுத்தால், எதிர்காலத்தில் அவர் உச்சத்தைத் தொடுவார் என்னும் உயரிய நோக்கம் அவரிடம் இருந்ததனால், அந்த மாடு என்னும் கட்டுரை எழுதிய சிறுவன் பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளனாகவும் உருவெடுத்தார் என்பது யாம் அறிந்த செய்தியாகும்.

இதுமட்டுமன்றி வெற்றிமணியில் எழுதும் சிறுவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கும் முகமாக சில சமயம் அவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு நேரில் சென்று புத்தகங்களை வழங்கி அவர்களை மகிழ்ச்சியடையவும் வைத் துள்ளார். சிறுவர்களுக்காக இலக்கியம் படைப்பதிலும் சிறுவர்களே தமக்கான இலக்கியத்தைப் படைப்பது பாராட்டத்தக்கதே. மாணவர்களின் உயர்வே ஒரு நாட்டின் உயர்வு எனக் கருதி இத்தன்மையை ஊக்குவித்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் எல்லோராலும் போற்றப்படக்கூடியவர்.

இவருடைய இந்த நூற்றாண்டு காலப்பகுதியில் படைப்புலகம் இவரை நினைத்துப் பார்ப்பதுடன் பாராட்ட வேண்டியதும் அவசியமாகின்றது.

சாதனையாளர்கள் என்றும் சாவதில்லை
சாதனைகள் என்றும் மாள்வதில்லை – மனிதன்
வாழும்வரை மறக்கப்படுவதில்லை

(வெற்றிமணி வைகாசி இதழ் 2019)

# பல முதல்களின் முதல்வர் மு.க.சு. சிவகுமாரன்

**ப**ல முதல்களின் முதல்வராகிய வெற்றிமணியின் ஆசிரியரும் சிவத்தமிழ் சஞ்சிகையின் ஆசிரியருமான கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் B.F.A அவர்களின் வாழ்நாள் சேவைகளை இத் தருணத்தில் நினைத்துப் பார்க்கும் நாள்.

செய்யும் தொழிலும் செயலும் திறம்பட வேண்டுமானால், செய்பவர் திறமை திறம்பட இருக்க வேண்டியது அவசியம். கருவி அற்புதமானால், கருத்தா கருவிக்கு ஆற்றிய அர்ப்பணிப்பும் போற்றப்படவேண்டியதும் புரியப்பட வேண்டியதுமாகும். படைப் பாளியின் திறமை அறியப்பட்டாலேயே அந்தப் படைப்பின் வெற்றி புரியப்படும் வெற்றிமணியான விபரமும் புரியும்.

வெற்றிமணி பத்திரிகை தாயகத்தில் ஆரம்பித்து 69 வருடங்கள் ஆகின்றன. அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1950 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்த வெற்றிமணி அவர் மறைவின் பின் நின்று போக அவருடைய மகன் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் மீண்டும் தாயகத்தில் வெற்றிமணி மாணவர் காலாண்டு இதழாக இன்றும் வெளியீடு செய்து கொண்டு வருகின்றார். தாயகத்தில் ஏற்பட்ட சில பல சூழ்நிலைகள் காரணமாக தாமதங்கள் அங்கு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஆனால், ஐரோப்பாவில் இவர் புலம்பெயர்ந்து தன்னுடைய வாழ்க்கையைத் தளம் அமைத்த பின் மீண்டும் வெற்றிமணி பத்திரிகையை யேர்மனியில் ஆரம்பித்து இம்மாதம் (ஆனிமாதம் 1994 - ஆனிமாதம் 2019) 25 வருட வெற்றி காண்கின்றார். தற்போது இலண்டன், சுவிஸ், யேர்மனி ஆகிய நாடுகளில் பலரும் தேடும் சிறப்புப் பெற்ற இலவச வண்ணப் பத்திரிகையாக இப்பத்திரிகை வெளிவருகின்றது. இப்பத்திரிகை எவ்வாறு ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்டது என்னும் வரலாற்றை இத் தருணத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம்.

கணனியுகம் பிரபலமடையாத காலத்தில் வெற்றிமணி

பத்திரிகைக்கு படைப்புக்கள் ஆசிரியரிடம் கையெழுத்துப் பிரதியாக வந்தடையும். அப்போது அத்தனை கட்டுரைகளையும் வாசித்து தமிழில் அச்சடித்து (அக்காலத்தில் venus fonts மாத்திரமே இருந்தது) அக்கட்டுரையை அளவாக வெட்டி வெட்டி ஒட்டி, அவற்றிற்குரிய படங்களுக்குரிய இடத்தை மட்டையில் நீல மையால் கோடு போட்டு நேராக ஒட்டி விளம்பரத்துக்கு சதுரப்பெட்டி போலப் போடுகின்ற வசதிகள் அக்காலத்தில் கணனியில் இல்லாத காரணத்தினால், சதுரம் கீறியே அச்சகத்திற்குக் கொடுக்க வேண்டும். படங்களை வெட்டி ஒட்டிப் பின் கழட்டியே அச்சகத்திற்குக் கொடுக்க வேண்டியது அவசியம். தனியே நம்பரிட்டுக் கொடுக்கப்பட்ட படங்களை அவ்வவ் இடங்களில் அச்சகத்தில் சேர்ப்பார்கள். இவ்வாறு பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் ஆரம்பத்தில் ஒரு வருடகாலமாக கறுப்பு வெள்ளை வண்ணத்தில் வெற்றிமணி வெளிவந்தது. பின்னரே வெற்றிமணி வண்ணக்கலவையில் பிரகாசிக்கத் தொடங்கியது.

இத்தனை கடினத்தின் மத்தியில் ஆரம்ப காலத்தில் வெளியான வெற்றி மணியை வளர்த்தெடுத்து இன்றைய நவீன காலத்திற்குத் தன்னை இசைவாக்கம் அடைய வைத்து கண்ணையும் கருத்தையும் கவர வைக்கும் வெற்றிமணியாகத் திகழ்வதற்கு வழி செய்த வெற்றிமணியின் ஆசிரியர் கலாநிதி. மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் Number One சாதனைகளை சற்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

நுண்கலைப் பட்டம் B.F.A

இலங்கையில் முதன் முதலாக நுண்கலையில் கலைமாணி பட்டத்தை (Bachelor of Fine Arts) களனிப் பல்கலைக்கழகத்தில் 1979 ஆம் ஆண்டு பெற்ற முதல் மூன்று தமிழர்களில் மு.க.சு.சிவகுமாரன் அவர்களும் உள்ளார்.(சிவகுமாரன், கே.கே.ராஜா. பவானி)

1. சுதந்திரச்சிலை

யேர்மனியில் முதன் முதலாக நாம் ஒன்றும் பணத்திற்காகக் கைநீட்டி யேர்மனியில் தஞ்சம் புகுந்தவர்கள் இல்லை. எம் இனத்தின் சுதந்திரத்தை விரும்பிப் போராடி உயிர் பிழைக்கத் தஞ்சம் புகுந்தவர்களே நாம் என்பதை யேர்மனியர்களுக்குப் புரிய வைப்பதற்காகத் தமிழ் சுதந்திரச் சிலையை Ludwig Stadt என்னும் இடத்தில், தாம் வாழ்ந்த அகதிகள் விடுதியில் அமைத்துக் காட்டி மார்பு தட்டிக் கொண்ட முதல் தமிழன்.

2. **Stadt** சிற்பம்

யேர்மனி Ludwigstadte என்னும் நகரத்தில் அந்த நகரத்துக்குரிய சின்னத்தை சிற்பமாக வடிவமைத்துக் கொடுத்து தமிழருக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்த முதல் தமிழன்.

3. யேர்மனி ஓவிய சிற்பக் கண்காட்சி (Art and Sclputure Exibition )

யேமனியிலுள்ள Dortmund என்னும் நகரத்தில் 1990 இல் முதன் முதலாக வண்ணக் கலவைகளுடன் சித்திர சிற்பக் கண்காட்சியை நடத்திய முதல் தமிழன்.

4. இளையவர் இசையில் வெளிவந்த மெல்லிசை இறுவெட்டு வெளியீடு.

யேர்மனியிலுள்ள Lüdenscheid நகரத்தில் 2000 ஆம் ஆண்டு முதன்முதலாக இளைஞனின் (20 வயது நிரம்பிய சஞ்ஜீவன் சிவகுமாரன்) இசையமைப்பில் (முறைப்படி சட்டவிதிகளுக்கு அமைந்தது) சிறந்த தொழில்நுட்பத்துடன் தமிழில் மெல்லிசை இறுவெட்டு தயாரித்து வெளியீடு செய்ததுடன், பால்குடி மறந்த கையோடு, கெட்டபையன், பைரவன், மாயவன், சிவமயம் போன்ற 10 க்கும் மேற்பட்ட இசை இறுவெட்டுக்கள் யேர்மனியில் வெளியீடு செய்த முதல் தமிழன்.

5. ஆன்மீக சஞ்சிகை

யேர்மனியில் முதன்முதலாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெயர் சூட்டிய சிவத்தமிழ் என்னும் ஆன்மீக சஞ்சிகையை 2004 ஆம் ஆண்டு Dielenberg என்னும் இடத்தில் வெளியீடு செய்து வைத்தது மட்டுமல்லாமல் 15 ஆவது ஆண்டு சிறப்பு மலரையும் ஸ்வெற்றா நகரத்தில் வெளியீடு செய்து வைத்த முதல் தமிழன்

6. கனடிய தமிழர் தகவல் ஐரோப்பிய விருது.

கனடா தமிழர் தகவல் நிறுவனத்தினரால் 1999 ம் ஆண்டு கனடிய தமிழர் தகவல் ஐரோப்பிய விருதை ஜேர்மனியிலிருந்து சென்று பெற்றுக்கொண்ட முதல் தமிழன். கனடாவிலே வெற்றிமணி பத்திரிகை 1995 முதல் 2000 ஆண்டுவரை வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

7. பரதக்கலை சஞ்சிகை

இலங்கையிலே பரதக்கலையை முன்னிறுத்தி வந்த முதல் சஞ்சிகையாகிய அபிநயா என்னும் சஞ்சிகையை வெளியீடு செய்த முதல் தமிழன்.

8. கோடைவிடுமுறை இதழ் ஓவியா

யேர்மனியில் 1995 ஆம் ஆண்டு வெற்றிமணியின் கோடைவிடுமுறை கால இதழாக ஓவியா என்னும் சஞ்சிகையை முதன் முதலாக தமிழில் வண்ணப் புத்தகமாக வெளியீடு செய்து வைத்த முதல் தமிழன்.

9. யேர்மனியில் தமிழ் வெளியீட்டகம்

யேர்மனியிலே 24 க்கும் மேற்பட்ட தன்னுடையதும் பிறருடையதுமான புத்தகங்களை தானே வடிவமைத்து தன்னுடைய செலவில் அச்சடித்து வெற்றிமணி வெளியீடாக வெளியீடும் செய்து வைத்தும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்த முதல் தமிழன்.

இந்நூல்களில் நான் தேடிப்பெற்ற சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். அவ் அனைத்துப் புத்தகங்களும் 1000 பிரதிகள் வெளிவந்ததுடன் அத்தனையும் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

01. புதிய வடிவங்கள் - கண்ணா
02. எழுத்தாளன் கவிஞர் வி.கந்தவனம்
03. ஓவியா - வெற்றிமணி வெளியீடு
04. இடைவெளி - மாதவி
05. காதல் கிராமத்தின் சாரளம் - மாதவி
06. அது என்பது இதுவா - மாதவி
07. மாறன் மணிக்கதைகள் - கனக்ஸ்
08. யேர்மனியில் கவிஞர் வி.கந்தவனம்
09. பல்கலைச் செல்வர் சிவகுமாரன் சிறப்புமலர்
10. வெற்றிமணிகள் கவிச்சித்திரா, சுகந்தினி, சுதர்சன்
11. காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி - இந்துமகேஷ்
12. பரதமாதேவி வானதி சிறப்புமலர்
13. சிவத்தமிழ் முத்துவிழா - தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புமலர்
14. தமிழே காதல் - நிலாமகள் (வர்ணச்சித்திரங்களுடன் கவிதையும் இணைந்து யேர்மனியில் வந்த முதல் நூல்)
15. அதிசய உலா - சிவகுமாரன்
16. காதோடு காதாக - கதிர் துரைசிங்கம் (நகைச்சுவைத் துணுக்குகள் முதல் புத்தகவடிவம் பெற்றது) திறவுகோல் - கனக்ஸ்
17. யாழ்ப்பாணத்து நாட்டிய மரபு - வலன்ரினா
18. பொன்னும் மணியும் - சிவக்குமாரன்
19. அபிநயா - வலன்ரினா

20. பிஞ்சுமனங்களின் தேடல் – பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்
21. சிறுவர் பாடல்கள் - சி.நடராஜா
22. கலைமகன் மணிவிழா - சிவகுமாரன் - மணிவிழா)
23. யாழ் வெற்றிமணி - வலன்ரினா

இதில் இவர் தந்தை வெற்றிமணி வெளியீடாக வெளியீடு செய்த புத்தகங்களாகக் குறிப்பிடத்தக்கவை

1. தம்பிக்கு - டாக்டர்.நந்தி
2. நாடகம் - கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை
3. கீரிமலையினிலே நூல்நயம் (கவிஞர்.வி.கந்தவனம்) இரசிகமணி கனகசெந்திநாதன்
4. கணக்கியலுக்கோர் அறிமுகம் - வை.சிவஞானசுந்தரம்

01. பரிட்சையில் சித்தியடைவது எப்படி - கவிஞர்.வி.கந்தவனம்
02. ஒரே ஒருதெய்வம் குறுநாவல் - சிவகுமாரன்

இவ்வாறு பல சாதனைகளை யேர்மனியில் செய்த இவர் பல முதல்களின் முதல்வராகினார். பல திறமைகளையும் அர்ப்பணிப்புக்களையும் செய்து பிறருக்காகத் தன் வாழ்நாள்களை செலவிட்டு தமிழுக்கும் தமிழர்களுக்கும் சேவையாற்றும் வெற்றிமணி ஆசிரியரின் தியாக மனப்பான்மையின்றி இந்த வெற்றிமணி 25 ஆண்டுகளை ஐரோப்பாவிலே கடந்திருக்காது என்பதை உறுதியாக இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவது அவசியமாகும். இதேவேளை அவரின் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்குகின்ற எழுத்தாளர்களும் வர்த்தக நிறுவனங்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவன் செய்நூலாமோ – பாரில்
தோன்றிய பத்திரிகையெல்லாம் வெற்றிமணி போலாமோ
போற்றத் தகுதியெனத் தெளி
கை வந்தமரும் எதுவும் கருத்தைக் கவர வேண்டும்
கண் தோன்றும் எதுவும் மனத்தைக் கவர வேண்டும்
சொல் பெற்று உயரும் வடிவம் சொந்தமாக வேண்டும்
அதுவே விண்முட்டும் புகழை உவந்தளிக்கும்

25 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் வெற்றிமணி மலருக்காக எழுதப்பட்ட கட்டுரை -

## நெஞ்சம் மகிழ வைக்கும் ஒளவையார் என்னும் நாமம் கொண்ட பெண்பாற் புலவர்கள்

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னமே புகழ்பெற்ற பல பெண்பாற் புலவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் சேவையாற்றி யுள்ளார்கள். சங்ககாலத்தில் சுமார் 37 பெண்புலவர்கள் இருந்திருக்கின்றார்கள். அவர்கள் பாடிய சுமார் 185 பாடல்கள் கடல்கோள்களுக்கு அகப்படாது எமக்குக் கிடைக்கின்றன. அவர்கள் ஆதிமந்தையார், பொன்முடியார், நக்கண்ணையார், அவ்வையார், ஒக்கூர் மாசாத்தியர், வெள்ளிவீதியார் போன்றோர் என அறியக் கிடக்கின்றது. அதில் அணு என்பது பிளக்க முடியாத அளவு மிகச் சிறியதுகள். அவ் அணுவைப் பிளக்கும் போது பிரமாண்டமான ஒரு சக்தி தோன்றும். அதாவது ஏழுகடல் அளவு சக்தி தோன்றும். ஒரு கடலின் ஆழமே அறிய முடியாது இருக்கும் போது 7 கடல் அளவு சக்தியை புகட்டிய குறள் என்னும் விளக்கத்தை

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

என்று திருக்குறளின் பெருமையை அறிவுபூர்வமாக எடுத்துக் கூறிய அவ்வையார் என்னும் பெண்பாற்புலவர் பாடிய பல பாடல்கள் பல எமக்குக் கிடைக்கப் பெறுகின்றன.

முருகக் கடவுளிடம் நாவற்கனி பறித்துத் தரும்படி கேட்ட போது சுட்டபழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று வினாவிய முருகக் கடவுளை "பழம் நீயப்பா ஞானப்பழம் நீயப்பா தமிழ்ஞானப் பழம் நீயப்பா என்று பாடிப் புகழ்ந்த அவ்வையார் பாடல்களையும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பாடிய அவ்வையார் பாடல்களையும், குறுநிலமன்னன் அதியமான் காலத்தில் வாழ்ந்த அவ்வையார் பாடல்களையும் எடுத்து ஆராயப் புகுந்தால், பாடல்வரிகளில் தன்மையை நோக்கும் போது அவ்வையார் என்பவர் ஒருவரே என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது உள்ளது.

12

உதாரணமாக

“அறஞ்செய்ய விரும்பு, ஆறுவது சினம் என்று தொடருகின்ற ஆத்திசூடிப் பாடல்களையும்,

இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து

என்னும் புறநானூறு பாடல்வரிகளையும் எடுத்து நோக்கினால், வேறுபட்ட கவித்துவத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே அவ்வையார் என்னும் பெயருடைய வெவ்வேறு பெண் புலவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது உண்மையென ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

திருமணம் செய்யாமல் கல்வி கற்று சமூகப்பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித் தவர்களே அவ்வை என்னும் பெயரால் அக்காலத்தில் அழைக்கப்பட்டனர். அவ்வழியில் சங்ககாலத்தில் வாழ்ந்த அவ்வையார், குறுநில மன்னன் பாரி வள்ளல் பிள்ளைகளான அங்கவை சங்கவை காலத்தில் வாழ்ந்த அவ்வையார், சோழர் காலத்தில் கம்பர் ஒட்டக்கூத்தர் காலத்தில் வாழ்ந்த அவ்வையார். பிற்கால ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நூல்களைத் தந்த அவ்வையார் என அவ்வையார்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

சங்ககாலத்து அவ்வை தற்போது மலையாளம் என்று சொல்லப்படுகின்ற சேரநாட்டிலே தர்மபுரி என்று தற்போது அழைக்கப்படும் தகடூர் எனப்படும் தலைநகரத்திலே யாளிதத்தனுக்கு மகளாகப் பிறந்தாள். பிள்ளை 3 வயதாக இருக்கும் போது தாய் இறக்கும் தறுவாயில் கலங்கி நிற்க

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனுஞ் செத்து விட்டானோ – முட்ட
முட்டப்பஞ்ச மேயானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ

என்று பாடியதாகவும். அக்கணமே கவலை நீத்த தாய் உயிர்நீத்தாள். தந்தையும் உறவினர் வசம் பிள்ளையை ஒப்படைத்துவிட்டு வெளியூர் சென்றுவிட்டார். இவர் கல்வி, சமயப்பற்று அத்தனையும் பெற்றவராய் சமுதாய சமயப்பணிக்காய்த் தன்னை ஒப்படைத்து நல்லறிவாற்றலுள்ள பெண்ணாய் வளர்ந்தாள் என வரலாற்று நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இக்காலம் கி.மு.300 – கி.பி 250 வரையுள்ள காலப்பகுதிகளாகும். இவர் பாடல்கள் சங்கப் பாடல்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை

குறுந்தொகை ஆகியவற்றிலே தொண்டைமான், பாரி, அதியமான், எழினி, பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, சோழன் பெருநற்கிளி, சேரன் மாரி வெண்கோ போன்ற மன்னர்களைப் பற்றிய பாடல்களில் காணக்கிடக்கின்றன.

இவர் அக்கால குறுநில மன்னன் அதியமான் புகழ்பாடிப் பரிசில்கள் பெற்றுள்ளார். அவர் பெருமை கண்ட மன்னனும், அவரை அரசவைப் புலவராக அமர்த்தினர். இம்மன்னனிடம் சிறப்புப் பொருந்திய 12 ஆண்டுக் கொருமுறை காய்க்கின்ற கருநெல்லிக்கனியைப் பொதிகைமலை வாழ்ந்த தவமுனிவர் வழங்க அக்கனியை நீண்ட காலம் வாழ வேண்டிய ஔவைக்கு அதியமான் பரிசாகக் கொடுத்தான்.

அதியமானுடன் தொண்டைமான் போர் புரிய ஆயத்தமான போது போர் நடக்காதவண்ணம் தடுப்பதற்காக தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றார். தொண்டைமான் படைக்கலக் கொட்டிலைக் காட்டியபோது

இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரழ் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனகரவ்வே, அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுனுதி சிதைந்து
கொல்துறைக் குற்றிலமாதோ

மன்னனே உன்னுடைய அரண்மனையிலேயுள்ள படைக்கலங்கள் யாவும் போர்க்களத்தைக் காணாததால் மயில்பீலி அணியப்பெற்று, மாலை சூட்டப்பெற்று, நெய்பூசப்பெற்று அழகுடன் காணப்படுகின்றன. ஆனால், அதியமானின் வேல்கள் நாளும் பகைவர்களைப் போரில் குத்துதலால், முனைகள் முறிந்து சிதைந்து கொல்லன் உலைக்களத்திலே குவிந்து கிடக்கின்றன என்று அதியமான் பெருமையைப் பாடி தொண்டைமான் போரை நிறுத்தினார்.

சோழர்காலத்து 12ம் நூற்றாண்டு வாழ்ந்த ஒப்பற்ற புலவர்களான கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பொய்யாமொழி போன்றோர்க்கு ஒப்பாக அருங்க வியாற்றிய அற்புதத் தமிழ்ப் புலவர் அவ்வையார் பற்றிய ஓர் சம்பவத்தை எடுத்து வருகின்றேன். மன்னர்களைப் புகழ்ந்து பாடலும் அப்பாடலுக்கு மனமுவந்த மன்னர்கள் பரிசில் வழங்கலும் அக்காலத் தமிழ்ப் பற்றுக்

கொண்ட மன்னர்களின் மனப்பாங்கு. ஒரு மாமன்னனைக் காண அவ்வையார் செல்கின்றார். அம்மையே நீவீர் எந்த ஊர் என்று மன்னன் கேட்க

காலொந்தே னொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று கூனல்
கருந்தேனுக் கண்ணாந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யீடம்

வளைந்த சங்கு தேனையுண்பதற்காக வாய் திறந்துள்ள நாட்டுக்கு வல்லவனே! காவிரி நதி சூழ்ந்த நாட்டின் மன்னனே! உன்னைக் காண்பதற்காக நெடுந்துரம் பரபரப்போடு நடந்து வந்தேன். அதனால், கால் நொந்தேன், ஆங்காங்கே தங்கினேன். அதனால், எந்த ஊர் எனக்குச் சொந்த ஊர் என்பது என்று கூறுகின்றார்.

அதைக் கேட்ட மன்னனும் அரியணை காட்டி அமரச் செய்ய, அவ்விடத்தில் கம்பர் பாடல் ஒன்று படிக்கப்படுகின்றது. மன்னனும் கம்பருக்கு நிகர் யாருண்டு என்று புகழ்ந்துரைக்க

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும் – அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று

சூழ்ச்சிக்காரர் இருவர் தன்னைப் புகழ்வதற்காக வேண்டும், எல்லா விரல்களிலும் மோதிரங்கள் வேண்டும், பஞ்சால் அல்லது பட்டால் ஆடை அணிந்திருக்க வேண்டும், அவர்கள் எழுதிய கவிதை வேம்பாக இருந்தாலும் நல்லது என்று அவ்வையார் எழுந்து அவ்விடத்தில் பாடுகின்றார்.

இதுகேட்ட மன்னன் உலகத்து உண்மை இதுவாகிலும் அம்மையே! கம்பர் சிறப்பான கவி புனையும் ஆற்றல் மிக்கவர் என்று கூற

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் – யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கு மொவ்வொன்று றெளிது

தூக்கணாங்குருவியின் கூடு, கரையான் புற்று, தேன்கூடு, சிலந்திக்கூடு, ஆகியவை யாராலும் இலகுவாகச் செய்து முடிக்கக் கூடியதல்ல. ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொன்று எளிது. அதனால், யாம் பெரிதும் வல்லோம் என்று

வலிமை சொல்ல வேண்டாம் என்று பாடினார். அத்துடன் எவ்வாறு புலமை கம்பருக்கு வந்திருக்கும் என்பதை எடுத்துக்காட்ட

சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்

என்று கூறி

காணாமல் வேணதெல்லாம் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே – நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தாக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி

என படிப்பு என்னவென்று அறியாதவர்கள் படித்தவர்கள் முன்னே வெட்கப் படாமல் நினைத்ததெல்லாவற்றையும் கூறலாம் ஆனால், படித்தவர்கள் முன்னே பணியாமல் இருக்கக் கூடாது. அது எப்படியென்றால் கிளி பெரும் பூனை வந்தால் கீச்சுக்கீச்சென்று கத்துவதைப் போன்றது.

இவ்வாறு பாட அவ்வை மதிநுட்பம் அறிந்த மன்னனும் அம்மையே! தங்கள் பெயர் எதுவென்று உரைக்க அவ்வை என்கின்றார். ஆ... அவ்வையா! என்று துடிதுடித்த மன்னனும் அவரை அரியாசனத்தில் தன் பக்கத்தில் இருத்துகின்றார்.

இவ்வாறு கல்வி ஆற்றல் மிக்க தைரியமான அவ்வையார் சோழர்காலத்தில் வாழ்ந்திருக்கின்றார். பிற்கால அவ்வையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற சமுதாய சீர்திருத்த சிந்தனைகளை விதைக்கும் இலகுதமிழ் பாக்களை யாத்திருக்கின்றார் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.

எப்போது வாழ்ந்த அவ்வை என்று காலக்கணிப்பீட்டில் மயக்கம் இருந்தாலும் அவ்வையார் என்ற பெயரிலே எமக்குக் கிடைக்கும் அத்தனை பாக்களும் எமது உள்ளத்தை மகிழ்ச்சிப்படுத்துவதாகவே உள்ளன.

உசாத்துணை நூல்களும் இணையப்பக்கங்களும்
தனிப்பாடல் நகைச்சுவை – வே.ந.கபிலர்
ஔவையார் வாழ்வும் வாக்கும் – பேராசிரியர் தி. முத்து
https://mayadigimedia.blogspot.com/2015/06/blog-post_37.html
http://tamilcause.blogspot.com/2010/06/blog-post_16.html

(WWW.Gowsy.com)

**நி**ற்பனவும், நடப்பனவும், பறப்பனவும் தமது மனங்களைப் பகிர்ந்து கொள்ளும் இயல்பான நிகழ்வு காதல். மனிதவளர்ச்சியில் சத்தியமானதும் சாத்தியமானதும் காதல். மனதுக்குள் கிளுகிளுப் பையும் உடலிலே மாற்றத்தையும் நடத்தையில் நாகரிகத்தையும், பேச்சிலே கவர்ச்சியையும் கொண்டுவரும் காதல். இக் காதல் இல்லையேல் சாதல் சாதல் என்றார் மகாகவிபாரதி. காதலித்துப்பார் உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும் என்றார் வைரமுத்து. கண்ணும் கண்ணும் மோதுமம்மா நெஞ்சம் மட்டும் பேசும்மா காதல், ஆணுக்கும் பெண்ணுக்கும் அன்பையையே போதிக்கும், ஜாதகங்கள் பார்ப்பதில்லையே அது காசு பணம் கேட்பதில்லையே என அகத்தியன் அவர்கள் தன் வரிகளில் காதலை விபரித்தார். யாயும் ஞாயும் யார் ஆகியரோ எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர். யானும் நீயும் எவ்வழி அறிதும்? செம்புலப்பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே(என் தாயும் உன் தாயும் எவ்வித உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவுடையவர்கள்? நானும் நீயும் எந்தக் குடி சார்புடையவர்கள்? செம்மண் நிலத்திலே விழுந்த மழைநீர் போல அன்புள்ள நெஞ்சம் ஒன்றாகக் கலந்தன) என குறுந்தொகையிலே செம்புலப்பெயல் நீரார் பாடுகின்றார்.

இவ்வாறு இரு மனங்களிடையே காதல் எவ்வாறு தோன்றுகிறது? எதிர்பார்ப்புக்கள், ஆசைகள், விருப்புக்கள், ஆர்வங்கள், ஈர்ப்புக்கள், உடலமைப்புக்களின் கவர்ச்சி போன்றவை இரு மனங்களுக்கிடையிலே காதலை உருவாக்குகின்றன. இரு வருக்கிடையில் அளவுகடந்த அன்பு தோன்றும் போது ஒக்சிரோசின் (oxytocin) என்னும் ஓமோன் மூளையில் சுரக்கும். இந்த ஓமோன் சுரப்பதற்கு எதிர்ப்பால் கவர்ச்சி ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது. பெண்களுக்குரிய ஈஸ்ரோஜன் (Estrogen) என்னும் ஓமோன் பெண்மையையும் மென்மையையும் வழங்க ஆண்களின் ரெஸ்ரோஸ்ரெறோன் (Testosterone) என்னும் ஓமோன் ஆண்மையையும் வலிமையையும் கொடுக்கின்றது. இவ்விரு ஓமோன்களும் சரியான வகையில் தொழிற்படும்போது

13

இரு பாலாரிடையும் அவரவர் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப கவர்ச்சியான உடலமைப்பு தோன்றுகின்றது. இவ்வாறான உடலமைப்புக்கள் ஏற்படுகின்றபோது இருபாலாரிடமும் காணப்படும் அன்டரோஜன் (Androgen) என்னும் ஓமோன் இருபாலாரிடையும் கவர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இக்கவர்ச்சியானது ஆழமான அன்பை ஏற்படுத்தும்போது ஒக்சிரோசன் என்னும் ஓமோன் மூளையில் சுரக்கின்றது. இவ்வாறு உடலுள்ளே ஓமோன்களின் மாற்றத்தினால் ஏற்படுகின்ற உள்ளுணர்வு ஒத்த அன்பினரான இரு மனங்களை ஒன்றிணைக்கின்றன.

இக்காதலைப் பெருமைப்படுத்தி 14ஆம் திகதி மாசிமாதம் எடுக்கப்படுகின்ற திருநாளே காதலர் தினமாகும். இது வலன்ரின்ஸ் நாள் Valantinstag என்றும் அழைக்கப்படும். இத்தினத்தில் காதலர்கள் அவரவர் தமது காதல் துணைக்கு ரோஜா மலர்கள், வாழ்த்து அட்டைகள் கொடுத்தும், சொக்லட் பரிசாகக் கொடுத்தும் கொண்டாடுவார்கள். சொக்லட்டினுள் சக்தியை அதிகரிக்கச் செய்யும் தியோப்ரோமைன் என்னும் அல்கலொய்ட் (Alkaloid) இருக்கிறது. உடலையும் மூளையையும் தூண்டிவிடக்கூடிய கோப்பியிலுள்ள கொப்ஃய்ன் (Coffeine) கூட ஒரு அல்கலொய்ட் தான். காதல் தாகம் அதிகரிக்க அல்கலொய்ட் அதிகமுள்ள சொக்லட் உதவுகின்றது. இதனை விட இதயத்துடன் தொடர்புடைய காதலுக்கு இதயத்தை வலிமைப்படுத்தும் தன்மையுடையது சொக்லட் என கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆய்வுசெய்து கூறியிருக்கின்றது. சொக்லட்டினுள் இருக்கும் அன்ரி ஒக்சிடென்ட் (Antioxidant) இதயநோய், பக்கவாதம் ஏற்படும் அபாயத்தைத் தடுக்கின்றது. அதனால் இதயத்தை வலிமைப்படுத்தக் கொடுப்பதுதான் கொடுக்கின்றீர்கள். கறுப்பு சொக்லட்டை (Dark choclate) கொடுங்கள். ஏனென்றால், அதனுள் இருக்கும் கொக்கோவா (cocoa) சர்க்கரை வியாதி, அதிகரிக்கும் கலோரிகளை இல்லாமல் செய்துவிடுகின்றது. அதனால், கறுப்பு சொக்லட்டே உங்கள் காதலுக்கு உகந்தது என்பது தெளிவாகிறது.

இவ்வாறு பிரபலமாகவும் ஆடம்பரமாகவும் கொண்டாடுகின்ற இத் தினம் எவ்வாறு ஆரம்பமானது என்றால், உண்மையில் ரோமர்களின் ஆட்சிக் காலத்திலேயே காதலர்தினம் ஆரம்பிக்கப்பட்டது. ரோமாபுரி நாட்டிலே படையில் சேர விரும்புபவர்கள் யாரும் திருமணம் செய்யக்கூடாது. இதை மீறுபவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என மன்னன் கிளாடிஸ் மிமி அறிவித்தான். ஆனால், பாதிரியார் வாலண்டைன் இதனை அறிந்து இரகசியத் திருமணம் படைவீரர்களுக்குச் செய்து வைத்தார். இதனையறிந்த மன்னன் பாதிரியார் வாலண்டைனைச் சிறையில் அடைத்தார். சிறையில் இருந்த பாதிரியார் வாலண்டைனுக்கும் சிறைக்காவலாளிகளின் தலைவன்

மகள் அஸ்டோரியஸ் இற்கும் இடையில் காதல் பிறந்தது. இதனை அறிந்த இவள் தந்தை அஸ்டோரியஸை வீட்டுக்காவலில் வைத்தார். அப்போது வாலண்டைன் அஸடோரியஸ் இற்கு ஒரு செய்தி அனுப்பினார். இக்கடிதம் படிக்கும்போது வாலண்டைன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்டார். இத்தினம் பிப்ரவரி 14. அதன் பின் ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டுக்குள் ரோம் வந்ததன்பின் இத்தினம் விடுமுறைதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. சுமார் 200 ஆண்டுகளுக்குப் பின் ஜெலாசியஸ் மி என்னும் போப்பாண்டவர் என்பவர் வாலண்டைனைப் புனிதராக அறிவித்தார். அதன்பின் இத்தினம் வாலண்டைன தினமாகக் காதலர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

காலம் காலமாகக் காதலுக்கு விழா எடுப்பதற்கான காரணம் புரிந்த பின்னும் பெற்றோர்களே! காதலுக்குச் சமாதி கட்ட துணிகின்றீர்களா? இல்லை கால மெல்லாம் காதல் வாழ்க என்று போற்றுகின்றீர்களா? எனினும் இளமையே! காதல் எனப்படும் பரிசுத்த அன்பில் காமம் கலவாது காத்துக் கொள்ளுங்கள். என்றும் காதல் கைகூடும்.

(வெற்றிமணி மாசி மாத இதழ் 2018)

எனக்குள்ளே நான் பல கேள்விகள் கேட்கின்றேன். பல பக்கப் பார்வையில் என் சிந்தனைகள் விரிவுபடுகின்றன. இறுதியில் ஒரு தீர்மானம் எடுக்கின்றேன். அவை எவ்வாறு விரிவுபடுகின்றன என வாருங்கள் இணைந்தே சிந்திப்போம்.

நாம் பிறக்கும்போது தலை முழுவதும் தலைமயிரோடே பிறந்தோம். கூட வந்த மயிர்கள் ஒவ்வொன்றாகக் கழன்றன. புதிது புதிதாக மயிர்கள் முளைத்தன. தலையில் முளைத்தவையும் கூடவரவல்லை. பழைய மயிர்களும் எமது தலையில் இருப்பது இல்லை. கழுவினோம், துடைத்தோம், அலங்கரித்தோம், இருந்தும் எம்மை விட்டே போனது. இறுதியில் வழுக்கையானது. எதுவுமே இல்லாத மண்டையில் அடர்த்தியாக இருந்த மயிர்களும் அலங்கரிப்பும் இருந்த இடம் தெரியாமல் போவது போலவேதான் வாழ்க்கையும் அமைந்திருக்கின்றது.

தனியாகப் பிறந்தோம், தலை நிமிர்ந்து வாழ்ந்தோம், தோளோடு சேர்ந்தோம், தோல்விகளை வென்றோம், சாதனைகள் புரிந்தோம், சாதித்துக் காட்டினோம், இறுதியில் தெரியாமல் போனோம். இதுவே வாழ்க்கை. போராடித் தொடர்கின்ற வாழ்க்கையில் இறுதியில் யாருடனும் போராடாது எமக்கு நாமே போராடித் தோற்றுப் போக வைப்பதே இயற்கை நியதி. அப்படியானால், இப்படித்தான் நடக்கப் போகின்றது என்பதை நாம் முன்னமே தெரிந்திருந்தும் எமது வாழ்க்கையில் ஏன் இந்தப் போராட்டம்? ஏன் இந்த மகிழ்ச்சி? ஏன் இந்த பாசப் பிணைப்பு? ஏன் இந்தப் பிரிவுத் துயர்? என்று சிந்தித்துப் பார்த்தோமென்றால், வாழ்க்கை என்பது வழுக்கை என்றே உணர்வோம்.

வாழ்க்கையில் இறுதிவரை போராடித் தோற்றுப் போனவர் களும் இருக்கின்றார்கள். வாழ்க்கையின் வெற்றி உச்சத்தைத் தொட்டவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், இறுதியில் இரு தரத்தினரும் உலக வாழ்க்கையில் ஒன்றுமில்லாமல் போனவர்களே. மாட மாளிகைகள், கோடான கோடிக்

14

கோபுரங்கள் கட்டி வாழ்ந்த மன்னர்கள் இன்று எங்கே? பாட்டாலே உலகத்தை வென்ற பாவேந்தர்கள் எங்கே? நாயன்மார்கள் எங்கே? ஆழ்வார்கள் எங்கே? உலகத்தையே தன் கைக்குள் அடக்கிவிடலாம் என்று போர் தொடுத்த ஹிட்லர் எங்கே? அண்டவெளி ஆராய்ச்சியாளாகள் எங்கே? தொழில்நுட்ப ஆய்வாளர்கள் எங்கே? தம்முடைய பெயரை நிலை நிறுத்திப் போனவர்கள் கூட பெற்றது ஏதுமில்லை. அவர் பெயர் சொல்லிப் பெயர் பெறும் சொந்தங்களே அவர்கள் புகழுடன் தொடர்கின்றார்கள் என்பது உண்மையே. அதுகூட ஓரிரு சந்ததி கடந்து மறக்கப்பட்டு அப்படியென்றால், ஏனிந்த போராட்டம்! வாழ்க்கையை நன்றாக அனுபவித்துச் செல்ல மனம் தடைபோடுவதும் ஏன்? !

இறப்பு என்பது நிச்சயம். இறந்தவர்கள் திரும்பி வருவதில்லை. படைப்புக்கள் அத்தனையும் ஒருநாள் இல்லாமல்தான் போகின்றன. கண்டுபிடிப்புக்கள் எல்லாம் காணாமல்தான் போகின்றன. அன்று நாம் பயன்படுத்திய உபகரணங்களை நாம் பயன்படுத்துகின்றோமா? (Radio, Taperecorder, சமையல் உபகரணங்கள்) இன்று பயன்படுத்துபவவை நாளை தொடருமா? இல்லவே இல்லை. தொழில் நுட்பங்கள் பழையவற்றை ஒன்றுமில்லாமல் பண்ணிவிடுகின்றன. சிந்திக்கச் சிந்திக்க புதியவை பிறப்பெடுக்கின்றன. பழையவை தேக்கம் கண்டுவிடுகின்றன. எனவே உயர்திணை அஃறிணை அத்தனையும் வாழ்க்கையில் வழுக்கையே.

ஆனால், தனக்காக வாழ்ந்து ஆடு, மாடுகள் போல் பசித்தால் புல்லைத் தின்று, உறக்கம் வந்தால் உறங்கி வாழ வேண்டுமா? மிருகங்கள் போல் தேடி வேட்டை ஆடி, பசி நீங்க காலாற நடந்து, உறக்கம் வர உறங்கிப் போகும் வாழ்க்கை சரியா? அவ்வாறு மனிதன் வாழ்ந்தால், இந்தப் பூமியில் மாற்றங்கள் தோன்றியிருக்குமா! இலை குழை உடுத்தே இன்றும் மனிதன் வாழ்ந்திருப்பான். அவ்வாழ்க்கை அழகென்று சொல்பவர்களும் உண்டு. ஆறறிவு படைத்த மனிதனின் படைப் புக்கள் மேம்பட உலகத்தை வசதி படைத்த உலகம் ஆக்குவோம் என்று சொல்ப வர்களும் உண்டு.

காயமே பொய்யடா காற்றடைத்த வெறும் பையடா
மாயனார் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா
என்று பாடிய சித்தர் உலகநிலையாமையை உரைத்தார்.
காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே

என்ற பட்டினத்தார் இல்லாமல் போகும் உடலின் நிலையாமையை எடுத்து ரைத்தார்.

ஆடிய ஆட்டம் என்ன?
பேசிய வார்த்தை என்ன?

தேடிய செல்வம் என்ன?
திரண்டதோர் சுற்றம் என்ன?
கூடுவிட்டு ஆவி போனால்
கூடவே வருவது என்ன?

என்று எதுவுமே எமக்குச் சொந்தம் இல்லை என்று கண்ணதாசன் பாடினார். இவ்வாறு அவரவர் நிலையாமை பற்றி எடுத்துரைக்க, அந்த உலக நிலையாமையை எடுத்துரைத்த திருமூலர் கூட

தன்னை நன்றாகத் தமிழ் செய்ய என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

என்று பாடித் தன் கடமையை திருமூலரே உணர்த்தியிருக்கின்றார். அதாவது உலக வாழ்க்கை வழுக்கை என்றாலும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் கடமை உள்ளது அல்லது கடமையை உள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்பது புலப்படுகின்றது. துறவியானவர் துறவறத்தில் இருந்த வண்ணம் சமூகத்திற்கு நல்லவற்றை உரைக்கவில்லையா?

ஒன்றுமில்லாமல் போவோம் என்று தெரியாமலே பிறக்கின்றோம். வாழ்க் கையில் நாம் எதுவுமில்லாமலே போவோம் என்று தெரிந்தே வாழ்கின்றோம், சாதிக்கத் துடிக்கின்றோம். ஆனால், மனிதன் மூளையில் ஒன்று குடைந்து கொண்டே இருக்கும். இந்த பூமியில் பிறந்து விட்டோம். எமக்கோ அல்லது எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கோ ஒரு வெளிச்சத்தைக் காட்டிவிட்டு மறைவோம் என்று சில மனிதர்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்வார்கள் என்பது உண்மையே. இங்கு எதிர்கால சமூகம் பற்றிய அக்கறை தொனிக்கின்றது. சிலருக்கு பிறப்பிலேயே தொடர் ஊக்கம் தொழிற்படும். தன்னால் முடியாது என்றாலும் தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டு தம் இறுதிக்காலங்கள் வரையிலும் தம்முடைய எண்ணக்கருக்களை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

வாழ்க்கையை நிலையானதாக மாற்ற விஞ்ஞானிகளும் முயற்சி மேற் கொண்டுதான் இருக்கின்றார்கள். இது நடக்குமா என்று சந்தேகப்பட்ட எத்தனையோ விடயங்கள் இன்று நடத்திக்காட்டப்பட்டுள்ளன. உருவ மாற்றுச் சிகிச்சை என்பது பிறந்தது எப்படியான தோற்றமோ அத்தோற்றத்தை முழுவதுமாக மாற்றுகின்றார்கள் (Plastik surgery) ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுகின்றார்கள், குளோனிங் முறையில் ஒரு மனிதனை மறுபடியும் உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் முனைந்து கொண்டிருக்கின்றார்கள். குளோனிங் முறையில் கலவியில்லா குளோனிங், (Asexual Reproduction) ஜீன்களையும் DNA கூறுகளையும் பிரதி எடுக்கும் ஜீன் குளோனிங்

(Gene cloning), ஒரு மிருகத்தை அப்படியே பிரதி எடுக்கும் இனப்பெருக்க குளோனிங் (Reproductive Cloning)சிகிச்சை முறைகுளோனிங் (Therapeutic Cloning) என குளோன்களை உருவாக்க மனிதன் முனைந்து கொண்டிருக்கின்றான். எம்மால் அறியப்பட்ட டாலி என்னும் செம்மறி ஆடு, டியூவி என்றழைக்கப்படும் மான், ஸ்நூபி என்றழைக்கப்படும் நாய் போன்றன குளோனிங்குக்கு அத்தாட்சிகளாகக் காணப்படுகின்றன. அண்டங்கள் தாண்டி ஆராய்ச்சிகளில் பிரபஞ்சத்தை நோக்கி பார்வையைக் கொண்டு செல்கின்றார்கள். இவையெல்லாம் வாழ்க்கையையும் பிறப்பையும் நியாயப்படுத்துவதற்கும் நிலைப்படுத்துவதற்கும் மனிதனின் முயற்சிகளாக இருக்கின்றன.

விஞ்ஞானிகளின் வரிசையில் உலகின் தலைசிறந்த அறிவியலாளரான ஸ்ரிபன் வில்லியம் கார்க்கிங் (08.01.1942 – 14.03.2018) என்றுமே எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துபவராகக் காணப்படுகின்றார். வாழவே முடியாத ஒரு மனிதன். தசையூட்டமற்ற பக்க மரப்பு நோயால் (Amyotrophic lateral sclerosis – ALS) அதாவது இயக்க நரம்பணு நோயால் (Motor neuron disease) பாதிக்கப்பட்டார். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூளை சொல்வதை தசை செய்யாது. உடல் அடங்கி ஒரு சக்கர நாற்காலிக்குள் ஐக்கியமாகிவிட்டது. இயக்கவியல் விஞ் ஞானியான இவர் ஈக்வலைசர் என்ற கொம்பியூட்டர் புரோக்ராம் உதவியோடு கன்னத் தசைகள் மூலம் கொம்பியூட்டரில் பேசி வந்தார். இந்நோய் கண்டபோது இன்னும் 2 வருடங்களே ஸ்ரிபன் வில்லியம் ஹாக்கிங் வாழ்வார் என்று மருத்துவர்கள் இவருடைய இறப்புக்கு நாள் குறித்தனர். 23 வயதில் இவருக்கு இவ் அச்சுறுத்தல் கிடைத்தது. ஆனால், உலகவாழ்க்கையை விட்டுப் பிரியப் போகின்றோம் என்று தெரிந்திருந்தும் காதலித்தார். திருமணம் செய்தார். பிரபஞ்சத்தை முழுவதுமாக அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலும் முயற்சியும் அவரை 76 வருடங்கள் வரை வாழ வைத்தது. இறப்பு எந்த நிமிடமும் வரலாம் என்று சிந்தித்த ஸ்ரிபன் ஹாக்கிங் வாழும் வரை அசைய முடியாத நிலையிலும் தன்னுடைய மூளையைப் பயன்படுத்தி தன்னுடைய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தார்.

இவ்வாறான மனிதர்களை சிந்தித்துப் பார்க்கின்ற போது வாழ்க்கை என்பது வழுக்கை என்று நினைத்தாலும், எதற்காவது வாழ வேண்டும் என்ற நினைப்பானது மூளை சுறுசுறுப்பான மனிதர்களுக்கு தோன்றிக் கொண்டே இருக்கும். இது இயற்கையின் நியதி, கோட்பாடு என்றே கூறலாம்.

(வெற்றிமணி ஐப்பசி மாத இதழ் 2018)

**பெ**ண்களின் உளவியல் பற்றிப் பேசும் உரிமை பெண் களுக்கே உண்டு. அவள் உள் உணர்வுகளும், தெளிவடையாது மனதுக்குள் தோன்றுகின்ற தவிப்புக்களும், வெளியே சொல்ல முடியாது சமூகத்தின் கண்களுக்கு திரையிடத் துடிக்கும் துடிப்புக்களும், அவளை அவளாக வாழமுடியாது செய்து விடுகின்றன. பெண் என்பவள் தன்னுடைய மனதை மையமாக வைத்து ஆராய வேண்டியது அவசியமாகின்றது. மொத்தத்தில் தம்முடைய மனதைக் கொன்றுவிட்டே பல பெண்கள் தம்முடைய வாழ்க் கைக்குப் பாதை போட்டிருக்கின்றார்கள்.

மூச்சுவிடத் தெரியாது ஒரு குழந்தை பிறக்கும்போது டாக்டர் பிறந்த குழந்தையை தலைகீழாகப் பிடித்து முதுகிலே தட்டி மூச்சுவிடச் செய்கின்ற போது முதல் முறையாக மூச்சுவிட்டாலேயே உலகத்தில் வாழலாம் என்று அக்குழந்தை ஆழ்மனதிலே பதிக்கின்றபோது, அக் குழந்தை நினைக்காமலே நித்திரையில் கூட மூச்சுவிடுகின்ற தன்மையைப் பெறுகின்றது. இது போன்று தான் சிறுவயதிலே ஆழ்மனதிலே பதியப்படுகின்ற பதிவுகள் மனிதனை முழுவதுமாக ஆட்டிப்படைக்கின்றன. ஆண்களின் உளவியலின் படி தமக்கு ஏற்படுகின்ற கருப்பை இழப்புப் பொறாமை, மார்பக இழப்புப் பொறாமை, தாய்மை இழப்புப் பொறாமை, போன்ற பொறாமைகளால் பெண்களை அடக்கி வைக்க முற்படுகின்றனர். குழந்தைகளைப் பெறுதல், அதற்குத் தம்மைத் தயார்படுத்தல், குழந்தைக்குப் பாலூட்டுதல் போன்ற முயற்சிகளைத் தம்மால் செய்ய முடியாத இயலாமையின் வெளிப் பாடாகப் பெண்களை அடக்கி ஆள முற்படுகின்றனர் என்பது உளவியல் உண்மையாகப்படுகின்றது.

உயிர்ப்படைப்பாக்கங்களின் முயற்சியில் ஈடுபடும் பெண் களுக்கு இலக்கியப்படைப்பாக்க முயற்சிக்கு வழியில்லாமல் போகிறது. ஆயினும் அவற்றையும் மீறி எழுதுகின்ற பெண்கள் தம் முடைய பெண்ணியல் சார்ந்த பிரச்சினைகளை

15

எழுதுவதற்குத் தயங்குகின்றார்கள் என்றே சொல்ல வேண்டும். பெண் சுதந்திரம் என்ற போர்வையில் தம்முடைய எழுத்துக்கு முலாம் பூசுகின்றார்கள்.

பொதுவாக சங்ககாலத்துப் பெண்புலவர்களில் 32 பெண்பாற்புலவர்களே சங்கப் பாடல்களில் எமக்கு இனங்காட்டப்படுகின்றார்கள். அவர்களில் உயிர்களைப் படைக்க முடியாத அதிகமான பெண்களே அதிகமான பாடல்கள் புனைந்திருப்பது அறியக் கூடியதாக உள்ளது. அவர்கள் காரைக்கால் அம்மையார், ஆண்டாள், ஔவையார், நக்கண்ணையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார் போன்றோர் ஆவார்கள். இவர்களில் அகப்பாடல்களை மட்டுமே பாடிய வெள்ளிவீதியார் பாடல்கள் பெண் உளவியல் சம்பந்தமாக சிந்தனையைத் தூண்டுவனவாகக் காணப்படுகின்றன. இவர் பாடல்களில் வெண்மை என்னும் சொல் அதிகமாக இடம்பெற்றதனால் வெள்ளிவீதியார் என்னும் பெயர் இவருக்கு வரக் காரணமாக இருந்தாலும் ஆடைமலறயல என்று சொல்லப்படுகின்ற பால்வீதியைக் குறிப்பதுவாகவும் எடுத்துக்கொள்ளலாம். நாம் காணும் விஞ்ஞான உலகத்தை சங்ககாலத்திலேயே கண்டுதேறிய மக்கள் இவருக்கு இப்பெயரைச் சூட்டியிருக்கலாம். இதேவேளை வெள்ளி என்பது வானத்திலிருக்கின்றது. வீதி என்பது நிலத்தில் இருக்கின்றது. இவை இரண்டும் சேராதது போல் இவருடைய காதல் நிறைவேறாத காதலால் இவ்வாறு அழைக்கப்பட்டார் என்று கூறுவாரும் உண்டு. இவர் பாடல்கள் கற்புநிலை அற்று காமம் நிறைந்த பாடல்களாகவே காணப்படுகின்றன.

இப்பாடல்களில் வெள்ளிவீதியார் பாடல்கள் நிறைவேறாக் காதலினால், தன்னை விட்டுப்பிரிந்து சென்று எவ்வித தொடர்பும் இல்லாத தன் தலைவனை நினைத்துப் பாடும் அகத்திணைக்குரிய பாடல்களே முழுவதுமாக இருக்கின்றன. காதல் தோல்வியைச் சந்தித்த இவர் பாடல்கள் பெண் உளவியலின்படி சிந்திக்கத்தக்கனவாக இருக்கின்றன என்பதை முனைவர் மு.பழனியப்பன் சுட்டிக்காட்டியுள்ளார். வெள்ளிவீதியாரைத் தன் காதலன் ஏன் விட்டுப்பிரிந்தான் என்பது கேள்விக்குறி. வெள்ளிவீதியாரிடம் இருக்கும் உயிர்ப்படைப்பாக்கத் திறன், இலக்கியப்படைப்பாக்க இயல்பு தலைவனுக்கு அச்சத்தையும் இவள் எனக்கு அடங்கி நடப்பாளா என்னும் பயத்தையும் ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்று சான்றுகள் காட்டி விளக்குகின்றார். இது இன்றும் இயல்பாகவே ஒரு ஆணிடம் உள்ள அச்ச உணர்வாகக் காணப்படுகின்றது.

வெள்ளிவீதியார் பாடல்களில் பெண் உளவியல் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது என்று நோக்கினால்,

“கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காஆங்கு
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் மாமைக் கவினே

இனிய சுவையுடைய பசுவின் பாலானது அதனுடைய கன்றாலும் அருகப் படாமல் பாத்திரத்திலும் கறக்கப்படாமல் நிலத்திலே சிந்துவதுபோல எனக்கும் பயனின்றி என் தலைவனுக்கும் உதவாமல் என் அழகு பசலை நோய் உண்ணும் நிலையைப் பெற்றுவிட்டதே என்று பாடுகின்றாள். பசலை நோய் எனப்படுவது தலைவனை பிரிந்து வாடும் தலைவிக்கு உடல் மெலிந்து, உடல் அழகு போய், முகப்பொலிவு இழந்து, கைகளில் அணிந்திருக்கும் வளையல்கள் கழன்று விழும் நிலை ஏற்படல். இதனை ஒரு பெண் ஆண் இல்லாமல் தனிமையில் பசலைநோய் வாய்ப்பட்டு நிற்கும் நிலையை வெள்ளிவீதியார் அழகாகப் பாடுகின்றார்.

இடிக்கும் கேளிர்! நும் குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல்போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்க அரிதே

என்னைப் பற்றித் தப்பாகக் கருதும் உறவினர்களே! ஞாயிறு கதிர் பரப்பும் வெப்பமாகிய பாறையிலே வைக்கப்பட்டிருக்கின்ற வெண்ணெய் கையிழந்த ஊமையால் காவல் காக்கப்படுகின்றது. அவ்வெண்ணெய் அவனால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது உருகி அழிவது போல காமநோய் பரவிய எனது உடலில் உள்ள உயிரும் அழியப் போகிறது முடிந்தால், நீங்கள் என்னுடைய காதல் நோயைத் தடுத்து நிறுத்துங்கள் என்கின்றாள். இவ்வாறு தலைவனைப் பிரிந்து வாடுகின்ற ஒரு பெண் அவனுக்காகக் காத்திருந்து அவனைத் தேடிச் செல்லும் மன உறுதியையும் கொண்டிருக்கின்றாள் என்பதை

நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலில் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ நம் காதலோரே

என்னும் பாடலிலே தலைவன் நிலத்தை அகழ்ந்து அதனுள் புகுந்து செல்ல முடியாது. வானின் உயரே பறந்து செல்ல முடியாது. பெரிய கடலிலே காலால் நடந்து சென்றிருக்க முடியாது. எனவே ஒவ்வொரு நாடு தோறும், ஊர்தோறும், குடிதோறும், சென்று தேடினால், நிச்சயமாகக் கண்டுபிடித்து விடலாம் என்கிறார். இப்போதுள்ள முகநூல் இல்லாத சமயத்திலேயே ஒரு பெண் இவ்வாறு சிந்திக்கின்றாள் என்றால், அவள் காதலுக்காக எவ்வாறு மனவுறுதி பெற்றிருக்கின்றாள் என்பது அறியக்கூடியதாக இருக்கின்றது.

பலகாலம் ஒரு பொருளை நினைத்து ஏங்குபவர்கள், கனவிலே அப்பொருள் கிடைத்துவிட்டதாக நினைத்து நிறைவு பெறுவதைக் குறிக்கும் பாடல்களும் வெள்ளிவீதியார் பாடல்களில் காணப்படுகின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலே மண்கலத்திலே நீருள்ளது என்பதை அதன் கசிவு காட்டுவது போல ஒரு பெண் தன் வேட்கையை உணர்த்த வேண்டும் எனப்படுகிறது. இப்போது கூட ஒரு பெண் தன் உணர்வுகளை சமுகத்திடையே வெளிப்படையாகக் கூறத் தயங்கும் நிலை காணப்படுகின்றது. ஆனால், சங்க காலத்திலேயே வெளிப்படையாகத் தன் உணர்வுகளைப் பாடிய ஒரு முற்போக்குவாதியாகவே வெள்ளிவீதியாரை நான் காண்கின்றேன்.

(வெற்றிமணி பங்குனி மாத இதழ் 2019)

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் பன்முகப் புலமையும் வாய்க்கப்பெற்ற சந்தர்ப்பங்களும்

**கா**லங்காலமாய் விரைகின்ற பொழுதுகளிலே சில அற்புத மான அவதாரங்கள் தோன்றித் துலங்கி மறைந்து போகின்றனர். ஆனால், காலம் காலமாய் அவர்கள் ஆற்றிய சேவைகள் அவர்களை இறவாப் பேறு பெற்ற பெரியார்களாக உலக அரங்கிலே வாழ வைக்கின்றன. மகத்தான மக்கட் பிறப்பிலே இறைவனால், பார்த்துப்பார்த்து நுண்ணறிவை ஊட்டிப் படைக்கப்பட்ட படைப்புக்களே கிழக்கின் ஜோதி விபுலானந்த அடிகளார் போன்ற துறவிகள்.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியினைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது.

என்று பாடிய சுவாமி விபுலானந்த அடிகளார் அறிவுப்பசி மட்டுமன்றி அநாதைகளுக்கு அடைக்கலம் கொடுத்து, சாதிமத பேதமின்றி ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்ட தாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக, சமூகத்துறவியாக, சமூகச்சீர்திருத்தவாதியாக, சமயம், மொழி, கல்வி, கலை என ஐம்பது ஆண்டுகளுக்குள்ளேயே பல பக்க சாதனைகள் புரிந்து, வாழ்ந்து உலக வாழ்க்கையைத் துறந்த அடிகளார் அவர்களின் வாழ்க்கையும், அதற்கான சந்தர்ப்பங்கள் அவருக்குக் கிடைத்தமையும், அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டமையும், கற்றதைக் கொண்டு தன்னை விளங்கச் செய்தமையும், காலம் காலமாய் அழியாப் புகழைத் தேடிக் கொண்டமையும் ஆச்சரியத்தில் ஆற்றும் விடயங்களாகக் காணப் படுகின்றன. கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு பிரமாண்டமாக என் மனக்கண்ணில் தோன்றுகின்றார்.

**16**

தமிழர்களுக்கு விபுலானந்த அடிகளார் அடையாளம் என்றால், விபுலானந்த அடிகளாருக்கு மட்டக்களப்பு மண்

அடையாளமாகக் காணப்படுகின்றது. திருகோணமலை, அம்பாறை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களை எல்லையாகக் கொண்ட மீன்பாடும் தேனாடு என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திலே காரைதீவு என்னும் பிரதேசத்திலேயே அடிகளார் அவதரித்தார். கிழக்குத் திசையிலே வங்கக்கடல் காட்சியளிக்க மேற்குத் திசையிலே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வயல்வெளிகள் பச்சைப்பசேலென்று படர்ந்து காணப்பட தென்றல் இசையெழுப்பும் தென்னைமரச் சோலைகளும், அல்லி, ஆம்பல், கலைமகள் வீற்றிருக்கும் கண்கவரும் தாமரைகள், இதழ் விரிந்து அமைத்திருக்கும் அழகுத் தடாகங்கள், மா,பலா, கமுகுத் தோட்டங்களும் அமையப்பெற்று காரைதீவு மகள் காட்சியளிப்பாள். இயற்கை எழில் பொங்கும், இயல்பாகவே கவித்துவத்தை ஊட்டுகின்ற நிலம் அடிகளாரின் இயல், இசை அறிவுக்கு அடித்தளமிட்டது.

இதனையே கவிஞர் பரஹம்ஸதாசர் "கமுகு, மா, கதலி தென்னை, கன்னல் நெற் தென்னலொடு திமு திமுவெனச் செழுந்தமிழ் வளரச் செய்யும் அமைதி காரேறு தீவு அம்புவிக்கும் உவந்தளித்த தமிழ்மணி விபுலானந்தன் என்று பாராட்டுகின்றார்.

அடிகளார் அவர்களுக்குத் தம்பிப்பிள்ளை என்னும் நாமத்தையே பெற்றோர் சூட்டினர். இளமையில் நோய்வாய்ப்பட்டதனால் கதிர்காமம் கொண்டு சென்று அவருக்கு மயில்வாகனன் என்னும் நாமம் சூட்டப்பட்டது. எப்பொழுதும் சாந்த மாகவே காணப்படும் இவரை, மயில்குஞ்சு என்று இளமையிலே அனைவரும் அன்புடன் அழைப்பார்கள். 1922 ல் சென்னை மயிலாப்பூரில் அமைந்திருந்த இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து பிரபோதசைதன்யர் என்னும் பிரமச்சரிய ஆச்சிரமப் பெயர் சூட்டப்பட்டார். 1924 ஆம் ஆண்டு பௌர்ணமி சித்திரை தீட்சையின் பின்பே விபுலானந்த அடிகளார் என்னும் நாமம் சூட்டப்பட்டது. விபுலம் என்றால், அறிவு. ஆனந்தம் என்றால், மகிழ்விப்பவர். அறிவினால் உலகை மகிழ்விப்பவர் என்னும் அதி அற்புதமான கருத்தமைந்த பொருத்தமான பெயர் இவருக்குச் சூட்டப்பட்டது. இவர் குணம் நாடி, குறிப்பிட்ட நாமங்கள் அவரை வந்து அமைந்தாலும் காரணப் பெயராக அமையும் விபுலானந்த அடிகளார் என்னும் நாமமே உலகலாவிய ரிதியில் நின்று நிலைக்கின்றது.

ஒருமுறைதான் படிப்பார் உள்ளத்தில் பதித்துவிடுவார். இவர் அறிவுத் திறமை மேலும் வெளிப்பட இவரின் தந்தையார் சாமித்தம்பி அவர்கள் வீட்டிலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். பெரியபுராணவசனம், பஞ்சதந்திரம், வினோதரசமஞ்சரி, வில்லிபாரதம், நைடதம், கந்தபுராணம், காசிகாண்டம், முதலிய நூல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தந்தையாரால் தரப்பட்டது. நுனிப்புல் மேய்வது

போலன்றி ஒவ்வொன்றையும் முழுவதுமாகக் கற்றாலன்றி மற்றைய நூல் தரப்படமாட்டாது. துறைபோக ஒன்று கற்றதன் பின்பே மற்றைய நூல் தரப்படும் என்னும் தந்தையாரின் கட்டளையின் படியே தான் கற்றதாக அடிகளார் கூறியுள்ளார். பொறுப்பான தந்தை அமையப்பெற்றதும் அடிகளாருக்கு ஆரோக்கியமாகவே இருந்தது. அவர் வழிகாட்டலில் கற்றகல்வி நுண்மாண் நுழைபுலம் போல் அறிவுடையவராக்கியது.

இவர் வடமொழி, இலத்தின், கிரேக்கம், பாளி, சிங்களம், ஆங்கிலம், வங்காளம், அரபு ஆகிய மொழிகளில் கொண்ட ஆழ்ந்த அறிவே ஏனைய இலக்கியங்களுடன் தமிழ்மொழியை ஒப்பிட்டுத் தமிழின் இன்பம் நுகரக்கூடியதாக இருந்ததுடன் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் ஒன்றாகவே ஆய்வுசெய்த முதல் வித்தகராகவும் திகழக்கூடியதாகவும் இருந்தது.

கிரேக்க இலக்கியங்களை ஒப்பிட்டு சிறப்பான நூல்கள் எழுதியுள்ளார். மதங்கசூளாமணி என்னும் நூல் தமிழ் நாடகம் பற்றிய ஆய்வுப் பெட்டகமாகத் திகழ்கின்றது. தரங்கயனாரின் தசரூபத என்னும் வடமொழி நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வடமொழி நாடகம் எப்படி இருக்கவேண்டுமென்று அதிலுள்ள எடுத்துக்காட்டியல் என்னும் பகுதியில் விளக்கியுள்ளார். சேக்ஸ்பியர் நாடகங்களுடன் ஒப்பிட்டு மேற்கு நாட்டு நாடகங்களில் நாடக உறுப்புக்கள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதை விளக்குகின்றார். இவ்வாறு சேக்ஸ்பியர் நாடகங் களுடன் ஒப்பிட்டு தமிழ் நாடகங்களுடன் ஆய்வு செய்ய இவருக்கு ஆங்கில அறிவு மேம்பட்டுக் காணப்பட்டது. இவ்வாறு ஆங்கில அறிவு மேம்பட மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி என்னும் ஆங்கிலப் பாடசாலை மெதடிஸ்த மிஷனரிமாரும் கத்தோலிக்கக் குருமாரும் அடியெடுத்துக் கொடுத்தனர். காலைப்பொழுது பாடசாலைப் பாடங்கள், மாலைப்பொழுது பாரத வசனங்கள் கற்பது என பழகிய பழக்கமானது பின் நாளில் தமிழும் ஆங்கிலமும் ஒன்றாகக் கற்க இலகுவாக இருந்தது. அதேபோல் கணிதத்தை இவர் புனித மைக்கேல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இருந்த பிரெஞ்சு அதிபர் வண.பொனல் என்பவரிடம் கற்றார். இது இவரது கணிதத்திறமைக்கு அடிகோலாக அமைந்ததுடன், யாழ் நூல் ஆராய்ச்சிக்குக் கணிதத் திறமையும் காரணமாக அமைந்தது.

இசைமேல் ஆர்வம் தோன்ற மட்டக்களப்பு வாவியிலே பூரணநிலவு பொங்கிப் பூரிக்கும் பொழுதினிலே அங்கு பொங்கி எழும் நீரரமகளிர் காந்தர்வ இசையில் களிப்புற ஆழக்கடல் நோக்கி வாவியிலே பயணம் செய்வார். அவ்விசை கேட்டு மகிழ்ந்தின்புறுவார்.

அதனை அடிகளார் வர்ணிக்கும் பாங்கை நோக்குவோம்
“அஞ்சியிறை புள்ளொலியும் ஆன்கன்றும் கழுத்தில்
அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்
பஞ்சியைந்த அணிசேரும் இடையாமப் பொழுதில்
பாணனொடும் தோணியிசை படர்ந்திரனோர் புலவன்
தேனிலவு மலர்பொழில் சிறைவந்து துயில
செழுந்தரங்கத் தீம்புனலில் நண்டினங்கள் துயில

மீனலவன் சிலவந்து விண்ணிலவன் துயில
விளங்கு மட்டு நீர்நிலையில் எழுந்ததொரு நாதம்”

அதுபோல், ஆண்டுதோறும் ஆனித்திங்களிலே மட்டக்களப்பு மாநிலமெங்கும் காணப்படும் கண்ணகி அம்மன் ஆலயங்களில் பாடப்படும் பாடல்களும் சிலப்பதிகார பாடல்களின் சிலம்பொலிகளும் விபுலானந்த அடிகளாரின் இசை ஆராய்ச்சிக்கு அடிமனது ஆரம்பக் காரணமாக இருந்திருக்க வேண்டும். விஞ்ஞானத்தையும் தமிழையும் ஒன்றாகக் காணும் திறமை அடிகளார்க்கு இருந்ததனால், கணிதம், பௌதிக விஞ்ஞானம், தமிழ் இசை அறிவு கலந்து இவர் யாத்து, 1947ல் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் வெளியீடு செய்யப்பட்ட யாழ்நூலானது அரங்கேறக் காரணம் பற்றி அவரே ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். “எந்த நூலை வாசித்தாலும் தேனாகத் தித்திக்கவில்லை சிலப்பதிகாரமே தேனாகத் தித்தித்தது” எனத் தன் வாயாலேயே எடுத்துரைத்திருக்கின்றார். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதையை ஆராய்ந்தார். சிலப்பதிகாரத்தின் உரையில்லாத பகுதிகளுக்கு உரைதேடப் புகுந்த ஆராய்ச்சியின் பயனும், மாதவியும் கோவலனும் கடற்கரையிலே இருந்து மாறிமாறி மீட்டிய யாழ் இசையும் இவர் கருத்தைக் கவர்ந்தது. இவ் யாழை யாம் ஏன் மீண்டும் பெற முடியாது என்று சிந்தித்தார். வங்கக்கடலன்னை கொண்டு சென்ற முளரியாழ், சுருதிவீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டிவீணை, போன்றவற்றை அடிகளார் பழந்தமிழ் நூல் களில் கற்றவற்றைக் கொண்டு மீண்டும் 23 ஆண்டுகள் உழைத்து உலகிற்கு செய்தளித்தமை கண்டு இசைத்தமிழ் அன்னை ஆச்சரியத்தில் அகலக்கண் விரித்தாள்.

யாழ் கருவியை பெண்ணின் 7 வகைப் பருவத்துடன் ஒப்பிட்டு அடிகளார் வர்ணித்திருக்கும் பாங்கு இன்புறத்தக்கது. “சரித்திரகால எல்லைக்கெட்டாத காலத்திலே வில் யாழெனக் குழவியாயுதித்து மழலைச்சொற்பேசி சீறியாழ் என்னும் பேதைப் பருவமெய்தி, பாணனொடும் பாடினியொடும் நாடெங்கும் திரிந்து ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொல் கூறிப் பின் பேரியாழ் என்னும் பெயரோடு பெதும்பைப் பருவமெய்திப் பெரும்

பாணரோடு சென்று குறுநில மன்னரும், முடிமன்னரும், தமிழ்ப்புலவரும், கொடைவள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரைபகர்ந்து அதன்பின் மங்கைப்பருவமெய்தி அப்பருவத்திற்கேற்ப புதிய ஆடையும் அணிகலன்களும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமை காட்டி மடந்தைப் பருவம் வந்தெய்தலும், திருநீலகண்ட பெரும்பாணரோடும், மதங்கசூளாமணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து தெய்வ இசையினாலே அன்பருள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் வித்தகராற் பாராட்டப்பட்டு அரிவைப் பருவம் வந்து எய்துதலும் அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்காகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்துச் சீரும் சிறப்பும் எய்தி இன்று யாழ் என்னும் மொழி நங்கை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினாள்" என்று எடுத்துரைத்தார். மீண்டும் உயிர் பெற வைத்தார்.

அடிகளாரின் சமூகசேவைக்கு வாலிபப் பருவத்தில் அவர் பயின்ற படைப்பயிற்சி உரமெடுத்துக் கொடுத்தது. ஐரோப்பிய மகாயுத்த காலத்திலே தரைப்படையில் சேர்ந்து குதிரையேற்றம், துப்பாக்கிப் பிரயோகம், முதலிய படைப்பயிற்சிகள் பெற்றார். கடற்கரையில் காவல் இருந்து எதிரிகளை நாட்டுக்குள் புகவிடாமல் காத்தார். சமூகத்தொண்டு தீண்டாமை ஒழிப்பு, சமயத்தொண்டு இவை எல்லாம் இவரை ஒரு வீரத் துறவியாகவே காட்டுகிறன.

யோக சுவாமிகளின் தொடர்பே இவருக்கு ஆன்மீக வளர்ச்சிக்குத் துணை யாகத் திகழ்ந்தது.

பாரதிமேல் கொண்ட தீராத நாட்டம், தமிழை நவீனப்படுத்தும் பண்பு, ஒப்பியல் கல்வி இவையே பாரதியை உலகுக்கு வெளிப்படுத்த உதவியாக இருந்தன. பாரதியைப் பித்தன் என்றும், கஞ்சாக்கவி என்றும், அவர் பாடல்கள் வீண் உரைநடையென்றும், தூற்றிய தமிழறிஞர்களை கற்றறிந்தார் ஏற்றுவது கலித்தொகை மட்டுமன்று கண்ணன் பாட்டுமே என்று கூறிப் புரிய வைத்தவர் விபுலானந்த அடிகளாரே என்பது வெள்ளிடைமலை. "தமிழர்களின் பண்பாட்டை பாரதியார் கண்களைக் கொண்டு பார்க்க வேண்டும்" என்று பாரதியைப் பெருமைப்படுத்தினார். பாரதி பெருமையை உலகுக்குணர்த்த முதற்காரணம் அடிகளார் என்றால், அது மிகையில்லை. இது மறைக்கப்பட்ட உண்மை யுமாகின்றது.

அடிகளார் தமிழிசை சம்பந்தமாக நிகழ்த்திய சொற்பொழிவுகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இப்பொழுது நூல்களாக வெளிவந்துள்ளன. எதையும் ஆழ்ந்து நோக்கும் அவர் சிறப்பை நடராசவடிவம் என்னும் நூல் விளக்குகின்றது. ஆரியமும் தமிழும் வல்ல பண்டிதமணியாருக்கு

ஆங்கிலமொழிக் கவிநயத்தை எடுத்துக்காட்டக் கருதி எழுதப்பட்ட பாட்டுடை உரைத்தொடரே ஆங்கிலவாணி என்னும் கட்டுரையாகும். அடிகளாரின் கற்பனை வளத்தினையும், கவித்துவத் தினையும் அவரால் எழுதப்பட்ட தனிப்பாடல்கள், தில்லைமாநகர் திருவமர்மார்பன் திருக்கோயிற்காட்சி, கங்கையில் விடுத்த ஓலை, நீரரமகளிர் இன்னிசைப்பாடல், மொழிபெயர்ப்புப் பாடல்கள் போன்றன மெய்ப்பிக்கின்றன.

குருகுலத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த போது அவரிடம் பணிபுரிந்த ஒருவர் மது அருந்தி வந்திருந்தார். அதனை உணர்ந்த சுவாமிகள் அவரிடம் “நீ மது அருந்தியிருக்கின்றாய். நீ இங்கு வரக்கூடாது” என்றார். அதற்கு அவர் சுவாமி நான் பழங்கள்தான் சாப்பிட்டேன் என்றார். பழம் கள் என்று சிலேடையாக அவன் சொன்ன காரணத்தினால் ஆத்திரப்பட்ட சுவாமிகள் “இனிமேல் என் முகத்தில் முழியாதே” என்றார். இவருடைய அந்த சொல்வாக்கு எந்த அளவிற்குப் பலித்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக அன்று வீட்டிற்குச் சென்ற அந்த மனிதன் அன்றே இறந்து விட்டார். இதே போல் இன்னும் ஒரு எடுத்துக்காட்டாக ஒருமுறை சுவாமிகள் ஆச்சிரமத்தில் இருக்கும் போது ஒருவர் என்னுடைய மகனுக்குப் பாம்பு கடித்துவிட்டது என்று அலறி அடித்து ஓடி வந்து சுவாமிகளிடம் கூறினார். அதற்கு “இல்லை நீ வீட்டிற்குச் சென்று பார்” என்று கூறினார். அம்மனிதன் வீட்டிற்குச் சென்று பார்த்த போது எந்தவித பாம்பு கடித்த அடையாளமும் இன்றி அச்சிறுவன் சுகமாக வீட்டில் காணப்பட்டான். இவ்வாறு இருந்த இடத்தில் இருந்தபடி உலகத்தைப் பரிபாலிக்கக் கூடிய சக்தி சுவாமிகளுக்கு இருந்தது. இவ்வாறு நாவன்மை சொல்வாக்கு மிக்கவராகச் சுவாமிகள் காணப்பட்டார்.

இறுதியாக வானொலி ஒன்றுக்குப் பேட்டி அளிப்பதற்காகச் சென்றிருந்தார். அவரோடு பிள்ளைப்பாட்டுக் கவிஞர் பீதாம்பரனார் அவர்களும் சென்றிருந்தார். மதுரையில் இருக்கின்ற வியங்கொண்டான், கூத்தபிரான் என்னும் இருவரே இப்பேட்டியை சுவாமிகளிடம் எடுத்தவர்களாவார். இவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது கவிஞர் பீதாம்பரனார் மடியிலே சாய்ந்தார். இதுவே சுவாமி களுடைய இறுதி பயணமாகவும் இறுதி உரையாகவும் இருந்தது. இவ்விடயம் பிள்ளைப்பாட்டுக் கவிஞர் பீதாம்பரனாரின் மகன் எம்.பி.பரமேஷ் அவர்கள் தன்னுடைய தந்தையின் நினைவுமலரில் எழுதியிருந்தார்.

முத்தமிழ் வித்தகர், சென்னை இராமகிருஸ்ண மடத்துறவி, அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் பேராசிரியர், கரந்தை தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவர் தமிழவேள் உமாமகேஸ்வரனாரின் ஆருயிர்த் தோழர், பன்மொழிப் புலமையாளர் எனத் தொடர்ந்து சொல்லிக்

கொண்டே போகும் அறிவுஞானம் பெற்ற அடிகளாரின் நினைவுநாளை இலங்கை அரசு அகில இலங்கை தமிழ்மொழி தினமாக பிரக டனப்படுத்தி கௌரவித்தது என்பது ஆச்சரியப்படும் விடயமல்ல.

முற்றுமுழுதான அறிவுத் திறனும், அயராத உழைப்பும் தமிழ், இலக்கியம், சமயம், கலை, சமூக நாட்டுப்பணிகளும் இவர் உள்ளத்தில் ஊற்றாய் ஊறிக் கொண்டிருந்தமையே இறவாப்புகழ் பெற்று என்றும் உலகமெலாம் போற்றப்படும் உத்தம துறவியாக, வித்தகராக, அடிகளார் திகழ்வதற்கு காரணமாகின்றன. கலியுக அகத்தியர், புதுமைக்கபிலன், குருபரம்பரையின் குலவிளக்கு, வீரத்துறவி இவ்வாறாக அறிஞர்களால் போற்றப்படும் அடிகளார் பிறந்த மண்ணில் நானும் பிறந்தேன் என்னும் போது எனக்குள்ளும் மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகிக்கின்றது.

(ஐரோப்பா ஆய்வியல் மாநாடு 2018)

## கடமையைச் செய்யுங்கள் பலனை எதிர்பார்க்க வேண்டாம்

**ந**ன்றி என்ற வார்த்தையை உச்சரிக்கும் போது ஔவையார் சொன்ன

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்

என்னும் வரிகளே ஞாபகத்திற்கு வருகின்றன. வேர்களின் மூலம் பெறுகின்ற நீர் மனிதனால் கொடுக்கப்பட்டதாக இருக்கலாம். வானிருந்து வந்த மழையின் மூலம் பெற்றதாக இருக்கலாம். ஆனால், கிடைக்கும் பலனோ மனிதனுக்குத்தான். தான் பெற்ற நீரைத் தண்ணீராக மனிதனுக்கு தென்னை மரம் இளநீராகத் தருகின்றது. வானுக்கு நீராக எப்படி நன்றிக் கடனாகச் செய்ய முடியும் என்றால், வியர்வைத் துளியாகவும், ஏதோ வழியாகவும், அந்நீர் திரும்பவும் வானத்திற்குச் சென்று விடுகின்றது. இவ்வாறே சுழற்சி முறையில் நன்றி செய்தவருக்குச் சென்றடையும் என்பதே உண்மை. நாம் ஒருவருக்கு உதவி செய்கின்றோம். அதன் பலனை எதிர்பார்த்துச் செய்வதில்லை. “கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே” என்று கிருஸ்ணபரமாத்மா அர்ச்சுனனுக்குச் சொல்கின்றார். நாம் செய்கின்ற உதவிக்குப் பிரதியுபகாரமாக அவ்வுதவிக்கு நன்றியானது பிறர் எமக்குச் செய்யும் உதவியின் மூலம் கிடைக்கின்றது.

காலம் அறிந்து செய்யும் உதவியானது உலகத்தைவிட பெரிதானது என்று வள்ளுவர் எடுத்துச் சொன்னது எத்தனை உண்மை என்று புரிந்து கொள்கின்றோம். தாயகத்திலே பல கஸ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு பாரிய உதவிகளை இங்கு வாழுகின்ற மக்கள் செய்கின்றார்கள். அவர்கள் நன்றி சொல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அவை செய்யப்படுவதில்லை. ஆனால், அதன் மறுவடிவம் எமக்கு ஏதோ வடிவில் கிடைக்கின்ற போது அவ்வுதவியின் நன்றியை நாம் பெற்றுக் கொள்ளுகின்றோம் என்பது அர்த்த மாகப்படுகின்றது.

17

ஓரிடத்தில் இவ்வளவு செய்கின்றோம் ஒரு நன்றி சொல்லவில்லையே என்று யாருமே கலங்க வேண்டியது அவசியமில்லை. அது உலகின் மூலையின் சேகரிக்கப்படுகின்றது என்பதே உண்மை. சிலர் வார்த்தையால் சொல்கின்றார்கள். சிலர் கண்களின் பரிவினால் காட்டிக்கொள்கின்றார்கள். பெற்றதாய் கர்ப்பப்பையினுள் பாதுகாப்பாக வைத்திருந்து உலகத்திற்கு எம்மை நன்கொடையாகக் கொடுக்கும் போது இந்த உலகத்தின் நன்றியைத் தாய் எதிர்பார்க்கவில்லை. நாள்தோறும் ஊட்டி வளர்த்தபோது பிள்ளை வாயிலிருந்து நன்றி என்ற வார்த்தையைத் தாய் என்றுமே எதிர்பார்த்து இருப்பதில்லை.

கடலில் தோன்றுகின்ற முத்து மனிதனுக்கே பயன்படுகின்றது. மனிதன் கடலுக்கோ சிப்பிக்கோ நன்றி சொல்வதில்லை. எங்கு தோன்றுகிறதோ, அங்கே பரிசளிக்கப்படுகிறது. நன்றி என்பது வெறும் வார்த்தை அல்ல. அது உள்ளத்து உணர்வு. அந்த உணர்வில் நாம் மூழ்கடிக்கப்படும் போது ஏதோ வகையில் அதைத் திருப்பிச் செலுத்த முற்படுகின்றோம். இவ்வுலகிலே நாம் வாழுகின்ற போது ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டுக் கொண்டே இருக்கின்றோம். காலையில் எழுந்து பல் துலக்குவதில் இருந்து உணவு அருந்துவதில் இருந்து ஒருநாள் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனித்தோமென்றால், பற்பசை உற்பத்தியாளரிலிருந்து மெத்தை தயாரிப்பாளர் வரை நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். அங்கே அவருக்கு அளிக்கும் வேதனம் ஏதோ முறையில் எங்கள் நன்றி உணர்வை தீர்த்துவிடுகின்றது. இது உள்ளத்தின் வெளிப்பாடாக இருக்கும் பட்சத்தில் யாருக்கு நாம் நன்றிக்கடன் பட்டோமோ அவருக்கு எம்மையறியாமலே மதிப்பளிக்கத் தலைப்படுகின்றோம். அவர் பண்புகளை ஏற்றுக் கொள்ள முற்படுகின்றோம். அவர் செய்கின்ற தவறுகளை மன்னிக்கத் தலைப்படுகின்றோம்.

ஏனென்றால், இங்கு வள்ளுவரை முன் நிறுத்த ஆசைப்படுகின்றேன்.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

நன்றல்ல என்று நாம் நினைத்து அவரிடம் வஞ்சம் பாராட்டுவதால், எவ்வித இலாபமும் கிடைக்கப் போவதில்லை. காலப்போக்கில் அவரில் மாற்றம் ஏற்படலாம், நன்றல்லாத விடயத்தை நன்றாக்குவதற்குரிய கடமைகளில் அவர் ஈடுபடலாம். காலம் கூடிவரும் பட்சத்தில் நாம் மறந்தது நன்றெனவே எமக்குத் தோன்றும்.

இதைவிட ஒருவருக்கு ஒரு உதவியைச் செய்துவிட்டு அதற்குரிய நன்றியை எதிர்பார்த்திருப்பது முறையாகாது. நல்லது அதாவது நன்று

என்ற சொல்லில் இருந்து நன்றி பிறக்கின்றது. நாம் பிறருக்குச் செய்வது நன்று என்றால் அது நன்றியாக உருமாறுகின்றது. ஒருவர் செய்த நல்ல காரியமானது அதனை ஏற்றுக் கொள்பவர்களைப் பொறுத்து அமைகின்றது. பஞ்சமே இல்லாத ஒருவருக்கு அள்ளிக் கொடுப்பதும், பசியே இல்லாத ஒருவருக்கு சமைத்துப் படைப்பதும் எந்தவிதத்தில் நன்றாக முடியும். அதை ஏற்றுக் கொள்பவர் மனநிலை எப்படி இருக்கும். இந்த சந்தர்ப்பத்தில் எமக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியே எமக்குக் கிடைப்பதும், அவர் எமக்குத் தருவதுமான நன்றியுணர்வு என்று ஏற்றுக் கொண்டு எதிர்பார்ப்புக்களைத் தவிர்க்க வேண்டும்.

பொன்னும் பொருளும் அள்ளிக்கொடுத்த மன்னர்களுக்கு பாட்டைத்தவிர வேறு எதுவுமே இல்லாத புலவர்கள் பாடல்களால் புகழ்மாலை சூட்டி நன்றிக் கடனை தீர்த்தார்கள்.

"மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என
நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லை என
அறம்பாடிற்றே ஆயிழை கணவ"

என புறநானூற்றுப் பாடலிலே சோழன் குளமுற்றத்துத் துஞ்சி கிள்ளிவளவன் என்னும் மன்னனுக்கு ஆலத்துக்கிழார் பாடுகிறார். தாலி அணிந்த பெண்ணின் கருவைச்சிதைத்தல், பார்ப்பானை அடித்தல் ஆகிய பாவச்செயல்களைச் செய்தவர் களும் கழுவாய் செய்து போக்கிக் கொள்ளலாம். ஆனால், உலகமே கைவிட்டுப் போவதாயினும் நன்றி மறந்தவனுக்கு அப்பாவத்திலிருந்து தப்புவதற்கு வழியே இல்லை. இதேபோல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று வள்ளுவர் அச்சுறுத்துகின்றார். மனமறிந்து நன்றி செய்வார் அதனை மறந்திருக்க, நன்றிக்கடன் பட்டவர் நன்றிக்கடனை எவ்வகையிலும் தீர்த்து வைப்பது இயல்பாக நடக்க வேண்டிய கடமையாகின்றது.

கவிதை கட்டுரையல்ல. கவிஞன் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடு. அவன் பேசுகின்ற விடயங்களில் பல மௌனங்கள் மறைந்திருக்கும். அதனை தேடிப்பெறுபவனே சிறந்த கவிதா ரசிகன். மறைவாக ஆழமாகச் சில விடயங்கள் சிறப்பாகச் சொல்லப்படும் துளிர்ப்பாவே ஹைக்கூக் கவிதையாகின்றது.

தமிழைப் போன்று சங்கம் வைத்து இலக்கியம் வளர்த்த ஜப்பானிய புகழ்பெற்ற கவிதை வடிவமே ஹைக்கூவாகும். 1603 தொடக்கம்1863வரையுள்ளகாலப்பகுதியில்சீனஜப்பான்மொழிகளின் கலவையாக உருப்பெற்ற இக்கவிதை வடிவத்தினைப் பல நாடுகள் பின்பற்றி வந்தன. அவ்வகையிலேயே இன்று தமிழ்மொழியிலும் ஹைக்கூக் கவிதைகள் எழுதப்படு கின்றன. முதன் முதலில் 16.10.1916 அன்று வெளிவந்த சுதேசமித்திரன் என்னும் பத்திரிகையில் மகாகவி பாரதியார் ஜப்பானிய கவிதைகள் என்னும் தலைப்பிலே சில ஜப்பானிய ஹைக்கூக்களை மொழிபெயர்த்து எழுதியிருந்தார். இதுவே தமிழில் ஹைக்கூக்களின் புதுவர வாக அமைகின்றது. இவர் ஹைக்கூக் கவிதைகளை அறிமுகப் படுத்தும்போது இதன் பெயரைக் ஹொக்கு என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் ஹைக்கூத் தொகுப்பு நூலாக வெளிவந்த முதல் நூல் அமுதபாரதியின் “புள்ளிப்பூக்கள்“ என்னும் நூலேயாகும். இது ஆவணி 1984 இல் வெளியானது. அதனைத் தொடர்ந்து 1984 கார்த்திகை மாதம் அறிவுமதி அவர்கள் “புல்லின் நுனியில் பனித்துளி“ என்னும் நூலை வெளியிட்டார். நிர்மலா சுரேஷ் என்னும் பெண்கவிஞர் ஹைக்கூ பற்றிய ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளார். கவிஞர் கு.தேன்மொழி அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட “துளிப்பாக்களில் அழகியலும் சமுதாயமும்“ என்னும்பெயரில்வெளியிடப்பட்ட ஆய்வுநூலும்ஹைக்கூ பற்றிய தெளிவையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. ஜப்பானிய வாகா, சோகா, செடோகா, கட்டவ்டா, தான்கா, ரெங்கா, ஹொக்கு முதலிய இலக்கிய வடிவங்களை இனங்காட்டித் தமிழிலே ஹைக்கூ எப்படி கையாளப்படுகின்றது என விளக்கியுள்ளார்.

ஹைக்கூ கவிதையானது ஐந்து, ஏழு, ஐந்து என முறையே 17 அசைகளைக் கொண்டு 3 அடிகளில் எழுதப்படும். காற்றின் கைகள் என்னும் அமுதபாரதியின் நூலிலே இவ் அசை அமைப்புடன் கூடிய ஹைக்கூக் கவிதைகளைக் காணலாம். ஆனால் தற்போது அவ் இலக்கணம் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஒரேயொரு காட்சியையோ பொருளையோ உணர்வையோ வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதன் ஆரம்பப் பெயர் ஜப்பானியரால் ஹொக்கு என்று வழங்கப்பட்டது. ஹைகை என்று திரிந்து அதாவது தமிழில் கஜகை என்று திரிந்து ஐக்கூவாயிற்று. அதாவது அணுத்தூசி போன்ற சிறிதானது என்னும் பொருள் கொண்டது. ஐ என்றால் கடுகு கூ என்றால் உலகம் கடுகு போன்ற சிறிய வடிவில் உலகளாவிய கருத்துக்களை செறிவாகத் தரும் கவிதை என்னும் பொருளிலும் வழங்கப்படுகின்றது.

வரிகளால் பெருந்தூண் எழுப்பாமல் குறைவான சொற்களால் அழகுணர்ச்சியை வெளிபடுத்த ஹைக்கூ கைகொடுக்கின்றது. வெளிப்படையாக எல்லாவற்றையும் கூறாமல் வாசகன் சிந்தனைக்கு இடம் கொடுக்கவேண்டும். ஹைக்கூக் கவி தைக்குத் தலைப்புத் தேவையில்லை. கவிதையின் அழகை இறுதி வரிகளில் அடக்க வேண்டும். இறுதி அடியில் முழுக்கவிதையினதும் வெளிப்பாடும், உணர்வும் பளிச்சென்று புலப்படும். இது மின்மினிப்பா, குறும்பா, வாமன் கவிதை, அணில்வரிக்கவிதை, துளிக்கவிதை, சிந்தர், கரந்தடி, விடுநிலைப்பா என்னும் பெயர்களினால் தமிழில் அழைக்கப்படுகின்றது.

அப்துல் ரகுமான் அவர்கள் பல ஹைக்கூக் கவிதைகளை மொழிபெயர்த்தார். எம்மைச் சுற்றி ஓராயிரம் ஹைக்கூக்கள் ஆழமாக நோக்கினால் அத்தனையும் அற்புதங்கள். சென் தத்துவத்தைப் பரப்புவதற்குக் ஹைக்கூக் கவிதைகள் மிகவும் உதவின.

அமுதபாரதியின் ஹைக்கூ
குளமொன்றை வெட்டு
குறைவின்றி நீர் நிரப்பு
குளிக்க வரும் நிலவு

தற்போது வரிகளுக்கு முக்கியத்துவத்தை அளித்து அசை பற்றிய அக்கறையை விடுத்து ஹைக்கூக்கள் எழுதப்படுகின்றன.

தற்போது இணையங்களில் பல சிறப்பான ஹைக்கூக்கள் வெளிவருகின்றன.

பத்துமலைத் தைப்பூசம்
உண்டியலைப் பார்த்தபடி
ஏழைச்சிறுமி
வாளியைக் காலி செய்ததும்

வானத்துக்குப் போனது
நிலவு.

தற்போது வரிகளும் அசைகளும் இழந்த நிலையில் ஹைக்கூ என்ற பெயரில் வெளிவரும் அற்புதமான ஹைக்கூக்களும் உண்டு

அழகான பொய்களில் அன்பினைப் பெறுவதை விட
உண்மையான கோபங்களை அன்பாகவே
ஏற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு ஹைக்கூ தமிழில் வந்து புகுந்தது. தன் அமைப்பையும் இலக் கணத்தையும் மாற்றி புதுப்பொலிவுடன் ஹைக்கூ என்னும் பெயருடன் இணை யத்தளங்களிலும் முகநூல்களிலும் வலம் வருகின்றது.

(வெற்றிமணி ஐப்பசி மாத இதழ் 2017)

## கம்பரும் அவர் வாழ்வியலும்

**நா**ம் எமது ஐம்புலன்களினால் பெறுகின்ற இன்பத்தைவிட இலக்கிய இன்பம் பெருமை பெற்றது. அதை அப்படியே ஏற்று சுவைத்து இன்புறுவோரும் உண்டு. வாழ்க்கைக்குத் தேவையான மெய்யுணர்வைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துப் பொருள் கொள் வோரும் உண்டு. இலக்கியத்தில் இன்பம் பெறுவோர் கம்பரைத் அறியாதிருக்கமாட்டார்கள். கம்பன் கற்றவர்க்கும், கற்பனை சுவை சுவைத்து இன்புறுவோர்க்கும் சுவாரஸ்யமானவர் மற்றவர்க்குச் சிதம்பரசக்கரம் போலாவார்.

இக்கம்பன் இலக்கியச்சுவை சில கண்டு இன்புற்று அவர் அகவாழ்வில் நடந்த சம்பவம் ஒன்றையும் எடுத்துக்காட்டி உலகுக்கு அறிவுரை பகரும் ஒரு கவிச்சக்கரவர்த்தி வாழ்வியலில் எவ்வாறு வேறுபட்டுள்ளார் என எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடை யேயுள்ள வேறுபாடு பற்றியும், இக்காலப் பண்புகளுடன் இவை எப்படி ஒன்றுபடுகின்றன எனவும் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

கம்பர்கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்பட்டவர். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் 'கம்பர் இலக்கியச்சுவை நுகரநுகர இன்பம் பயக்கும் உள்ளத்திலும் தேனூறும்' என்று கூறுகின்றார். இக்கம்பர் தமிழ் இலக்கியவரலாற்றிலே சோழர் காலப்பகுதி என்று சொல்லப்படும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு பிற்பகுதி முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் வாழ்ந்தவர். இக்காலப்பகுதியில் அரசியல் தழைத்தோங்கிய காலம், செல்வச்சிறப்பு மிக்க காலம். இக்கால வாழ்வியல் இலக்கியங்கள் போல் அக்காலத்தில் உலகியலைச் சிறப்பித்துக் கூறும் இலக்கியங்கள் தோன்றின. கம்பர் இயற்றிய காவியம் தன்னிகரில்லாத் தலைவனை எடுத்துரைப்பதாய்

19

இருந்தமைக்கு இதுவே காரணமாய் இருந்திருக்க வேண்டும். ஒரு தலைவனுடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுமுகத்தால் மக்களுடைய நல்வாழ்விற்குக்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளையும் எடுத்துரைக்கும் இலக்கியம் காவியம் அல்லது காப்பியம் எனப்படுகின்றது. மக்களுடைய நல்வாழ்வுக்கு இன்றியமையாத அறிவுரைகளை இலக்கியச்சுவை சொட்டுச் சொட்ட இராம கதை மூலம் கம்பரால் கம்பராமாயணம் இயற்றப்பட்டது. சொல்நயம், ஓசைநயம், கற்பனைநயம் என பல நயங்கள் எல்லாம் தன்னகத்தே கொண்ட கம்பராமாயணம் ஒரு கடல். அதில் மூழ்கி எடுப்பவை எல்லாம் முத்துக்கள். பாக்களின் சுவைகள் பலாக்கனியின் தேன் சுவைகள். அதில் ஒரு அற்புத சொல்நயம் ஒன்றை ரசிப்போம்

அஞ்சு வணத்தின் ஆடையுடுத்தாள், அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகமிகுத்தாள், அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரியத்தாள், அலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர்ஆரத் தணிகொண்டாள்.

இப்பாடலில் அஞ்சுவணம் என்னும் ஒரு சொல் வேறுவேறு பொருள் கொடுத்து நயம் காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. முதலாவதில் ஐந்து நிறங்கள், என்றும், அடுத்து அஞ்சும் உவணம் அதாவது அஞ்சுகின்ற கருடன் என்றும் பொருள் தந்தது. அடுத்து அம்சுவர்ணம் என அழகிய பொன் எனப் பொருள் கொண்டது. அடுத்து அம்சுவள் நத்தின் எனப் பிரிந்து அழகிய பெரிய சங்கு எனப் பொருள் கொள்ளப்பட்டது. இதன் பொருளை எடுத்து நோக்கினால், ஐந்து நிறங்களில் ஆடையுடுத்தாள், பாம்புகள் எல்லாம் கண்டு நடுங்கும் கருடனின் வேகத்தைக் கொண்டவள், அழகிய பொன் கொண்டு செய்யப்பட்ட மேலாடையை அணிந்தவள், கடல்நீரில் தோன்றிய அழகிய பெரிய சங்கிலுண்டான முத்துக்களினால் செய்யப்பட்ட ஒளி பொருந்திய மாலையை ஆபரணமாக அணிந்தவள் என இலங்காதேவியைக் கம்பன் சொல்நயம் மிக்க பாடல் மூலம் வர்ணிக்கின்றார்.

இதேபோல் இவர் காவியத்தில் வருகின்ற ஒரு பாடலில் படிக்கும் போதே ஓசைநயம் மிக்கு இருக்கின்ற ஒரு பாடலை எடுத்து நோக்குவோம்.

உறங்கு கின்ற கும்பகர்ண
உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்றுகாணெ
முந்தி ராயெழுந் திராய்
கறங்கு போல விற்பிடித்த
கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்குவாயி
னிக்கி டந்து றங்குவாய்

கும்பகர்ணனை யுத்தத்திற்கு அழைக்கும் பாடலை ஒரு தடவை உச்சரித்துப் பாருங்கள். அதன் ஓசைநயம் நன்கு புரியும்.

இவ்வாறு சுவைகள் எல்லாம் கொட்டிக்கிடக்கும் கம்பராமாயணத்தை இக்காலப்பகுதியிலும் கம்பன் கழகம் வைத்துப் பலவாறாகப் போற்றிப் பாடு கின்றார்கள். பலவாறாக ஆராய்ந்து இன்புறுகின்றார்கள்.

இக்கம்பராமாயணம் தந்த கம்பர் சற்றுத் தலைக்கனம் மிக்கவர் என்று அறியப் படுகின்றார். சிலம்பி என்னும் ஒரு விலைமகள் கம்பனிடம் ஒரு கவி புனைந்து தரும்படிக் கேட்டாளாம். ஆயிரம் பொன் தருவாயா என்று கம்பர் அவளைக் கேட்டிருக்கின்றார். என்னிடம் ஆயிரம் பொன் இல்லை ஐந்நூறு பொன்னே இருக்கின்றது என்று சிலம்பி கூறியிருக்கின்றாள். அதை வாங்கிய கம்பர்

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே

என ஒரு வெண்பாவை அரைவாசியாகப் பாடிவிட்டு அதனை முடிக்காமல் சென்றுவிட்டார். இப்பரத்தை அப்பாடலைக் கொண்டு அடுத்த நாள் ஒளவையாரை கண்டபோது இப்பாடலை முடித்துத் தாருங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டாள். ஒளவையும்

……………………………………………பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

எனப்பாடி முடித்துப் பழங்கஞ்சி வாங்கிக் குடித்துவிட்டுச் சென்றாராம். இச்சம்பவத்தின் பின் என் சஞ்சலம் விரிகிறது. ஒரு இலக்கிய கர்த்தா தமிழின் மேல் கொண்டுள்ள பற்று பணத்திற்கு விற்கப்பட்டதா? பொன்னையும் பொருளையும் மன்னர்கள் அள்ளி வழங்குவதற்காக, அவர்கள் புகழை மிகைப்படுத்திப் புலவர்கள் பாடியிருப்பது யாவரும் அறிந்ததே. இந்நிகழ்வு கம்பரில் வைத்திருந்த எண்ணத்திற்குப் பங்கம் விழைவிக்கின்றது.

ஒரு இடத்தில் இரட்டையர்கள் பாடுகின்றார்கள்

குன்றுங் குழியுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ – ஒன்றுங்
கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறின்
இடாதோ நமக்கிவ் விடர்.

பரிசில்கள் யாதொன்றும் வழங்காத மன்னனை யாம் புகழ்ந்து பாடிய தனாலேயே இவ்வாறான நிலைமை எமக்கு ஏற்பட்டது. அப்படியானால் பரிசில்கள் பெறுவதற்காக மன்னர்களைப் பலவாறாகப் புகழ்ந்து பாடிப் பொன்னையும் பொருளையும் பெற்றுக் கொண்டு சென்ற புலவர்கள் பாடிய பாடல்கள் அக்காலச் சூழலை எடுத்துக் காட்டும் கண்ணாடி என எப்படி நாம் எடுத்துரைப்பது.

ஔவை ஒரு பாடலிலே மன்னனைப் புகழ்ந்து பாடும் போது மாற்றரசனை வெட்டிவெட்டி மழுங்கேறிய கத்தியையுடைய மன்னனே என்று பாடுகின்றார், அவ் அரசனின் கண்கள் தன்பிள்ளையைப் பார்த்தபோதும் சிவப்பாகவே இருந்தனவாகப் பாடுகின்றார். இவை போன்ற பாடலின் மூலம் போர் வெறியைத் தூண்டும் பாடலைப் பாடிப் பாடி வீர உணர்ச்சியை ஊட்டிப் பல உயிர்களைச் சூறையாடச் செய்து பரிசில்களைப் புலவர்கள் பெற்றுச் சென்ற செயலானது அப்புலவர்கள் பின் நீதிநூல்களைப் பாடியிருந்தும் அதன் பயன்தான் என்ன இருக்கின்றது என எண்ணத் தோன்றுகின்றது அல்லவா! அவ்வாறே இக்காலத்திலும் தமக்கு ஒரு சலுகை, புகழ், ஆதாயம் வரும் என நம்பிப் பலர் உணர்வு மிக்க வரிகளைப் பயன்படுத்திப் பாடல்கள் பாடுவதும், கவிதைகள் வடிப்பதும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

அக்காலத்திலும் புலவர்களிடையே போட்டியும் பொறாமையும் இழையோடிக் காணப்பட்டன. ஔவையும் கம்பரும், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் ஒருவருக்கொருவர் போட்டியாக வாழ்ந்துள்ளார்கள் என ஆதாரம் காட்டக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறே இக்காலத்திலும் எழுத்தாளர்களிடையே போட்டியும் பொறாமையும், எழுத்துக்களிடையே காணப்படும் தவறுகளைச் சுட்டிக் காட்டமாட்டாமல், புகழ்வதும், தமிழின் இலக்கண மரபுகளுக்கு பங்கம் ஏற்படும் எழுத்துக்களைக் கண்டுகொள்ளாமல் தமிழாராய்வாளர் வாய் மூடியிருப்பதுவும் தமது பாராட்டுக்களுக்குப் பங்கம் வந்துவிடும் என்னும் சுயநலமே ஆகும். இச்செயலும் அக்காலப் புலவர்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் தூ ற்றிப் பாட வேண்டிய இடங்களில் போற்றிப் பாடிய செயலுக்கு ஒப்பாக அமைகின்றன. தவறுகளைச் சுட்டிக்காட்டும் தைரியம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அப்போதுதான் எழுத்துக்களில் தூய்மையைக் கொண்டுவர முடியும். செயலிலே நல்ல உணர்வுகள் விதைக்கப்படும். சுட்டிக்காட்டும் தவறுகளை ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் மக்களிடம் ஏற்பட வேண்டும். மெய்மைக்கு இடமளிக்க நாமும் மெய்யாய் வாழவேண்டும்.

உலகுக்கு நீதி சொல்லிய கம்பர் ஆயிரம் பொன்னுக்குத் தன் பாடலைப் பேரம் பேசி, அரைவாசிப் பணம் கிடைத்தமையால் அரைவாசிப் பாடல் பாடிச் சென்றிருக்கும் சம்பவமானது இலக்கிய கர்த்தாக்களால் எவ்வாறு உணரப்படுகின்றது.

(WWW.gowsy.com)

## பெண்ணென்னும் ஒரு அதிசயப்பிறவி

மகளிர் தினம் என்று எழுதுவதற்கு ஆரம்பிக்கும் போதே மனதினுள் உற்சாகம் பொங்குகின்றது. ஏன்? நான் ஒரு பெண் என்பதனாலா? இல்லை பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் பெறும் பேறு இருக்கின்றது என்னும் பெருமையினாலா? எதை எழுதுவது? அவள் தாய்மைப் பண்பையா? பாசத்தின் பெருமை யையா? அவள் உற்சாகத்தையா? அவள் மனத் தைரியத்தையா? அவள் உறவுகளைக் கட்டிக்காக்கும் உன்ன தத்தையா? இவற்றுக்கெல்லாம் காரணத்தையா? இல்லை இத்தனை பண்புகளையும் ஆட்டிப்படைக்க நினைக்கும் ஆண் மையையே இன்று மகளிர் தினம் கொண்டாட வைக்கும் திறமை யையா? எதுவாக இருந்தாலும் என் மனப்பதிவுகளை இப்பதிவில் மனம்பதிக்கின்றேன்.

ஆண்கள் பல விடயங்களை மனதில் வைத்திருப்பதில்லை. ஆனால், பெண்கள் அதிக விடயங்களை மனதில் பதித்து உறவு களைப் பேணுகின்ற உன்னத பணிகளைச் செய்கின்றார்கள். பிறந்தநாள், திருமணநாள், பிள்ளைகளின் பாடசாலை விடயங்கள் போன்றவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கும் பெரும்பணி பெண்களுடையதாகவே இருக்கின்றது. ஆண்களை விட பெண்களுக்கு ஞாபகசக்தி அதிகம் என்பதை விளக்குவதற்காக why man never remember and women never forget என்னும் நூலை அமெரிக்காவிலுள்ள டாக்டர் Marianne J. Legato என்பவர் ஆய்வு செய்து எழுதியுள்ளார். பெண்கள் ஒரு விடயத்தை அறிகின்ற போது அதனைப் பிறரிடம் கூறவேண்டும் என்னும் எண்ணத்தில் உள்வாங்குவதினால் அதனை அப்படியே ஞாபகத்தில் வைத்திருக் கின்றார்கள். ஞாபகசக்தியை வளர்ப்பதற்குரிய ஒரு உத்தியும் அதுவே. ஒரு விடயம் எமது ஞாபகத்தில் பதிக்க வேண்டுமானால், அதனைப் பிறருக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும். இந்தத் தன்மையே பெண்களுக்கு ஞாபகசக்தியை மேம்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

20

ஒரு தாய் எத்தனை காததூரம், எவ்வாறான இரைச்சல். அத்தனைக்கும் மத்தியில் தன் குழந்தை அழும் சத்தத்தை ஊகித்துக் கொள்வாள். இதுவே தாய்மைக்கு அடையாளமாக இருக்கின்றது. அதற்குக் காரணம், ஆணின் மூளையைவிடப் பெண்ணின் மூளை அளவில் சிறியது. அதனால், ஒலிகளைத் துல்லியமாகக் கேட்கும் திறன் மிக்கது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இதனால் தான் என்னவோ ஆண்கள் பெண்கள் எது கேட்டாலும் தெரியாதவர்கள் போல் இருப்பதும், எத்தனை தடவை சொன்னாலும் செவிடன் காதில் ஊதின சங்குபோல் இருக்கின்றீர்கள் என்று பெண்கள் ஆண்களை கேட்பதும்!

ஒரு தாயானவள், ஓர் இரவு தனது பிள்ளை உணவருந்தவில்லை என்றால், உயிரே போய்விடுமாப்போல் கவலை கொள்வாள். தந்தையோ பசித்தால் சாப்பிடுவார்கள் தானே என்று கூறிவிட்டு மறுவேலையைப் பார்க்கத் தொடங்கி விடுவார். ஆனால், பிள்ளைகளுக்கு ஏற்படும் கவலைகளையோ, நோய் வேதனைகளையோ, தனக்கு ஏற்பட்டதைப்போல் மனதில் போட்டு அதனைப் பற்றி எப்பொழுதும் சிந்தித்துக் கவலை கொள்கின்ற தன்மை தாய்மைக்கே சொந்தமானது.

ஒரு பெண்ணின் மகத்துவத்திற்கும் பெண்மையின் மனத்தைரியத்துக்கும் எடுத்துக்காட்டாக அமைவது எதுவென்றால், பெண்களுக்கு ஏற்படும் பிரசவவலி 3 தொடக்கம் 4 மணித்தியாலங்கள் தொடர்ந்து இருக்கும். ஒவ்வொரு 10, 20 நிமிடங்களுக்கு ஒருமுறை இடுப்புப் பகுதியில் தொடர்ந்து இழுத்துப் பிடித்துப் பின் விடுவதாக இருக்கும். ஒரு மனிதன் தாங்கும் வலி 45 அலகுகளாகவே இருக்க, ஒரு பெண்ணுக்குப் பிரசவவலியானது 52 அலகுகளாக இருக்கின்றது. இது 20 எலும்புகள் ஒன்றாக உடைவது போன்ற வலியுடையது. இவ்வாறு வலி பொறுத்து குழந்தையைப் பிரசவித்துவிட்டு மீண்டும் அடுத்த குழந்தைக்குத் தயாராகும் மனத் தைரியம் பெண்ணுக்கு உண்டு. ஆனால், ஆண்களோ ஒரு தடிமல் வந்தால் போதும் இறக்கும் நிலைமையில் இருப்பது போல் வீட்டையே இரண்டாக்கிப் போடுவார்கள். ஒரு தடிமலையே தாங்க முடியாதவர்கள் இந்த இடுப்புவலி வந்தால் என்ன செய்வார்களோ!

ஒரு விடயத்தை அவதானித்தல், மனநிலை, கவலை போன்றவற்றை வெளிப்படுத்தல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றில் ஆண்களின் மூளையை விடப் பெண்களின் மூளையே தெளிவாகச் செயற்படுவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வுகளின் மூளை

தெரியப்படுத்தியுள்ளார்கள். ஒரே சமயத்தில் பல விடயங்களை உள்வாங்கும் தன்மையும் பெண்களுக்கே உண்டு. Frontal Cortex என்னும் மூளையின் முன்பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும் போது உள்ளுணர்வு, சுயகட்டுப்பாடுகள் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே வீட்டுக் கணக்கை சரிபார்ப்பது, சமையல் செய்வது, கணவனின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பது போன்றவற்றை ஒரே நேரத்தில் செய்கின்றாள். ஒன்றைச் செய்யமாட்டோம் என்று உறுதி கொண்டார்கள் என்றால், உயிரே போனாலும் பிடிவாதத்திலிருந்து இறங்கப் போவதில்லை. இதனாலேயே இவர்களைப் பிடிவாதக்காரர்கள் என்று ஆண்கள் திட்டித் தீர்க்கின்றார்கள்.

உலகுக்கே ஒன்றரை வரிகளில் பொதுமறை தந்த திருவள்ளுவர் 4 வரிகளில் ஒரு பாடல் தனது மனைவிக்காகப் பாடியுள்ளார்.

“அடியிற் கினியாளே அன்பு உடையாளே
படிசொல் தவறாத பாவாய் - அடிவருடி
பின் தூங்கி முன்னெழும் பேதாய்
இனிதா(அ)ய் என்தூங்கும் என்கண் இரவு”

என்று தன் மனைவியின் இறப்பில் உலகப் பொதுமறை தந்த மகாமுனிவரே பாடியிருக்கும் போது பெண்ணின் பெருமையினைப் புரிந்தும் புரியாத ஆண்களோ இங்கு அதிகம்.

ரேடியத்தை உலகுக்களித்த மேரிகியூரி அம்மையார், விஞ்ஞான உலகில் முத்திரை பதித்தவர். முறையான கல்வி வசதியில்லாத நிலையிலேயே 18ம் நூற்றாண்டு கரோலின் கர்ஷேல் என்னும் விண்வெளி வீராங்கனை 3 புதிய நட்சத்திரக்கூட்டம், 8 வால்நட்சத்திரம் மற்றும் பல கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளார். ஆயினும் ஐரோப்பிய மண்ணில் கூட அடக்குமுறை தலைவிரித்தாடியது. 16 ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் சூனியக்காரிகள் என்று உயிருடன் தீ வைத்துக் கொழுத்தப்பட்டனர். அவர்கள் செய்த சூன்யம் என்னவென்றால், ஆண்மருத்துவர்கள் இருக்கும் போதே நோயுற்றவர்களைத் திறமையான முறையில் சிகிச்சையளித்து குணமாக் கியமையே ஆகும்.

இவ்வாறு பெண்மையின் இயல்பான ஞானத்தில் பொறாமை கொண்ட ஆண்வர்க்கம், பெண் இனத்தின் அடக்குமுறையை வளர்த்து கொண்டிருந்த போது 1910ம் ஆண்டு டென்மார்க்கிலுள்ள Koppenhagen என்னும் இடத்தில்

Clarazetkin என்பவர் ஒரே தொழில்புரியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான வருமானம் கிடைத்தல் வேண்டும், கர்ப்பம் அடைந்த பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படல் வேண்டும். என்னும் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்தார். இவர் தூக்கிய போர்க்கொடியே மகளிர்தினத்திற்கு அடிகோலியது. 1917ல் இரஷ்யாவிலுள்ள Sanktpetersburg என்னும் இடத்தில் ஆரம்பித்த பெண் ஆடைத்தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தை நினைவு கூருமுகமாக 1921 பங்குனி 8 ல் சர்வதேச மகளிர்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. தற்பொழுது வருடா வருடம் உலகலாவிய ரீதியில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

"நம்மோடு உயிர் கொண்டு வாழ்ந்தவரை
மயிர் அளவும் பயன் செய்யாமல் நீர்த்தபின்னே
தீயதை வைக்குமுன் மயிரதை சிரைப்பதால்
ஏதொன்றும் பயனுன்டோ"
என்று பாடினார் ஒரு சித்தர்.

அதனால், உங்களைக் கவர்ந்த சாதனைப் பெண்மணி அன்னை திரோசாவோ, ஜேர்மனியப் பிரதமர் Angela Merkel Nyh இல்லை. நீங்கள் சந்தோசமாய் இருந்தால் சந்தோசமாய் இருப்பாள். நீங்கள் உடல்வருந்த துடித்துப் போவாள். உங்கள் கவலையைத் தன் கவலையாய் எடுத்துக் கொள்வாள். உங்களை சாதனை மனிதனாய் ஆக்கி வைப்பாள். காலம் முழுவதும் உங்களைப் பற்றியே நினைத்திருப்பாள். அவள் தான் உலகத்திலே உங்களைக் கவர்ந்த பெண்மணி.

(வெற்றிமணி பங்குனி மாத இதழ் 2018)

# சொல்லும் செயலும் ஒன்றாக வேண்டும்

**வா**ர்த்தைக்குள் அரிதாரம் பூசி, அலங்காரம் போட்டு அற்புதமாக யாரும் பேசலாம். ஆசைகளை, எண்ணங்களை அடுக்கி வைத்து நடைமுறைப்படுத்த முயற்சியின்றி மழுங்கிப் போகலாம். பிறர் முயற்சியைப் பார்த்து கொட்டாவி விடலாம். சொல்வதற்கு பலரால் முடியும். அதைச் செய்து காட்டுவதற்கு ஒரு சிலராலேயே முடிகின்றது. சொல்வது போல் நடத்திக் காட்டுதலே செயலாகப்படுகின்றது. சொல்வது ஒன்று செய்வது ஒன்றாகும் பட்சத்தில் சமூகத்திடையே தவறாக அடையாளப்படுத்தப்படுவர். நாம் வாழும் உலகத்திற்கு சொல் வேண்டாம் செயலே வேண்டும்.

சொன்னதைச் செய்து காட்டிய துரியோதனன், கர்ணன் மனதில் மலையாய் உயர்ந்தான். நீ என் நண்பன் என்று கூறிய ஒரு வார்த்தைக்கு துரியோதனன் கொடுத்த மரியாதை அளவிட முடியாதது. வில்வித்தை வீரன் அர்ச்சுனனுடன் நேருக்கு நேர் நின்று போரிடக் கூடிய தகுதி பெற்ற ஒரே வீரன் கர்ணன். சபையிலே அரசகுமாரர்கள் அரசகுமாரர்களுடனேயே போரிடுவார்கள், உன் குலம் என்ன? என்று துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் ஆகியோர் கூறிய வார்த்தைகள் கேட்டு உடைந்து போய் நின்றான் கர்ணன். நண்பன் கலங்கி நிற்கும் சமயத்தில் கைகொடுப் பவனே உண்மை நண்பன். சூரர்களுக்கும் நதிகளுக்கும் மூலம் பார்ப்பதில்லை. அசுரர்களைக் கொல்லுகின்ற அஸ்திரம் ஒரு பிராம ணனுடைய எலும்பில் இருந்து வந்தது. அக்னி ஜலத்திலிருந்து வந்தது. எனவே எது எங்கிருந்து வந்தது என்பது முக்கியமல்ல. அதனுடைய வீரியமே முக்கியம். அதனால், கர்ணனுடயவீரத்தைப் பற்றி பேசுங்கள். அவருடைய மூலத்தைப் பற்றிப் பேச யாருக்கும் உரிமையில்லை என்று கூறி, அச்சந்தர்ப்பத்திலேயே கர்ணனுக்கு அங்கத நாட்டைப் பரிசளித்து, இப்போது அங்கத நாட்டுக்கு அரசன் கர்ணன். எனவே இப்போது அரசகுமாரனுடன் போரிடும் தகுதி இவனுக்கு இருக்கிறது என்று கர்ணனை உச்சத்துக்கு உயர்த்தினான். நண்பன் என்று கூறிய வாய்ச் சொல் மட்டுமன்றி அதனை

21

நடத்தியும் காட்டிய செயல் வீரன் துரியோதனன் ஆவான்.

இது போன்று அந்தப்புரத்திலே துரியோதனன் மனைவி பானுமதியுடன் கர்ணன் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் துரியோதனன் வரவு கண்டு பானுமதி திடீரென்று எழுந்தாள். விளையாட்டில் தோற்று விடுவாள் என்று கருதி எழுகின்றாள் என்று நினைத்த கர்ணன் அவளுடைய ஆடையைப் பிடித்து இழுத்தான். கை தவறி பானுமதி இடையிலே இருந்த மேகலையில் கை பட்டு அதில் ஒட்டியிருந்த முத்துக்கள் சிதறின. அச்சம்பவத்தைக் கண்ட துரியோ தனன் எவ்வித சந்தேகமும் கொள்ளாது. சிதறிய முத்துக்களை எடுக்கவோ கோர்க்கவோ என்று கேட்கின்றான்.

மடந்தை பொன் திருமேகலை மணிஉகவே மாசு அறத் திகழும்
ஏகாந்த இடந்தனில் புரிந்தே நானயர்ந்து இருப்ப எடுக்கவோ கோர்க்கவோ
என்றான் என வில்லிபுத்தூராழ்வார் பாடினார்.

நண்பன் என்று சொல்லுக்கு களங்கம் ஏற்பட கர்ணன் நடந்ததுமில்லை. நண்பன் என்று சொன்ன வார்த்தைகளை மந்திரமாக கொண்டு அது போலவே வாழ்ந்து காட்டியவன் துரியோதனன்.

தன்னுடைய தாய் குந்தி தேவிக்கு கொடுத்த சொல்லைக் காப்பாற்றிய கர்ணன் ஒரு தடவைக்கு மேல் நாகாஸ்திரத்தை செலுத்தாது, தன்னுடைய வாய்ச்சொல்லே பெரிதென மதித்து உயிர் நீத்தான்.

சொல் என்பது மந்திரம். சொல்லும் செயலும் ஒன்றானால் இவ்வுலகம் சொல்லும் உங்கள் செயல்கள். அந்தச் சொல்லில் உண்மை கலந்து வாழ்ந்தவனே அரிச்சந்திரன்.

நீ எனக்கு அரசைத் தரவில்லை என்று ஒரே ஒரு பொய் சொல் என்று கேட்டான் கௌசிகன். அதற்கு அரிச்சந்திரனும்,

பதிஇ ழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதிஇ ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்
மதிஇ ழந்துதன் வாயிழந்(து) அருந்தவன் மறைந்தான்

எம்முடைய அரசை இழந்து விட்டோம். சொத்து சுகங்களை இழந்து விட்டோம். மகனை இழந்து விட்டோம். இனி எங்களுக்கு ஒன்றே ஒன்று தான் இருக்கிறது என்று நினைக்கும் சொர்க்கத்தை இழந்தாலும் சொன்ன சொல்லை இழக்க மாட்டோம் என்று சொல்ல அதுகேட்ட முனிவர்

கௌசிகனும் சொல்ல வார்த் தைகள் இழந்து மறைந்தார். என்று அரிச்சந்திர புராணம் கூறுகிறது. அரிச் சந்திரன் உண்மையைத் தவிர பொய் சொல்ல மாட்டேன் என்ற சொல்லுக்கு ஏற்ப செயற்படுத்திக் காட்டினான்.

என்று வாய்ச்சொல்லில் வீரம் வைத்து நேர்மைத் திறமில்லா நடிப்புச்சுதேசிகள் பற்றி பாரதி,

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடீ — கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி
என்றார்.

எனவே புராணங்களும், இதிகாசங்களும், இலக்கியங்களும் போதித்த சொல்லின் வாய்மை, செயலிலும் இருக்க வேண்டும். நினைத்ததை சொல்வது மாத்திரமில்லாது நடத்தியும் காட்டுவதே வாயிலிருந்து புறப்பட்டு வரும் வார்த்தை களுக்கு மதிப்பாகப்படுகின்றது.

(வெற்றிமணி கார்த்திகை மாத இதழ் 2019)

**த**ர்மம் தலை காக்கும் என்னும் பழமொழியை யாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அதுபோலவே சத்தியமும் ஒரு சந்தர்ப்பத்தில் வந்து கைகொடுக்கும் என்பது நிச்சயமான உண்மை. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால், வாக்கினில் ஒளி உண்டாகும்" என்பார் பாரதி. உள்ளத்தில் உள்ளது உண்மை என்னும் சத்தியம். வாய்வழி வருவது வாய்மை என்பதாகும். உள்ளத்தால் ஒன்றை நினைத்துவிட்டால், வாய்வழி அந்த உண்மை வாய்மையாக வெளிப்படும். உண்மை உள்ளத்தில் இல்லையென்றால், வாய்மை அந்தப் பொய்யை வெளிப்படுத்திவிடும். அப்படியென்றால், உள்ளம் சொல்வதைத் தான் உடல் செயல்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் மனிதர்களே அதிகமானவர்களாக இருக்கின்றார்கள். எனவே வாய்வழி வருவது எல்லாம் உண்மையாக இருக்கும் என்று அர்த்தமில்லை. எனவே வாய்மை உண்மையென்ற பொருள்படாது. எனவே எமக்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும். அப்போதுதான் வாக்கிலும் உண்மை ஒளி உண்டாகும்.

பொய்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் என வள்ளுவர் கூறுகின்ற போது நன்மையைத் தரும் என்றால் பொய் கூட உண்மைக்குச் சமமானது என்பார்கள். இங்கு கூட உண்மைக்கு அப்பால் வாய்மை என்ற வார்த்தையையே வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். இங்கு உள்ளத்தில் உண்மை இருக்க வாய்வழி வாய்மையாகப் பொய் வெளிப்படுகின்றது. பிறருக்கு நன்மை கிடைப்பதற்காக என்றே இதைக் கருதவேண் டியுள்ளது. ஆனால், அங்கு நன்மை கிடைப்பதற்காக மறைக்கப் பட்ட உண்மைகூட ஒரு இடத்தில் வெளிப்பட்டு விடும் என்பதே சத்தியம். அதனால், நம்பிக்கை உள்ளவர்களிடமும், நல்ல நண்பர் களிடமும், பெற்றோரிடமும் உண்மையை மறைத்தல் கூடாது. அது கொலைக்குச் சமமானதாகும்.

சரித்திரத்தில் இடம் பிடிப்பதற்கு மனமறிந்து உண்மைகளை மறைப்பதற்குப் பலர் முற்படுகின்றார்கள். உலோபியைப் போல உள்ளம் நிறைந்த உண்மையும் ஓலைக்குடிசையில் வாழ்கிறது என்று வில்லியம் ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கின்றார். ஆனால் தோண்டத் தோண்டப் புலப்படும் அகழ்வாராய்ச்சிகள் போல என்றோ ஒருநாள் உண்மை வெளிவரும் என்னும் சத்தியத்தில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். பாவத்திற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால், அவற்றுக்கெல்லாம் பொருத்தமான கருவியாகப்படுவது பொய்யே ஆகும். பாவமான காரியங்களைச் செய்துவிட்டு அவற்றை மறைப்பதற்குப் பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே உண்மைக்கு மாறானது பொய் என்றால், பொய் சொல்பவர்கள் பாவம் செய்பவர்களாகவே கருதப்படுகின்றார்கள். உண்மை வெளிப்படும் பட்சத்தில் மானம், மரியாதை என்னும் பண்புகளை இழந்து தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலைமை பொய் கூறியவர்களுக்கு ஏற்படுகின்றது.

ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணம் நடத்தலாம் என்பார்கள். ஆனால், அந்தப் பொய்கள் வெளிப்படும் பட்சத்தில் அந்தக் குடும்பமே சிதைந்து போகும். இதனால், உண்மையை மறைத்தமைக்கு எந்தவித பயனுமில்லை. குடிகாரன் குடிக்கமாட்டேன் என்று கூறுகின்ற சத்தியமானது அடுத்த விநாடியே மறைந்து விடுகின்றது என்றால் உண்மையன்றி அக்குடிகாரன் கூறியது வாய்வழி வந்த வார்த்தைகளே ஆகும். அது நில்லாது ஓடிவிடும்.

சில உண்மைகள் கூட காலத்துக்குக் காலம் மாறக்கூடியது. சூரியன் பூமியை வலம் வருகின்றது என்று அன்று விஞ்ஞானிகள் கூறிய உண்மை இன்று பொய்யாகப்பட்டுள்ளது. சூரியன் நகர்வதில்லை பூமியே சூரியனைச் சுற்றி வருகின்றது என்பது நிரூபணமாகியுள்ளது. ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புக்களும் நிச்சயமான உண்மைகளாகாதவை. அவை காலத்துக்குக் காலம் மாறக்கூடியது.

நாம் காணுகின்ற இச்சமுதாயத்தில் தமக்கு பெயரும் புகழும் கிடைக்க வேண்டும் என்பதற்காக மனமறிந்து பல பொய்களை துணிந்து கூறுகின்றார்கள். ஆனால், அப்பொய்கள் ஒருநாள் பூதாகரமாக வெளிப்பட்டு நிற்கும் என்று அவர்கள் அறியாது இருக்கின்றார்கள். பாண்டிமாதேவியின் சிலம்பைக் கோவலன் திருடினான் என்று பொற்கொல்லன் கூறிய பொய்யானது, பொய்ப்பிக்கப்பட்டு உண்மை வெளிப்பட்டது. அப்போது பார்ப்பார், அறவோர். பசு, பத்தினிப் பெண்டீர், மூத்தோர், குழவி நீங்கலாக பாண்டியநாடு முழுவதுமாக எரிக்கப்பட்ட செய்தி சிலப்பதிகாரம் தெரியாதவர்கள் கூட தெரிந்த செய்தியாகும்.

போர்க்களத்தில் குற்றுயிரும் குறை உயிருமாகக் கிடக்கின்றான் கர்ணன். அவன் செய்த தர்மங்கள் அவன் உயிரைப் போகவிடாது காப்பாற்றுகின்றது. இங்கு தர்மம் தலைகாக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தில் மறைக்கப்பட்ட உண்மை வெளிப்படுகின்றது. குந்தியானவள் அத்தனை வருடங்களும் கர்ணன் தன்னுடைய மகன் என்று மறைத்து வைத்திருந்த உண்மை, அவனது இறப்பின் இறுதித் தருணத்தில் வெளிப்படுகின்றது. உண்மை கடைசிக் காலத்தில் கூட கைவந்து உதவும். தோண்டத் தோண்ட வெளிப்படுகின்ற அகழ்வாராய்ச்சித் தடயங்கள் போல உண்மைகள் எம்முன்னே வந்து நிற்கும்.

சத்தியம், உண்மை என்றவுடன் எம்முடைய மனதிலே முதலில் வந்து நிற்பது சூரிய குலத்தின் 28 ஆவது மன்னனாகிய அரிச்சத்திர மன்னனே ஆவார். அவர் கனவிலே செய்த சத்தியத்தை மறைத்து ஒரு பொய் சொல்லியிருந்தால் தன் வாழ்நாள் முழுவதும் கஷ்டத்தை அனுபவித்திருக்கத் தேவையில்லை. பாம்பு கடித்து மகன் இறந்த போதும் கூட உண்மையை மறைக்கவில்லை. ஆனால், தக்க சந்தர்ப்பத்தில் உண்மை தன் வீரியத்தைக் காட்டியது. அரிச்சந்திரமன்னனும் சுவர்க்க வாழ்வு பெற்றார். கதைகள் எல்லாம் உண்மையானவையான இல்லை கட்டுக்கதைகளேதான் என்று நாம் கருதினாலும், இவை அனைத்தும் மனித வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களையே எமக்குத் தெரிவிக்கின்றன.

பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின் அரிச்சந்திர நாடகம் பார்க்கச் சென்ற காந்தியடிகள் தன்னுடைய நண்பனையும் அழைத்துச் சென்றாராம். நாடகம் பார்த்துத் திரும்பிய போது இந்நாடகம் பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்ட போது, இந்த நாடகம் என் வாழ்க்கையையே மாற்றப் போகிறது. சத்தியத்தை உயிருள்ளவரை காப்பாற்ற வேண்டும் என்று கருதுவதாகச் சொன்னாராம். அவருடைய நண்பரிடம் கேட்ட போது சத்தியத்தின் படி நடந்தால், மனைவி, பிள்ளைகளைக் கூட இழக்க வேண்டிவரும் என்று கூறினாராம். எனவே அனைத்தும் அவரவர் புரிதலின்படியே நடக்கும். இக்கட்டுரையைக்கூட உங்கள் புரிதலின்படியே ஏற்றுக் கொள்வீர்கள் என்பது நிச்சயம்.

எனவே கண்ணதாசன் தந்த வரிகளுடன் இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன். "உண்மையை வாங்கிப் பொய்களை விற்று உருப்பட வாருங்கள். காலம் போனால் திரும்புவதில்லை. காசுகள் உயிரைக் காப்பதுமில்லை. விளம் பரத்தாலே உயர்ந்தவன் வாழ்வு நிரந்தரமாகாது"

(வெற்றிமணி மார்கழி மாத இதழ் 2019)

## விமர்சிப்பவர்களே ஒவ்வொரு நாளும் இந்நிகழ்ச்சியில் மூழ்கிப் போகின்றார்கள்

இன்று தமிழர்கள் வாழும் நாடுகளில் பரவலாகப் பேசப்படும் ஒரு நிகழ்ச்சி Bigg Boss Session 3. இந்நிகழ்ச்சி எம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தை சீர்கெடுக்கும் நிகழ்ச்சி, வேலையில்லாதவர்களே இந்நிகழ்ச்சியைப் பார்க்கின்றார்கள் என்று பலரும் விமர் சனங்களைத் தந்தாலும், விமர்சிப்பவர்களே ஒவ்வொரு நாளும் இந்நிகழ்ச்சிக்குள் மூழ்கிப் போகின்றவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பது உண்மையே.

என் பார்வையில் இந்நிகழ்ச்சி மனித மனங்களைப் பற்றிய ஆச்சரியத்தையே கொண்டுவருகின்றது. பல்வேறுபட்ட துறை களிலுள்ள, பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குள் வாழ்ந்த, பல்வேறுபட்ட குணாதிசயங்களுக்குள்ள மனிதர்களை ஒரு வீட்டுக்குள் 100 நாள்கள் அவர்களுக்குப் பிடித்த துறைகளுக்கான பொருள்களோ, விடயங்களோ எதுவுமில்லாமல், நேரத்தைக் காட்டும் மணிக்கூடு கூட இன்றி, 24 மணிநேரமும் கைத்தொலை பேசியுடன் அலைந்தவர்களின் கையில் எந்தவித தொலைத்தொடர்பு சாதனங்களும் இன்றி, தொலைக்காட்சி, கணனி இன்றி உலாவ விட்டால் எப்படி இருக்கும் என்பதை இந்த உலகம் பார்க்க வைக்கும் ஒரு நிகழ்ச்சியாகவே படுகின்றது. மற்றையவர் விடயங் களில் தலையிடுவார்கள். தம்முடைய கருத்துக்களை பிறர் மேல் திணிக்க முற்படுவார்கள். ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவார்கள். தம்முடைய கருத்துக்களே சரியென்று நிறுவ முற்படுவார்கள். இவ்வாறு மனித மனங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதர்களுக்கும் வேறுபட்ட ஆசாபாசங்களும், கருத்துகளும், விருப்பு வெறுப்புக்களும் இருக்கின்றன. இவற்றை அவர்கள் வாழ்ந்த சூழலும், கற்ற கல்வியும், குடும்ப வளர்ப்பு முறையும், மரபணுக்களின் செல்வாக்குமே தீர்மானிக்கின்றன. இவர்களை ஒரு வீட்டுக்குள் எந்தவித

23

வெளித்தொடர்புகளும் இன்றி அனுப்பினால் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதே இந்நிகழ்வாக இருக்கின்றது. இதிலிருந்து என் சிந்தனை விரிவு காணுகின்றது.

ஒரு அறையில் நல்ல கல்வி கற்ற, பண்பாளர்கள் மூவரை அடைத்து வைத்து அவர்களுக்கு 3 வேளை 3 சிறிய தட்டில் ஒரு வாரம் உணவு வழங்கப்பட்டது. அடுத்த வாரம் 2 தட்டாக மாற்றப்பட்டது. அதன் அடுத்த வாரம் 1 தட்டாக மாற்றப்பட்டது. ஒரு வேளை உணவே ஒரு தட்டில் வழங்கப்பட்டது. சிறிது சிறிதாக உணவு குறைக்கப்பட அந்த அறையில் ஒரு பிரளயமே ஏற்பட்டது. ஒவ்வொரு வரும் பசி தாங்கமுடியாது ஆளையாள் உணவுக்காகச் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் தாறுமாறாக தாக்கத் தொடங்கினர். அறையெங்கும் சோற்றுப் பருக்கைகள் வீசப்பட்டன. உணவுக்காக நாய்கள் அடிபட்டுக் கொண்டது போல் இவர்கள் நடந்து கொண்டார்கள். பசி வந்தால் பத்தும் பறந்து போம் என்பார்கள். அந்த பத்தில் பண்பு கூட பறந்து போய்விடும். சந்தர்ப்பம் சூழ்நிலை மனிதர்களை பண்பற்றவர்களாக மாற்றிவிடும். அவர்களுக்குள் இருக்கும் மிருகக் குணம் விழித்துக் கொள்ளும். பண்பற்ற குணம் வெளியே வரும்.

கற்றறிந்த பண்புள்ள புலவர் ஔவையார் ஒரு இடத்தில்

“எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டிற் பெரியம்மை வாகனமே முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயது”

என்று கம்பரை விளித்துப் பாடுகின்றார். அவலட்சணமே, எருமையே, மூதேவியே, குட்டிச்சுவரே, குரங்கே. இவ்வாறான பண்பற்ற சொற்கள் ஔவை வாயிலிருந்து கம்பர் மேல் ஏற்பட்ட கோபத்தினால் வெளிப்படுகின்றது.

1972 ஆம் ஆண்டு ஒரு விமானம் திடீரெனக் காணாமல் போனது. இவ் விமானத்தை யாராலும் தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் போனது. 90 நாட்களின் பின்பு சில மனிதர்களுடன் ஒரு பனி படர்ந்த, எந்தவித வெளித் தொடர்புகளையும் ஏற்படுத்த முடியாத ஒரு மலைப்பிரதேசத்தில் கண்டு பிடிக் கப்பட்டது. அவ்விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் சிலர் இறந்துவிட மீத முள்ளவர்கள் சிலரே உயிரோடு இருந்தார்கள். சூழவுள்ள பகுதிகளில் பனி படர்ந்த மலைப்பிரதேசங்களே இருந்த காரணத்தினால், உயிர்

தப்பியவர்கள் வாழ்வதற்கு உணவை எங்கேயிருந்து பெற்றார்கள் என்று கேட்டபோது, இருந்த உணவெல்லாம் தீர்ந்து போக பசியால் ஒருவரை ஒருவர் கொன்று தின்றே வாழ்ந்திருக்கின்றார்கள். விமானத்தில் பயணம் செய்தவர்கள் அக்காலத்தில் படித்தவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆளுக்காள் சண்டை செய்து கொல்வதை விட்டு எல்லோருடைய பெயரையும் சீட்டில் எழுதி, அதில் 3 சீட்டுகளை எடுத்து அச்சீட்டில் பெயர் உள்ளவர்களை கொன்று உண்டிருக்கின்றார்கள். மனிதன் தன் தேவைக்காக எந்தளவு கேவலமாக பிணந்தின்னும் கழுகாகவும் மாறிப் போவான் என்பதற்கு இது சான்றாக அமைகின்றது. இவ்வாறான மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் கேவலமானவர்கள் இல்லை. சந்தர்ப்பம் சூழ்நிலையானது மனிதனை இவ்வாறான நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதே உண்மை.

மனிதர்களுக்குள் இரண்டு பக்கம் இருக்கும் என்பார்கள். அதன் ஒரு பக்கம் உறங்கிக் கொண்டிருக்கும். சந்தர்ப்பம் சூழ்நிலை வாய்க்கும் போது விழித்துக் கொள்ளும் உதாரணத்திற்கு ஒரு தாய் பிறரிடம் பேசும் போது என்னுடைய பிள்ளை குழப்படி செய்தால் நான் அடிப்பதில்லை, பேசி தவறைப் புரிய வைப்பேன். பிள்ளை என்னுடைய உயிர் கை வைக்க எப்படி மனம் வரும் என்பாள். ஆனால், சில சந்தர்ப்பத்தில் பிள்ளையின் குழப்படியைப் பொறுக்க முடியாது ஓங்கி அடித்துவிடுவாள். பின் நிதானித்து பிள்ளையைத் தூக்கி அணைத்துத் தடவிக் கொடுப்பாள். ரெமோ என்ற திரைப்படத்தில் விக்ரம் இரு வேறுபட்ட குணாதிசயங்களை மாறி மாறி வெளிக்காட்டுகின்றார். இதை Multiple Personality என்பார்கள். சிலருக்கு வெளிப்படையாக இம்மாறுபட்ட குணாதிசயங்கள் வெளிப்படும். எத்தனையோ பிரபலங்கள் தமக்குப் பிடித்த பொருளைக் களவாடியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அடக்கமும் பொறுமையும் கொண்ட கண்ணகி மதுரையையே எரிக்கும் பெண்ணாகின்றாள். அவளுக்குள் அடங்கியிருந்த ஆவேசம் தன்னுடைய கணவன் கள்வன் என்று சொன்னபோது வெளிவருகின்றது. இவ்வாறு மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டவனாக இருக்கின்றான்.

இவ்வாறான மனிதர்கள் அனைத்து விடயங்களிலும் ஒத்துப் போவார்களா என்றால் அதுதான் இல்லை. கூடப்பிறந்த சகோதரர்கள் கூட கருத்து வேறுபாடுள் ளவர்களாகவே காணப்படுவார்கள். அதைத்தானே ஐந்து விரல்களும் ஒரு மாதிரி இல்லை என்று சொல்வார்கள்.

நல்ல நண்பன் என்று சொன்னாலும், அவர்களிடையே விட்டுக் கொடுப்புடனேயே நட்புத் தொடர்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பொருந்தாத அமைப்புக்களும், பொருந்தாத திருமண வாழ்க்கையும், பொருந்தாத உறவுகளும் என்றோ ஒருநாள் முறிந்து தான் போகின்றன. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒவ்வொரு மனிதர்க ளுக்குள்ளும் ஒளிந்திருக்கும் மனமே. எனவே மனிதர்களை இப்படியானவர்கள் என்று நாம் தீர்ப்பளிக்க முடியாது. மனித மனங்கள் எந்த நேரம் எப்படி மாறும் என்று யாராலும் கூற முடியாது. "மனம் ஒரு குரங்கு. மனித மனம் ஒரு குரங்கு. நமக்குள்ளே இருந்து கொண்டு நன்மை தராது" என்று கண்ணதாசன் பாடி யிருக்கின்றார்.

Bigg Boss என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்த்த போது இவ்வாறான சிந்த னைகள் எனக்குள்ளே எழுந்தன.

(வெற்றிமணி ஆடி மாத இதழ் 2019)

## பழைமைக்குத் திரும்பும் உலகம்

பழைமை என்னும் பதத்திற்கு தொன்மையோடு தொடர்புடைய அனைத்தையும் எடுத்துக் கூறலாம். மூத்தது, முதியது, பண்டையது எனப் பலவாறு கூறலாம். தொன்று தொட்டு வழங்கி வரும் பழக்கவழக்கங்கள் காலமாற்றத்திற்கேற்ப மாறிவந்த சூழலுக் கேற்ப மாறுபட்டு வந்திருந்தமை கண்கூடு. பழைமை வாய்ந்த அனைத்தையும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அதேவேளை அவற்றின் மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை எம்மவர் மத்தியில் காணப்பட்டது.

ஆதிகால மனிதன் ஆடையின்றி, காட்டிலே திரிந்து கண்ணுக்குட்பட்ட விலங்குகளை வேட்டையாடி, இறைச்சியை நெருப்பிலே வாட்டி உண்டு, காயங்களுக்கும் நோய்களுக்கும் பச்சிலை மருத்துவம் பார்த்து வாழ்ந்து வந்தான். ஆடைக்காக இலைகுழைகளை அணியத் தொடங்கினான். காலப்போக்கில் தனக்கான ஒரு குடும்பம், ஒரு சமூகம் என வாழப் பழக்கப்பட்ட போது வேட்டையாடுதலில் இருந்து மேம்பட்டு தோட்டம் செய்யத் தலைப்பட்டான். அப்போது தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு பொதுச்சந்தையில் தனது பொருள்களை பேரம்பேசி பண்டமாற்று முறையிலே இது தந்தால், இதைத்தா என்று பெற்றுக் கொள்ளும் முறையைக் கொண்டு வந்தான். அதன் பின்தான் பணம் என்னும் ஊடகசாதனம் உதவிக்கு வந்தது. தொழில்கள் மேம்பட்டன, ஆடைகள் நெய்யத் தொடங்கி, வகைவகையாய் அணியத் தொடங்கினார்கள்.

24

இவ்வாறான வளர்ச்சி பெற்ற மனிதன், இன்றைய நிலையை நினைத்துப் பார்க்கும் போது அவன் பழைமையை நாடுவதை

அனுபவத்தின் மூலமும் அறியக் கூடியதாக உள்ளது. காட்டிலே திரிந்த மனிதன் சமைத்த உணவை உண்ணாது, வாட்டிய இறைச்சியையும் புழு பூச்சிகளையும் உண்ட நிலை காணப்பட்டது. இன்று Grill, Barbecue என்று கூறி மரங்கள் நிறைந்த பகுதிகளிலும், வீட்டிற்கு வெளியிலும் இறைச்சியை வாட்டி உண்டு மகிழ்கின்றனர். ஒரு வாகனத்தில் தோலுரித்த முழு மாட்டைத் தொங்கவிட்டு நெருப்பிலே வாட்டிக் கொண்டிருப்பார்கள். சுற்றவர மரங்களை செயற்கையாகவே கொண்டு வந்து நிறுத்தி காடு போன்று உருவாக்கி, அங்கிருப்பவர்கள் அவ்வாட்டிய மாட்டிறைச்சியை வெட்டி வெட்டி உண்டு மகிழ்வார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் ஜேர்மனியில் சில பகுதிகளில் நடைபெறுகின்றது. புதுமை மிஞ்சிய நிலையில் பழைமைக் கவர்ச்சி தற்போது ஏற்படுகின்றது.

இதைவிட புழு, பூச்சிகளை உண்ணும் காட்சியை பெரும் நிகழ்வாகவே தொலைக்காட்சிகளில் காட்டி மகிழ்கின்றார்கள். Ich bin ein Star holt mich hier raus என்னும் நிகழ்ச்சி பெயர் போன ஒரு நிகழ்ச்சியாக ஜேர்மனிய தொலைக் காட்சிகளில் காட்டப்படுகின்றது. அதில் பிரபல நட்சத்திரங்கள் பங்கெடுத்து மகிழ்ச்சியடைகின்றார்கள்.

பண்டமாற்று முறை தற்காலத்தில் நாடுகளிடையே நடைபெறுவது யாவரும் அறிந்ததே. தமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஏற்ற பொருள்களை அந்நியநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் பண்டமாற்று முறை தற்போது பெருகிவருகின்றது. இதுவே ஆரம்ப காலத்தில் வெளிநாட்டு வாணிகம் என்று நாம் கூறும் வியாபாரத்தை யவனர்கள் என்று அழைக்கப்பட்ட வியாபாரிகள் மிளகை எடுத்து தமது பொருள்களை எமக்குத் தந்துவிட்டுப் போன வாணிகத்தை நாம் அறிந்திருந்தோம்.

ஒரு கிராமத்திலிருந்து அதிகாலை மாட்டுவண்டி கட்டிக் கொண்டு பொதுச் சந்தைக்குச் சென்றால், தமக்குத் தேவையான அனைத்துப் பொருள் களையும் அச்சந்தையிலே இருந்து பெற்றுக் கொண்டு மாலை வீடு திரும்பிய மனிதன் அக்காலம். தற்போது shopping centre போனால், எமக்குத் தேவையான உணவுப் பொருள்களிலிருந்து மின்சார உபகரணங்கள் வரை நாம் பெற்றுக் கொண்டு வந்துவிடுகின்றோம். அதைவிட டிஸ்கோ,

திரைப்படம் போன்ற நிகழ்வுகளையும் அக்கட்டிடத்தினுள்ளேயே முடித்து வருகின்றோம்.

அக்காலத்தில் வீட்டிற்கு மரக்கறி, மீன்வகைகள், உடைகள் விற்பதற்காக மனிதர்கள் வருவார்கள். அவர்களிடம் பேரம் பேசி வீட்டில் இருந்தபடி பொருள்களை வாங்கி விடுவோம். தற்போது இதேநிலை நடைபெறுகிறது onlineshop என்ற பெயரில் வீட்டில் இருந்தபடி பொருட்களை வாங்கி வீட்டில் இருந்தபடி online Bank மூலம் பணத்தைச் செலுத்திவிட்டு இருந்து விடுகின்றோம்.

பதஞ்சலி முனிவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட பழைமையான யோகக்கலை இன்று உலக நாடுகள் அனைத்திலும் மேலோங்கி ஆதரிக்கப்படுகின்றது. சித்த மருத்துவத்தையும், ஆயுர்வேதத்தையும் நோக்கி ஓடுகின்றான் மனிதன். வீட்டுத் தோட்டம் என்றும் Bio மரக்கறிகள் என்றும் தேடுகின்றான் மனிதன். வீட்டுப் பலகணியில் தோட்டம் செய்யும் திட்டம் அமோக வரவேற்பை இந்தியாவில் பெற்றிருக்கின்றது. அதுமட்டுமல்ல தாய்நாட்டில் வீட்டுத் தோட்டம் செய்வது கேவலம் என்று வாழ்ந்த எம் இனத்தவர்கள், வெளிநாடுகளில் தமது பலகணியிலும் தோட்டத்திலும் மிளகாய்ச் செடிகளும், கத்தரிக்காய், கறிவேப்பிலை மரங்களும் நாட்டித் தோட்டம் செய்வது கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஜேர்மனியில் ஒரு கிராமத்தில் ஆடையில்லாது நடப்பதற்காகச் செல்கின்றார்கள். அப்பகுதியில் யாருமே செல்ல முடியாது. கற்கால மனிதர்களை நினைவுபடுத்தி சுத்தக்காற்றையும் சூரியனின் கதிர்களையும் பெறுவதற்காகச் செல்வதாகக் கூறி கற்கால மனிதரைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார்கள்.

சுயம்வரம் என்ற பெயரிலே ஒரு பெண் தனக்குத் தேவையான ஆணைத் தெரிவு செய்வாள். ஒரு பெண்ணின் சுயம்வரத்திற்குப் பல இளவரசர்கள் வரி சையாக வருவார்கள். அவர்களில் தனக்குப் பிடித்த மணமகனை மாலையிட்டு அவள் தெரிவு செய்வது இலக்கிய காலம். இதைவிட Bachelor என்னும் ஒரு ஜேர்மனிய தொலைக்காட்சி நிகழ்ச்சியில்

ஒரு ஆண் பல பெண்களுடன் பழகித் தனக்குப் பிடித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காகத் தெரிவு செய்வார். இதேபோன்று தற்போது ஆர்யா எங்க வீட்டு மாப்பிள்ளை என்னும் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல பெண்களுடன் பழகித் தனக்குப் பிடித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகின்றார். அரச வம்சத்தினரிடையே இருந்து வந்த நடைமுறை தற்போது சாதாரண மக்கள் மத்தியிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலக்கியக் கால பெண்கள் சேலைக்கு அணியும் Blouse கச்சை என்று அழைக்கப்பட்டது. காலப்போக்கில் அம்முறை வழக்கொழிந்து வேறுவிதமாக அணியப்பட்டது. ஆனால், இப்போது மீண்டும் அதே வடிவத்தில் Saree Blouse ஐப் பெண்கள் திரும்பவும் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

ஆடைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், விளையாட்டுக்கள், கலைப் படைப்புக்கள், திரையிசைப்பாடல்கள் என்று எல்லாமே பழைமையை நினைவு படுத்துவதுடன் பழைமையை நேசிப்பதாகவும் பழைமைக்குத் திரும்புவதாகவும் இருக்கின்றது.

(வெற்றிமணி சித்திரை மாத இதழ் 2018)



கௌசி

சரஸ்வதி தேவியே வந்து சஞ்சாரம் செய்தாற் போல். இந்த உலகில்,எங்கள் தமிழில், சிங்கப் பெண்களின் திறனை பிறர் கண்களறியச் செய்யும், நவநாகரீக ரசனையும் மிகுந்த பெண்ணே! இந்த சிங்கப் பெண் கௌசி என்பதில் நான் 100 விழுக்காடு உறுதி.இவள் ரிஷபமாய் பாய்ந்து தகர்த்திடுவாள் தன் தடைகளை.

**சிந்தனை சிவவினோபன்.**
தமிழ் எழுத்தாளர்
பேச்சாளர், நடிகர்.

புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள - இங்கிருந்து சென்ற மூத்த தலைமுறையினருக்கு அவர்கள் முன்பு படித்து அறிந்து கொண்ட விடயங்களை ஞாபகப்படுத்துவதான அல்லது இலக்கிய அறிவைப் புகட்டுவனவாக இக்கட்டுரைகள் காணப்படுகின்றன. அங்கு உருவான புதிய தலைமுறையினருக்கு, ஓரளவாவது தமிழிலக்கிய சிறப்புகளை ஆளுமைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை இவை ஏற்படுத் துவனவாக காணப்படுகின்றன.

**பேராசிரியர் செ.யோகராசா எம்.ஏ. பி.எச்.டி**
முன்னாள் மொழித்துறை கலாசார பீடப் பேராசிரியர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

இலக்கியத்தில் வரும் பாடல்களை இன்றைய சமூகத்துடன் தொடர்பு படுத்தி அதனை தொடுக்கும் இடம் பல ஆறுகள் ஒன்றாகும் சங்கமம்போல் அழகாக அருமையாக இருக்கும். இவரது கட்டுரைகளை வாசிக்கும் போது அந்த அழகை அணுவணுவாக அனுபவித்து இரசித்துள்ளேன். அவரின் எழுத்திற்கு (வெற்றிமணி) முதல் வாசகன் நான். நான் வாசித்தபின்தான் அச்சுக்குப்போகும். அதுகூட எனக்கு மகிழ்ச்சிதான். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டப்படிப்பை முடித்தவர். அந்த மலையகச் சூழல் அப்படியே இவருக்கு எழில்மிகு தமிழையும் அள்ளிக் கொடுத்துள்ளது.
துணிச்சல் மிக்க பெண்மணி என்று சொல்லலாம். துணிச்சல் என்று நான் கருதுவது இங்கு பன்முக ஆற்றலை. இந்த ஆற்றல் கட்டுரைகளிலும் விரிந்துகிடக்கிறது.

**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A
பிரதம ஆசிரியர் வெற்றிமணி, சிவத்தமிழ் யேர்மனி - இங்கிலாந்து.

9 789557 377926

**வெற்றிமணி வெளியீடு - 26**

Print@Andra Printers. 0094 21 222 8929